# கர்ப்பக் கிருகம்



கே.எஸ்.ஆனந்தன்

# கர்ப்பக் கிருகம்

கே. எஸ். ஆனந்தன்

வெளியீடு:

மாணிக்கப்
பிரசுரம்
29. கல்யாணி வீதி கொழும்பு. 6

# Karpak Kirukam

by

K. S. Anandan

Price 3-90

First Edition
July 1974
Copy Rights
Reserved
With the Publishers.

Publishers and Sole Distributors:
"Manickam Publishers"
29, Kalyani Road, Colombo-6.

# பதிப்புரை.....

எமது கன்னி வெளியீடான 'நீலமாளிகை, நவீனத்திற்கு கிடைத்த வரவேற்பு எம்மைப் பிர மிக்க வைத்து விட்டது என்றால் மிகையாகாது. வாசகர்கள் எமக்குக் காட்டிய ஆதரவு ஒரு பிர பல எழுத்தாளரின் ஒரு புரட்சிகரமான நாவலை எமது இரண்டாவது வெளியீடாக வெளியிட உதவியுள்ளது என்றே சொல்லலாம்.

பொருளாதார ரீதியில் நூல் வெளியீட்டுத் துறை நமக்குப் பெரும் இலாபத்தை அளிக்கப் போவதில்லை என்ற உண்மை தெரிந்திருந்தும் நமது பிரசுரப்பணி தொடர்வதற்கும் நமது வாசகர்கள்தான் காரணம்.

இலக்கிய உலகம் வளர்ச்சி பெற எங்கள் பணியும் மிக முக்கியமானது என்பதை உணர்த் தியவர்கள் அவர்கள். அவர்கள் முன்னிலையில் பல நூறு இலக்கிய மலர்களை படைத்து மகிழ எங்களுக்கும் வாய்ப்புக் கிடைத்ததையிட்டு மகிழ் கிறோம்.

இந்த வாய்ப்பு நமது பணியை நிறைவேறச் செய்யும் என்பதை வாசகர்களுக்குக் கூறக் கட மைப்பட்டவர்களாவோம்.

பதிப்பாசிரியர்.

# என்னுரை

நாவலுக்கு முன்னுரை எழுதும் சம்பிரதாயத்தினை விரும்பாதவன் நான் ஆனுல் இதை எழுத விரும்பியதற்கு காரணம் இந் நாவலில் வரும் கீதாஞ்சலிக்காகவேயாகும்.

தமிழ் நாவல்கள் பல வெளிவந்து கொண்டிருக்கின்றனவாயினும் சிலவற்றையே வாசகர்கள் விரும்பிப் படிக்கின்றனர். அதற்குக் காரணம் பலவற்றில் இல்லாத புதுமை சிலவற்றில் இருப்பது தான்.

மாறுபட்ட உணர்வுகளுடன் கூடிய மனிதவர்க்கம் காலப் பரிமாணத்தின் வளர்ச்சியில் சில புதுமைகளையும் கொண்டு விளங்குகின்றது. நன்றும் தீதும் வேறுபட்ட வார்த்தைகளானுலும் அவையிரண்டும் ஒரு மனிதனிடமே, அவன் உணர்வுகளோடு சேர்ந்துறைந்துள்ளன. அவற்றை உருப்படுத்திக் காட்ட விளைந்ததன் விளைவு தான் கீதாஞ்சலியின் தோற்றம்.

கண்ணகியையும்—மாதவியையும் ஒரே காவியத்தில் இரு பாத்திரங்களாக வடித்தார் இளங்கோவடிகள்— அவர்களிருவரையும் ஒரே பாத்திரமாக்கி, அன்புருவாயும்—அசுர உணர்வாயும் கீதாஞ்சலியாக்கி 'கர்ப்பக் கிருகம்' உருவாக்கினேன்.

எழுத்தாளன் ஒழுக்கம் பற்றி உபதேசிப்பவனே அன்றி ஒழுக்கக் கேட்டை வர்ணிப்பவனே அல்லன். ஒருவன் சார்ந்துள்ள பண்பாட்டின் பின்னணி, அவன் கொள்கை, அவன்நிற்கும் தளம் ஆகியவற்றிற் கேற்ப சில விடயங்கள் பிழையானதாகத் தோன்றலாம். அவர்கள் அது, இது என்று ஏதாவது பிதற்றவும் செய்யலாம். அவர்களுக்காகப் 'பயந்தால் சில புதுமையான மாற்றங்களைச் செய்யத் தவறியவர்களாவோம். பின்னர் வேற்று மொழியில் வந்து அதைக் கண்டு புகழ்பாடும் இழிநிலையிலில்லாது சற்று துணிவுடன் 'கீதாஞ்சலி' என்னும் ஓர் புதிய வார்ப்பை தமிழ் நாவல் உலகில் புகுத்தவே 'கர்ப்பக் கிருகம்' கட்டி எழுப்பினேன்.

எனது படைப்புக்களுக்கு வாசகர்கள் காட்டும் பேராதரவுக்கு நன்றி கூறும் அதே வேளையில் 'மாணிக்கப் பிரசுர' மாக வெளிவரும் இந் நவீனத்துக்கும் உங்கள் ஆதரவு கிடைக்கும் என்று நம்புகின்றேன்.

ஈழத்து இலக்கிய உலகில் தோன்றியுள்ள மாற்றம், அதாவது சஞ்சிகைகளின் தோற்றமும் வளர்ச்சியும், புத்தக வெளியீடுகள் யாவும் ஓர் மறு மலர்ச்சிக் காலத்தின் தோற்றுவாய் என்றே கூற வேண்டும். ஆகவே எனது நாவலை விருப்புடன் பிரசுரிக்க முன் வந்த 'மாணிக்க பிரசுரம்' நிறுவனத்தினர்க்கு என் நன்றி உரித்தாகட்டும்,

கே. எஸ். ஆ.

நினைப்பு. இருமுறை பல்கலைக் கழகப் புகுமுகப் பரீட்சைக் குத் தோற்றி சித்தியடையாது போனதால் அது பற்றிய கவலையில் தங்கை சிந்தனைவசமாய் தனியே யிருந்து சதா கவலைப்படுவதாகத் தான் சுவர்ணாவால் நினைக்கமுடிந்தது. அவளும் அப்படித்தானே முன்பு நினைத்தவள். தன்னைப் போன்றே தங்கையும் என எண்ணினாள்.

பொதுவாக ஒவ்வொருவரும் தன்னைப் போல பிறரை எண்ணுவதில்லை. அப்படி எண்ணினாலும் தீய காரியங்களில் நினைப்பார்களேயன்றி திறமையிலோ, நல்ல காரியங் களிலோ தன்னைவிட மற்றவரை உயர்வாக எண்ண முடிவ தில்லை. ஆனால் தங்கையைப் பொறுத்தமட்டில் அவளை எந்தவிதமாகவும் நினைக்க சுவர்ணாவால் முடியவில்லை.

அதே வேளையில் அக்காவின் வஞ்சனையற்ற, வெள்ளை உள்ளத்தின் பேதமையை எண்ணி தன்னுள்ளே நகைத்துக் கொண்டாள், கீதாஞ்சலி. அவளுடைய உள்ளம் அக்காளுக் காக வேதனையடைந்தது ஒருபுறம். மறுபுறம் அவள் உட லும் உள்ளமும் தன்னிலை மறந்து பந்த பாசங்களுக்கப்பால் சென்று விடும். அப்போதைக்கு அவளுக்குத் தேவையானது, உடலையும் உள்ளத்தையும் வருத்தும் அக்கினி உணவுகளை அணைத்துக் குளிர்விக்கும் மாறுபட்ட ஒரு சக்தியே. உரிமை யுடன் அவற்றைப் பெற்றுக்கொள்வதால் அக்கா அது பற்றிய சிந்தனையை மறந்திருப்பதாகவே கீதாவுக்குத்தோன் றிற்று.

மாலை நான்கு மணியிருக்கும் பிள்ளைகள் பள்ளிக்கூடத் தால் வந்துவிட்டனர். 'சித்தி சித்தி' இருவரும் கீதாஞ் சலியை அணைத்துக்கொண்டே துள்ளிக் குதித்தனர்.

'அக்கா இவர்களுக்கு ரீ கொண்டுவந்து கொடேன்' என்றாள் கீதாஞ்சலி.

'நீ தாண்டி இவன்களுக்கு செல்லம் கொடுக்கிறாய். வர வர குழப்படி கூடிப்போச்சு' என்றாள் சுவர்ணா.

இதற்கிடையில் போன் மணி ஒலிக்கவே சுவர்ணா சென்று தொலைபேசியில் அழைத்தது யாரென விசாரித்தாள்.

'ஹலோ.........'

'ஓ...... நீங்களா? என்னத்தான், வீட்டுக்குவரும் நேரத்தில் போனை தூக்கி வைத்துக்கொண்டே......'

'சுவர்ணா இன்று எனக்கு 'ஓவர்டைம் வேக்' இருக்கு.'

'அப்படியா?'

'ஆமா. ஆகவே இரவு ஒரு மணியளவில் தான் வீட்டுக்கு வருவேன். நீங்கள் சாப்பிட்டுவிட்டுப் படுங்கள்'

'இதைச் சொல்லத்தான் இவ்வளவு அவசரப்பட்டீர்களாக்கும். போங்கத்தான்.'

'அசடு... அசடு... அப்புறம் வந்து...ம்...'

'சீ... நீங்கள் பொல்லாத மனிதர். எந்த நேரமும் உங்களுக்கு...'

'ஏ... லூஸ்... சேரியோ' என்று கூறிவிட்டு போனை வைத்தான்.

'என்னக்கா யார் போனில் பேசியது ஒரேயடியாய்...?

'வேறு யாரு, உங்கள் அருமை மைத்துனர்தான். இன்று ஓவர் டைமாம். அது தான்...'

'ஓ... அத்தானா...' என்று கூறியவளுக்கு மனதில் ஒரு வித ஆனந்தம்.

அவளுடைய அக்காளின் கணவன் அருமைநாயகத்துக்கு திருகோணமலைத் துறைமுகத்தில் வேலை. அங்கு அவர்கள் வேலைக்கு வந்த பின்பு இரவு வேளையில் அனேகமாக கிழமையில் இரண்டு மூன்று நாட்களுக்கு மேலதிக வேலை கிடைக்கும். அப்படி அவனுக்கு இரவு 'ஒவர்டைம்' கிடைத்தால் கீதாஞ்சலிக்கு ஒரே சந்தோஷம்.

யாழ்ப்பாணத்தில் பிறந்து பல்வேறு ஊர்களிலும் தொழில் நிமித்தமாக குடியிருக்கும் குடும்பங்களில் ஒன்றுதான் அருமைநாயகம் குடும்பமும். சுவர்ணாவுக்கும், கீதாஞ்சலிக்கும் மூத்தவள் ஒருத்தி கொழும்பில் இருக்கின்றாள். மூன்று பெண்களுக்கும் தாய் தந்தையராக இருந்தவர்கள் இவ்வுலக வாழ்வை முடித்துக்கொண்டபோது சுவர்ணாவுக்கு திருமணமாகி ஆறுமாதம்.

பெற்றோர் இறந்த பின்பு மூத்த அக்காள் வீட்டிலும், மற்ற அக்காள் வீட்டிலும் மாறி மாறி இருந்து வந்தாள் கீதாஞ்சலி. அநேகமாக சுவர்ணா வீட்டிலேயே அதிகமாக அவள் தங்கியிருந்தாள்.

சுவர்ணாவும் சரி அவளுடைய அக்காளும் சரி தங்கள் சகோதரிக்கு சிறுகவலையும் ஏற்படாதவாறு நடந்துகொண்டனர். அவள் மனதில் துன்பத்தின் நிழல்கூடப் பிடிக்கப்படாது என்பது அவர்களுடைய எண்ணம். அதேபோன்று அவளும் இருந்து வந்தாள்.

ஆனால் அவர்களிருவரும் அறிந்து கொள்ளமுடியாத ஓர் ஏக்கம், தொற்றுநோய்போல, அவளை அரித்துக்கொண்டிருந்தது. அடிக்கடி தனிமையில் இருப்பதும், எதையோ நினைத்து அவள் ஏங்குவதும் கல்வியின் நிமித்தமாக இருக்கலாம் என்றுதான் அவர்களால் நினைக்கமுடிந்தது.

கடல் ஆழம் கண்ட பெரியோர்கள் கூட பெண்களின் மன ஆழம் காண முடியாது என்று அறியாமலா கூறி வைத்தார்கள்?

உடன் பிறந்த அக்காள், தங்கைகளாயிருந்தால் என்ன, பிள்ளையும் தாயுமாயிருந்தால் என்ன, ஒருவர் மனதை இன்னொருவர் அறிந்து கொள்ளும் சக்தி எவருக்குமே இருந்ததில்லை. அதிலும் பெண்களுக்கு......?

இதே நினைவுதான் பிரகாஷின் மூளையையும் குழப்பிக் கொண்டிருந்தது. எவ்வளவோ நெருங்கிப்பழகிய அவனிடம் கூட புனிதம் ஒன்றும் சொல்லிக்கொள்ளவில்லையே. இரகசியமாக மறுநாள் அவளுக்கு திருமணப் பதிவு நடைபெறப் போகின்றதாம். அவளுடைய கூடப்பிறந்த சகோதரனே கூறிவிட்டுப் போகின்றான்.

கோயிலுக்குள் நுழையும் பொழுது நிர்மலமான மனத்துடன் தானிருந்தான். அங்கே வந்த புனிதத்தின் அண்ணன் பாஸ்கர் கூறிய விடயம் அவன் மனதில் மூன்றுமாத காலமாகக் கட்டி எழுப்பியிருந்த சிந்தனைக் கோட்டைகளைத் தகர்த்தெறிந்து விட்டது.

'என்ன தம்பி மனதை எங்கோ அலைபாயவிட்டு விட்டீர்கள் போலிருக்கே' என்று கேட்டுக்கொண்டே விபூதியை நீட்டியபடி நிற்கும் கோயில் குருக்களைப் பார்த்ததும் சுய உணர்வடைந்தவனாய் கை நீட்டி விபூதியைப் பெற்றுக் கொண்டான்.

மனச் சாந்தி வேண்டி இறைவனை வணங்க வந்தவிடத்தில் மன உளைச்சலே அதிகமாகி விட்டிருந்தது பிரகாஷிற்கு. நினைவுகள் கனத்த மனத்துடன் கோயிலை விட்டு வெளியே வந்த பிரகாஷ் நேரே கடற்கரை நோக்கிச் சென்றான்.

அன்று வெள்ளிக்கிழமையாகையால் கடற்கரையில் சனசந்தடியில்லை. கரையோரம், தூரத்துக்குத் தூரம் சிலர் இருந்தனர். அங்கிருந்தவர்களைப்பற்றியோ, யார் இருக்கின்றார்கள் என்பது பற்றியோ அவன் அக்கறை காட்டவில்லை.

தனிமையான ஓர் இடத்தில் அமர்ந்துகொண்டான். ஆனாலும் அவன் மனதில் அமைதியில்லை. கடந்துவிட்ட நாட்கள் மங்கலாகத் தெரியும் நிழற்படம் போல அவன் நினைவுத் திரையில் விரிந்தது.

திருகோணமலைக்கு மாற்றலாகிவந்து ஒரு கிழமைக்குள் புனிதம் அவனுடன் நெருங்கிப் பழக முற்பட்டாள். ஒரே வகுப்பில் இரு பிரிவிற்கும் இருவரும் வகுப்பு ஆசிரியர்கள். அந்த முறையில் இருவரும் நெருங்கிப் பழகினர். எடுத்த தற்கெல்லாம் 'மிஸ்டர் பிரகாஷ் பிரகாஷ்' என்று அவனையே வலம் வந்துகொண்டிருப்பாள் புனிதம்.

அவள் பெண்களுக்குள் புனிதமானவள் என்றுதான் அவனால் எண்ணத் தோன்றியது. அளவுடனும், அடக்கத்துடனும், தேவைக்கு மட்டும் மற்றவர்களோடு பேசும், பழகும் அவளுடைய எளிய சுபாவம் அவனை வெகுவாகக் கவர்ந்தது.

அவன் மனம் புனிதத்துடன் மானசீகமாக உறவாடியது. அவள் எழிலார்ந்த மேனி, பார்ப்போரை வசீகரிக்கும் காவிய நயனங்கள், முல்லை மொட்டு அடுக்கினாற்போன்ற மோகனப் பல் வரிசை, அவற்றை அணைத்து வெடித்துப் பிளந்திருப்பது போன்ற சிவந்த அதரங்கள், முன்னழகும், பின்னழகும், அவன் மனவானில் பெண்மையின் புனிதத் தன்மையே புனிதம் என்ற உருவில் வந்து சுழன்று கொண்டிருந்தது.

அவள் பேசும் போதெல்லாம் நெளித்து, சுளித்து சொற்களை உச்சரிக்கும் உதட்டின் அழகில் மனதைப் பறி கொடுத்து மயங்கி நிற்பான் பிரகாஷ். ஒரு நாள் மாலை கல்லூரி முடிந்து மாணவ மாணவிகள் வெளியேறிக்கொண்டிருந்தனர். புனிதமும் புறப்பட ஆயத்தமானாள். ஆனால்... அவளுடைய அழகு நயனங்கள் வாடிய மலர்கள் போல இமைகள் சேர்ந்து காணப்பட்டன.

''மிஸ் புனிதம்'' என்று அழைத்துக் கொண்டே அருகில் சென்றான் பிரகாஷ்.

'ஓ... நீங்களா?' என்று திரும்பியவள் அப்படியே சோர் வுற்று அவன் மார்பில் சாய்ந்தாள்.

## அத்தியாயம் 2

மனித வாழ்வில் ஒருவர் நினைப்பதற்கு மாறான செயல்கள் நடப்பது தான் அநேகமாக நாம் அறிந்தவை. ஆனால் சிலவேளைகளில் சில நாம் நினைப்பது போன்றே நடந்து விடுவதும் உண்டு. அப்படி நினைத்திராத வேளையி லும் சில எதிர்பாராதவை மனிதனை ஆச்சரியத்தில் மூழ்கடித் துவிடும். அப்படித்தான் அன்றைய நிகழ்ச்சியால் பிரகாஷ் திகைப்படைந்து போனான்.

''மிஸ் புனிதம்-புனிதம்'' என்று அவளை மார்புடன் தாங் கியவாறே அழைத்தான்.

ஒரே ஒரு நிமிடம் தானிருக்கும் - தன்னை சரிப்படுத்திக் கொண்டு திடீரென விழித்து எழுந்தாள். அவளைப் பற்றிய படியே 'என்ன நடந்தது, ஏன் புனிதம்...?, என்றான்.

அவள் தலையைக் குனிந்து கொண்டாள். அவள் உடல் நிலை அப்படியான ஒரு சந்தர்ப்பத்தை அன்று கல்லூரியில் அதுவும் எதிர்பாராத ஒருவனடியில் அவனைத் தலைகுனிய வைத்து விட்டது. ஒரு நிமிடம் தாமதித்திருந்தால் அப்ப டியே மேசைமீது படுத்துவிட்டு எழுந்திருப்பாள். ஆனால்...!

'என்ன நடந்தது......கார் பிடித்துக் கொண்டு வரவா?' பதறினுன் பிரகாஷ்.

''வேண்டாம் மிஸ்டர் பிரகாஷ். பக்கத்திலேதானே வீடு. சும்மா... இப்படி எப்போதாவது மாதத்தில்...''

வார்த்தைகளை அரைகுறையாக நிலத்தைப் பார்த்துக் கொண்டே அவள் கூறியபோது பிரகாஷிற்கு விஷயம் விளங்கிவிட்டது.

''ஓ... மைகாட் நான் என்னவோ ஏதோ என்று பயந்து போனேன்'' என்று கூறிய பிரகாஷ் சிரித்துக்கொண்டே முன் சென்ருன்.

அன்றிலிருந்து இரண்டு மூன்று நாட்கள் அவள் கல்லூரிக்கு வரவில்லை. மூன்று நாட்களுக்குப் பின்பு வந்தபோது பிரகாஷிடம் கதைப்பதற்கே அவளுக்கு வெட்கமாக இருந்தது.

ஆபத்தில் உதவி செய்தபோது எதுவிதமான நினைவுகளுக்கும் இடமின்றியே அவளை மார்பில் தாங்கியபடி அவளுக்கு உதவ முனைந்தான். ஆனுல் பின்பு அவளைப்பற்றி நினைக்கும் பொழுது அவன் உள்ளத்தில் சொல்லவொண்ணுத ஓர் விசித்திர இன்ப உணர்வு பிறக்கும். அந்த நினைவு அவனை பேரானந்தக்கிறக்கத்தில் ஆழ்த்தி விடும்.

ஒருநாள் மாலை கல்லூரி முடிந்ததும் வீட்டுக்குப் போகப் புறப்பட்டுக் கொண்டிருந்தான் பிரகாஷ். ''மிஸ்டர் பிரகாஷ்'' என்ற இனிய குரல் அழைத்தது.

''ஜேஸ்...''

''அன்று உங்களுக்கு சிரமம் கொடுத்து விட்டேன் இல்லையா?'' என்ருள் புனிதம்.

"அது சிரமம் என்று நீங்கள் கருதியிருக்கலாம்......... ஆனல்......"

"ஆனல் என்ன..." என்று அவள் கேட்டபோது அவளுடைய வாளிப்பான கன்னங்கள் குங்குமவர்ணம் படர்ந்து மின்னின. அவற்றில் செழுமையில் மனதைப் பறிகொடுத்து மயங்கி நின்றான் பிரகாஷ். அந்த ஆர்வத் துடிப்பில் "நான் உங்களை அடைய விரும்புகின்றேன். அதற்காக உங்களை என் ஆயுள் பூராவும் இதயத்தில் வைத்து பாதுகாக்கவும் தயார். ஒரு நிமிடம் உங்களைத் தாங்கி உதவியது நான் செய்த பாக்கியத்தில் மிகச் சிறந்த ஒன்று' என்று கூற நினைத்தான் ஆனல் இயல்பான அவன் பண்பு அவனைத் தடுத்தாட் கொண்டு விட்டது.

"மிஸ் புனிதம், என்மீது தாங்கள் சாய்ந்து கொண்டதால் உங்கள் புனிதத் தன்மைக்கு..."

"மிஸ்டர் பிரகாஷ், நான் சும்மா தான் கேட்டேன். நீங்கள் தவருகக் கருதி விட்டீர்கள் போலிருக்கிறது. உண்மையில் நான் உங்களை அப்படி எதுவும் தவருக நினைத்தது கூடக் கிடையாது' என்று கூறும்போது கண்கள் கலங்கிவிட்டன.

'புனிதம் நான் கூட சும்மா வேடிக்கையாகத்தான் சொன்னேன். பிளீஸ் எக்ஸ்கியூஸ்மி' என்றான். "நீங்கள் மன்னிப்புக் கேட்கக் கூடாது' என்று கூறிச் சிரித்தாள்.

பனியில் நனைந்த மலர்கள் போல கண்ணீரில் நனைந்த விழிகள் காட்சியளித்தன. முகை வெடித்து விரிந்தன போல் சிரிக்கும் பொழுது வெண்பற்கள் அழகாகக் காட்சி தந்தன. பூரண நிலவில் மழைத் துளிகள் விழுந்தன போன்று அவள் அழகு முகம் ஒளிவீசியது—முறுவலித்துக் குளிர்ந்தது.

அதன் பிறகும் எத்தனையோ சுவையான சம்பவங்கள். அவன் மனதில் நினைவுத்திரை விலகியபோது அருகே யாரோ அமர்ந்திருப்பதை உணர்ந்தான்.

கடற்கரைக்கு அவன் வந்த பொழுது மேற்கு வானப் பிராந்தியம் சிவப்பு நிறமாக விளங்கியிருந்தது. ஆனால் அந் நிறம் மறைந்து கீழ்வானப் பொய்கையில் முழுமதி பிரவேசித்திருந்தாள்.

நீண்டு பரந்த கடற்பரப்பையும், பார்போல நிலவில் பளிச்சிட்ட கரைமணல் வெளியையும் உற்று நோக்கி விட்டு தனக்கு அருகே அமர்ந்திருக்கும் உருவத்தைப் பார்த்ததும் அவன் உள்ளம் துணுக்குற்றது.

சந்தேகமேயில்லை. அவள் கீதாஞ்சலிதான் என்பதை உணர்ந்து கொண்டான் பிரகாஷ். அவளைப் பலமுறை கோணேசர் ஆலயத்தில் சந்தித்திருக்கின்றான். அவள் யார்? எங்கிருக்கிறாள் என்பதைப் பற்றியும் அறிந்திருந்தான்.

மீண்டும் கரை நெடுகப் பார்வையைச் செலுத்தினான். கண்ணுக் கெட்டிய தூரம் வரைக்கும் ஓரிருவரைத் தவிர வேறு ஆட்கள் கிடையாது. தன்னருகே ஓர் பருவப் பெண் அமர்ந்திருப்பது பெரும் ஆபத்தை, அபகீர்த்தியை வருவிக்கும் என உணர்ந்த அவன் எழும்பினான்.

'சார்'

'ஜேஸ். வட்யூ வோன்ற்?'

'உங்களுடன் தனிமையில் பேசவேண்டும் என பல நாட்களாக எதிர்பார்த்திருந்தேன். இன்று தான் சந்தர்ப்பம் கிடைத்தது. உங்களிடம் ஒரு சிறு வேண்டுகோள்.'

'என்ன வேண்டும் என்றுதான் கேட்டேனே'

'கொஞ்ச நாட்களுக்கு ரியூசன் சொல்லித் தர முடியுமா உங்களால்'

'யாருக்கு ரியூசன்?'

'எனக்குத்தான்...'

'ஓ... வெறி சொறி... எனக்கு நேரம் இல்லே. வேறு ரீச்சர் வேணுமென்ருல் அரேஞ் செய்து தாரேன்' என்று கூறி விட்டுச் சென்ருன் பிரசாஷ்.

தனியே இருந்த அவள் மனம் அவன் பின்ஞலேயே சென்றது. பெண்களைக் கண்டதும் பல்லிளித்துச் சிரிக்கும் ஆண்கள் வர்க்கத்தில் ஒருவன் தானே அவனும். அவன் ஏன் அவளைக் கண்டாலும், கதைத்தாலும், ஒதுங்கி நடக்கின்ருன்? அவனுடைய அலட்சியம் அவள் உள்ளத்தில் அவன் மீது தீராத ஒரு பற்றை ஏற்படுத்தியது.

அவள் உள்ளம் அவனுக்காக ஏங்கியது. அவனுடைய உள்ளத்தை எப்படியும் கவர்ந்து விட வேண்டும் என்று திடசங்கற்பம் பூண்டாள். அதேவேளை பூரண நிலவின் பொன்ஞெளிக் கதிர்களைக் கண்டு பொங்கிக் குமுறும் கடலலைகள் போன்று அவள் உணர்வு அலைகள் கொந்தளித்துக் குமுறின. அவள் நினைவில் பிரகாஷ் கலந்து நின்ருன். அதே வேளையில் அவள் உடலை அரித்துக் கொண்டிருக்கும் உணர்வுகள் விஞடிக்கு விஞடி பெருகிக் கொண்டிருந்தன.

கடற்கரை பக்கமாகவே சுவர்ணுவின் வாடகை வீடுருந்தது. வீட்டின் பின்பக்கம் வந்து பார்த்தால் கடல் தெரியும். கணவனுக்கு ஓவர்டைம் என்பதால் ஏழு மணிக்கே பிள்ளைகளையும் தூங்கவைத்து விட்டு தானும் படுத்துக் கொண்டாள் சுவர்ணு.

ஆஞல் வீட்டின் பின்புறம் வந்து கடற்கரையைப் பார்த்துக் கொண்டு நின்ற கீதாஞ்சலி அங்கே வந்து தனிமையில் உட்கார்ந்திருந்த பிரகாஷைக் கண்டுவிட்டாள். அக்கா படுத்துத் தூங்கியதும் அவனிருக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்து விட்டாள்.

ஒரே ஒருமுறை பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சைக்கு சந்தர்ப்பம் இருந்தது. அதற்காக ரியூசன் கேட்டாவது தேறிவிடலாம் என்று அவள் மனதில் ஓர் நம்பிக்கை சுடர் விட்டது. அது மட்டுமன்றி பிரகாஷை கோணேசர் ஆலயத்தில் சந்தித்த

நாள் முதல் அவள் உள்ளத்தில் ஓர் சபலம். அவனுடைய முகவசீகரமும், எடுப்பான தோற்றமும் எந்தப் பெண்ணின் மனதையும் கலங்கடிக்கும் சக்தி பெற்றிருந்தது. ஆனால் அவன் பெண்களிடமிருந்து ஒதுங்கிப் பழகும் சுபாவம் அவன் மீது அவளையுமறியாத பாசத்தை தோற்றுவித்தது. அவனிடம் தன் முடிவைத் தெரிவிக்க விரும்பினாள். அதற்கு ஒரு வழி ரியூசன் மூலம் அவனை அணுகுவது என்று முடிவு செய்தாள். அதன்படிதான் அன்று துணிந்து அவனை நெருங்கிக் கேட்டு விட்டாள்.

ரியூசனுக்கு சம்மதிக்காதது பற்றி அவளுக்கு கவலை இல்லை. அதே வேளை மறு கதையைக்கூட விரும்பாது எழுந்து ஓடும் அவன்மீது அவளுக்கு ஏன் அத்தனை விருப்பு. அவளுக்கே புரியாத ஒரு இனமறியாத தவிப்பு.

அதே வேளையில் நடந்து கொண்டிருந்த பிரகாஷின் மனம் கீதாஞ்சலிக்காக வருந்தியது. தாய் தந்தையற்றபெண். கல்விக்காகத்தானே கேட்டாள். தான் அப்படி சொல்லி விட்டு வந்தது தவறு என்று தன்னைத்தானே கடிந்து கொண்டான்.

தெருவிளக்கின் வெளிச்சத்தில் கைக்கடிகாரத்தைப் பார்த்தான். மணி எட்டுப் பத்து. கால்கள் வீட்டை நோக்கி முன்னேறின.

மனதில் புனிதத்தின் நினைவுகளுடன் கீதாஞ்சலி பற்றிய பரிவும் சேர்ந்து கொண்டதால் மேலும் மனப்பழு அவனை அழுத்திக் கொண்டிருந்தது.

எவ்வளவுக்கு மனதைப் புனிதமாகவும், கவலையற்றதாகவும் வைத்துக்கொள்ளப் பாடுபடுகின்றானோ அவ்வளவுக்கு கவலைகளும், களங்கமும் வந்து சேர்ந்துவிடுகின்றன. அவற்றை அவன் உணராமல் இல்லை. அதே வேளையில் அவற்றை உதறிவிட அவன் முனைந்தாலும் அவை தானாகத் தேடி வந்து ஒட்டிக்கொள்கின்றனவே.

துன்பம் மனிதனுடைய அழையாத விருந்தாளி. மனிதன் விரும்பி அழைத்தாலும் சரி அழையாவிட்டாலும் சரி தான் விரும்பும் போது வந்து குடிபுகுந்து விடுகின்றது. பின் அது மனித மனத்தின் தன்மையைப் பொறுத்தே ஆட்சி செய்கின்றது.

சிந்தனைப் பழுவேறிய மனத்தினனாய் தெருவைப் பார்த்துக் கொண்டு சென்றவனுடைய செவியில் 'மிஸ்டர் பிரகாஷ்' என்ற வார்த்தைகள் வீணையின் நரம்புகளில் பிறக்கும் ஸப்தஸ்வரங்கள் ஒன்று சேர்ந்து ஒலிப்பது போல ஒலித்தன.

அவனுடைய அனுமதியின்றியே கால்கள் நின்றன. தலைநிமிர விழிகள் ஒலிவந்த திசையை நோக்கின.

தெருவுக்குச் சமீபமாக முன்வாசற்கதவடியில் நின்று கொண்டிருந்த புனிதமே அவனை அழைத்தாள்.

'அழைத்தீர்களா?'

'ஆமாம் உள்ளே வாருங்கள் மாஸ்டர்'

மகுடியின் நாதத்தில் கட்டுப்பட்ட பாம்புபோல அவள் சொல்லுக்கு மதிப்பளித்து உள்ளே சென்றான்.

'உட்காருங்கள் மாஸ்டர்'

அவன் உட்கார்ந்ததும் மற்றக் கதிரையில் தானும் உட்கார்ந்து கொண்டாள் புனிதம்.

இருவரும் மௌனமாக அமர்ந்திருந்தனர். அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள் புனிதம். அவன் நிலத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

'என்ன மாஸ்டர் பேசாமலிருக்கின்றீர்கள்?

'ஓ...... என்ன பேசுவது? எனக்கு இந்த உலகத்தைப் பற்றியும், இதில் நடப்பவை பற்றியும், எதை நம்புவது? எதை விடுவது? என்று யோசித்துக் கொண்டே வந்தேன்......'

'திடீரென இப்படி ஆராய்ச்சியில் ஏன் இறங்கினீர்கள் மாஸ்டர்?

'எல்லாம் எல்லாருக்கும் சொல்லிக்கொண்டா செய்கின்றனர்.'

'மாஸ்டர் என்னை மன்னித்து விடுங்கள். உங்களிடம் கூடச் சொல்ல முடியாது போய்விட்டது. உண்மையில் திருமணத்தைப் பற்றி நான் நினைத்தேயிருக்கவில்லை. இருந்தாற் போல இந்த முடிவைச் சொன்னபோது எவ்வளவோ கூறினேன். ஆனால் எதிர்க்கும் ஆற்றல்... எனக்கில்லை. மாஸ்டர் நீங்கள் என்னை...... தவறாக... நினைக்க...... மாட்டீர்களே' அவள் குரல் தழுதழுக்க விழிகள் நீர் மல்கின.

'புனிதம் நான் ஏன் உங்களைத் தவறாக நினைக்கிறேன். நீங்கள்...'

இருவரிடையேயும் மௌனம் வேலி போட்டது. எதுவித மான பேச்சும் பின்னர் எழவில்லை. ஒருவர் மனதை ஒருவர் அறிய முயன்று கொண்டிருந்தனர்.

அதே வேளையில் கடற்கரை மணலில் வீட்டையே பார்த்துக் கொண்டிருந்த கீதாஞ்சலியின் தோளை ஒரு கை பலமாக இறுக்கியது.

திரும்பிப் பார்த்துவிட்டு 'நீங்களா' என்றாள்.

'வேறு யார் என்று நினைத்தாய்?

'ஒருவருமில்லை' என்று கூறிவிட்டு அவன்மீது சாய்ந்து கொண்டாள்.

அவளுடைய உடலை அரித்துக்கொண்டிருந்த உணர்வுகளுக்கு சாந்தியளிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தபோது தன்நிலை மறந்துவிட்டாள் கீதாஞ்சலி.

அடுத்த நிமிடம் இருவரும் வீடுநோக்கி நடந்தனர். முன் கதவை திறந்து கொண்டு செல்லவேண்டிய அவசியமேயில்லாதவாறு கீதாஞ்சலியின் அறையுள் நுழைந்தனர்.

நிலவின் நிழலிநின்றும் ஒதுங்கி இருளின் ஆதிக்கத்துட்பட்ட நான்கு சுவர்களுக்குள் சென்று கதவைப்பூட்டிக்கொண்டனர்.

## அத்தியாயம் 3

பேச முடியாத சந்தர்ப்பங்களில் மனிதன் தன்னையே மறந்து மனதுக்குத் தன்னை அடிமையாக்கிக் கொள்ளுகின்றான். மனதுக்கு அடிமைப்பட்டு தன்னைத்தானே கட்டுப் படுத்திக் கொள்பவனுடைய வாழ்க்கையில் சந்தர்ப்பங்கள் அவனை பேசாமடந்தையாக்கி விடுகின்றன.

பிரகாஷ்—புனிதம் இருவரும் பேசாமடந்தைகளாக ஒருவரை ஒருவர் மாறி மாறிப் பார்த்தவாறு இருந்தனர்.

புனிதம் சாதாரண ஏழைப்பெண்ணல்ல பணக்கார வீட்டுப் பெண். அவள் சம்பாதித்துத்தான் அவர்கள் குடும்பம் சீவிக்கவேண்டுமென்றில்லை. படித்தவள், தான் கற்ற கல்விக்கு பயன் கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஆசிரியைத் தொழில் பார்த்தாள். அவளுக்காக ஒரு தனி வாடகை வீடு. அவளோடு அண்ணன் பாஸ்கரும், வேலைக் காரப் பெண் ஒருத்தியும் இருந்தனர்.

அவளுடைய தாயும் யாழ்ப்பாணத்திலிருந்தாள். அவர்கள் பெரும் பணக்காரர்கள். தாயின் செல்வாக்கு வீட்டில் மேலோங்கி நின்றதால், அவளிட்டதே சட்டம். மீனாட்சியம்மாளை அவர்கள் குடும்பத்தின் சர்வாதிகாரி என்று தான் சொல்லவேண்டும்.

'பிரகாஷ்'

'ம்... ஓ... ஐ... ஆம் சொறி' என்று தான் அதுவரை மௌனமாயிருந்ததற்கு மன்னிப்புக் கோரினான் பிரகாஷ்.

காலையில் ஊருக்குப் போறன் நாளை. இரவு...'

தெரியும் புனிதம், கடவுள் உனக்கு நல்ல வாழ்வை அளிக்கட்டும்' என்றான்.

'வாழ்வில் எவ்வளவோ நினைக்கின்றோம். நினைப்பவை யாவுமா நடந்துமுடிந்துவிடுகின்றன. உண்மையில் நான் இந்தத் திருமணத்துக்கு விருப்பமில்லாமலே பெற்றவர்களின் கட்டளைக்கு என் வாழ்வை அர்ப்பணிக்கின்றேன்' என்ருள்.

அவளுடைய காவிய நயனங்களில் எதையோ பறி கொடுத்த சோகத்தின் பிரதி பலிப்பு. சொல்லிலே எதையோ இழந்து விட்ட துன்பம்.

திருமணம் என்பது இருமனம் விரும்பி ஏற்கும் ஒன் றல்லவா? இவள் ஏன் மனம் விரும்பாத ஒன்றைத் தானே ஏற்பதாகச் சொல்கின்ருள். விருப்பமில்லாத ஒருவனுடன் தாயின் கட்டளையின் பேரில் வாழ்க்கையைத் தொடங்கு வதற்கு தன்னையே தானம் செய்கின்ருளா? ஏன் அப்படி? சில வேளை என்னையே அவள் விரும்புகின்ருளா? அவளிடமே இதைக் கேட்டுவிட்டால்... அவன் மனதில் உதித்த நினைவு கள் மனதுடனேயே சங்கமமாகி விட்டதேயன்றி கேள்வி யாகத் தோன்றவில்லை. ஆனுலும் அவள் கேட்ட கேள்விக்கு பதில் கூறியாக வேண்டுமே.

மனதில் தோன்றியதை மறைத்துக்கொண்டே 'நீங்கள் பணக்காரர்கள். பணத்துக்காகவும், பொருளுக்காகவும் மனம் விரும்பாதவற்றையும் ஏற்றுக்கொள்ளவேண்டியவர்க ளாக இருக்கின்றீர்கள், ஆனுலும் வாழ்க்கை என்பது பிடித்தமில்லாத ஒன்றை...'

'பிரகாஷ்! நீங்கள் என் உள்ளத்தைப் புரிந்து கொள் ளாமல் பேசுகின்றீர்கள். நான் பணத்தையோ, பொரு ளையோ, பதவியையோ விரும்பவில்லை. ஆனுல் பெற்றவள் உரிமையுடன் கேட்கிருள் கடமை என்றளவில் என் விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பாற்பட்ட ஒன்றை...'

'நான்... வீட்டுக்குப்போக வந்த இடத்தில் உங்களைச் சந்தித்ததற்காக மகிழ்ச்சியடைகின்றேன். சந்தோஷமாகச்

சென்றுவாருங்கள்' என்று கூறிவிட்டு எழுந்தான்.

'மிஸ்டர் பிரகாஷ், நான் உங்களோடு பழகியகாலம் மிகவும் குறைவு என்றாலும் என்மனதில் நீங்காத இடம் பெற்றுவிட்டீர்கள். என்றும் உங்களை என்னால் மறக்கமுடியாது' என்று கூறிவிட்டு தலையைக் குனிந்துகொண்டாள்.

அவளைப் பார்க்கவே அவன் தயங்கினான். தன் மனதைத் திறந்து அவளிடம் காட்டினால் என்ற நினைவு உதித்த போது 'புனிதம் ஒன்று சொல்லட்டுமா? என்றான்.
'என்ன? சொல்லுங்கள்' என்று அவனைப் பார்த்தாள்.

'வாழ்க்கை புனிதமானது. விருப்பமில்லாத ஒன்றை கடமையென்ற பெயரில் ஏற்றுக்கொண்டு வாழ்வையே நரகமாக்கி விடாதீர்கள். திடமாக விருப்பமில்லை என்றால் மறுத்துவிடுவதுதானே?'

ஓர் வறண்ட சிரிப்பை வலிந்து சிரித்தாள் புனிதம். அவள் மனம் தன் நிலையை எண்ணி வருந்தியது. அவனுக்கு எப்படிச் சொல்லி விளங்கவைப்பது என்று திண்டாடியது.

'மிஸ்டர் பிரகாஷ். என் அன்னையின் நிலைபற்றி உங்களுக்குத் தெரியாது. பணக்கார வீட்டிலே பிறந்து வறுமை, கஸ்டம் என்றால் என்னவென்றே தெரியாது வாழ்ந்தவள். அத்துடன் இருதயப் பலஹீனம். அதிர்ச்சிகளை தாங்கும் சக்தி அவளுக்குக் கிடையாது. நான் எவ்வளவோ கூறினேன். திட்டவட்டமாக முடியாது என்றாள். அவளை இழக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டாலும்... நீங்களே இதே நிலையில் இருந்தால் என்னசெய்வீர்கள் என்று சொல்லுங்கள்?'

'சொறி மிஸ் புனிதம். நான் வருகின்றேன். கடவுள் உங்களுக்கு அருள் புரியட்டும்' என்று கூறிவிட்டு விடை பெற்றுச் சென்றான்.

அவள்மீது அன்பு வைத்ததே பெரிய தவறு என்று அவன் தன்னைத்தானே கடிந்துகொண்டான். அதே வேளை யில் அவன் அந்தராத்மா விழிப்புற்றது.

'பிரகாஷ் உண்மையைச் சொல். அவள் மீது அன்பு வைத்தது தவறு? அவள் உன் மீது அன்பு வைத்ததுதான் தவறு? இல்லை! இல்லை! அன்பு வைத்தது, வைப்பது தவ றில்லை. அதே அன்பை ஆசையின் அடிப்படையில் வைப் பது தான் தவறு! தவறு!'

அன்புக்கும், ஆசைக்கும் பொருள் வேறு என்பதை அவனுடைய பண்புள்ளம் பகுத்த போது சுயநலம்கொண்ட மனம் மறுத்தது. ஆசைக்கும், அன்புக்கும் வித்தியாசம் இருப்பினும் ஆசை என்ற அத்திவாரத்தின் மேல் கட்டுப் படுவதுதான் அன்பு. அந்த அத்திவாரம் ஈடாட்டம் கண் டால் அன்பு........?

இருமன இயல்புடன் நல்லது தீயதை ஆராய முற்பட்ட வன் நல்லதின் பக்கமே தீர்ப்பு வழங்கப்பட்டதும் அமைதி பெற்றான். உண்மையான, தூய்மையான அன்பு ஒருவித பக்தி. அந்தப் பக்தி வைராக்கியமே காதல். இவற்றை ஆசைக்கோ, வெறிக்கோ, உணர்ச்சிக்கோ மேலுறை யாகக் கொள்ளாவிட்டால் அவை புனிதம் வாய்ந்தவை யாகவே இருக்கும் என முடிவு கொண்ட மனத்தினனாய் விரைந்து நடந்தான்.

அதேவேளையில் கீதாஞ்சலியின் நிலைகரை அடைந்த கட லலை போலாகிவிட்டது. கட்டிலில் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தாள்.

நேரம் பதினொரு மணி. வெளியே அறைக்கதவு தட்டப் படும் சத்தம் கேட்டு எழுந்துவந்த கீதாஞ்சலி முன்கதவைத் திறந்தாள்.

'அக்கா எழும்பவில்லை' என்று கேட்ட அருமைநாயகத்துக்கு 'இல்லை' என்று கூறிவிட்டு திரும்பினாள்.

அவள் அறைக்குள் செல்லும் பொழுது தான் எழுந்து ஓடிவந்தாள் சுவர்ணா. அவள் முன்ஹோலிலுள்ள மணிக்கூட்டைப் பார்த்து விட்டு, 'அட நேரத்துடனே வந்து விட்டீர்களா? நான் ஒரு மணிக்குத்தான் 'எலாம்' வைத்து விட்டுப் படுத்தேன்' என்றாள்.

'நீ நன்றாய்ப் படுத்துத் தூங்கு. அவள் ஏதாவது நினைக்கட்டும்' என்றான் அருமைநாயகம்.

'அவள் ஒன்றும் நினைக்க மாட்டாள். நீங்கள் ஏன் வேண்டாத கற்பனைகள் செய்கின்றீர்கள்?'

'தாயே! கலகம் வேண்டாம் சாப்பாட்டைப்போடு தூக்கம் வருகுது' என்றான்.

'உடையை மாற்றிக்கொண்டு வாருங்கள். நான் ஆயத்தப்படுத்துகின்றேன்' என்று கூறிவிட்டுச் சமையலறைப் பக்கம் சென்றாள்.

★ ★ ★ ★

கீழ்வானம் வர்ணக் கலவைகளால் கோடுகள் தீட்டிய திரைபோல அழகோடு விளங்கியது. இடைக்கிடையே கருங்குன்றுகள் போல் கருமுகில்கள், அவை நகருங் குன்றுகள் போல காற்று வீசும் திசையில் நகர்ந்துகொண்டிருப்பது ஓர் ரம்மியமான காட்சிதான்.

இவை எதுவும் புனிதத்தின் மனதில் மகிழ்ச்சியை உண்டுபண்ணவில்லை. யாழ் நகர் நோக்கி விரைந்துகொண்டிருந்தது அந்தப் புதுக்கார். அதனுள் அவள் உடலிருந்தாலும் உள்ளம் திருமலை நோக்கி பின்சென்றுகொண்டிருந்தது.

இரவு பூரா அவள் தூங்கவில்லை. அவளுக்கு பிரகாஷின் நினைவே மனதில் புரண்டுகொண்டிருந்தது. நான்

திருமணத்திற்குச் சம்மதித்து விட்டேன் என்றதும் அவர் வேதனைப்படுகின்றார். என்னை விரும்புகின்றார் என்று சொல்லாமலே வேதனைப்படுகின்றார். நான் என்ன செய் வேன்? இறைவா இந்தத் திருமணம் ஏதாவது ஒரு விதத் தில் சுலபமாகவே தடைபட்டுவிட்டால்?

அவள் மனம் எத்தகைய சிந்தனைப் பிரயாணத்திலீடு பட்டிருந்தாலும் முடிவில் பிரகாஷின் நினைவுடனே தானிருந்தது.

'பிரகாஷ் உங்களைக் கணவனாக அடைபவள் அதிஷ்ட சாலிதான். நீங்கள் ஏழை என்பதால் உங்களை நான் வெறுக்கவில்லை. அன்னையின் சொல்லை மீறமுடியாத அள வுக்குப் பாசம் வைத்துவிட்டேன். ஆனல்...' என்று அவள் தன் மனதுடனேயே சமாதானம் செய்து கொண்டாள்.

'என்ன புனிதம் ஏதும் பேச மாட்டேன் என்று பிடி வாதம் பண்ணுகிறாய்? ஓ... கல்யாணப் பெண்ணல்லவா கற்பனைக் கனவுகள் காண்கின்றாயோ......' என்றான் கார் ஓட்டிக்கொண்டிருந்த பாஸ்கர்.

'அண்ணா... என் மன வேதனையை மேலும் கிளறாதே. எனக்கு இந்தக் கல்யாணமே பிடிக்கவில்லை.'

'ஏன்?'

'......' பதில் இல்லை.

'மாப்பிள்ளை சீ. ஏ. எஸ். மாமாவின் மகன். நல்ல அழகன். ஏன் பிடிக்கவில்லை?'

'என்னவோ எனக்குப்பிடிக்கவில்லை.'

'அப்புறம் ஏன் சம்மதித்தாய்?'

'ஏனோ சம்மதித்தேன். அது எனக்கே புரியாத ஒன்று. சும்மா என்னைத் தொந்தரவு செய்யாதே.'

'பைத்தியம், உன்வேலைகளே இப்படித்தான். ஊரோடு வேலை மாற்றம் பெறுவோம் என்றபோது வேண்டாம் 'ரிங்கோ' நல்ல இடம் என்றாய். கல்யாணம் விருப்பமில்லை என்கிறாய். அம்மா சொல்லிவிட்டாளே என்பதற்காகச் செய்யப்போவதாகக் கூறுகின்றாய். உனக்கு என்னடி மூளை மாறிப் போச்சா? வரட்டுக்கும் அம்மாவிடம் சொல்லி...'

'அண்ணா' என்றாள். அவள் விழிகள் அருவியென நீரை உகுத்தன.

'புனிதம், புனிதம், என்னால் உன்னைப் புரிந்துகொள்ளவே முடியவில்லையே.'

'சிலர் மீது நாம் வைக்கும் பாசம் எம்மைப் பைத்திய மாக்கி விடுவதுண்டு. இல்லையா?'

'என்னவோ எனக்கு என்ன தெரியும்?'

'அம்மா என் மீது உயிரையே வைத்திருக்கின்றாள். அவளுக்கு 'ஹாட் றபிள்' இருக்குத்தான். தன் தம்பி மகனை மாப்பிளையாக எடுக்கவேண்டுமென்று திட்டம் போட்டிருந்தாள். அது தெரிந்து தான் நான் ஊரோடே வேலை வேண்டாம் என்று அன்னையைப் பிரிந்து இங்கு வந்தேன். ஆனால் எதை மறந்திருக்க, ஒதுக்க இங்கு மாறி வந்தேனோ அதையே அம்மா அவசரமாகக் கட்டிவைக்க முற்படுகின்றாள். அவள் கூற்றுக்கு மறுப்புத் தெரிவித்தேன். என்ன கூறினார் தெரியுமா?'

'என்ன...என்னசொன்னார்?'

'நான் உயிருடன் இருப்பது உனக்குப் பிடிக்கவில்லை என்றால் உன் இஷ்டப்படி நடந்துகொள். இல்லையெனில் காலையில் புறப்பட்டு வா என்றாள்.'

'உண்மையாகவா?'

'ஆமண்ணா. ஆனால் நீ எதுவும் இதில் பேசக்கூடாது. அவமீது நான் வைத்த அன்பைப் பணயம் வைத்து என்னை பலஹீனமாக்கிவிட்டாள்......அண்ணா...!'

'என்ன புனிதம்?'

'நீ எனக்கு ஒரு சத்தியம் செய்து கொடுப்பாயா?'

'சத்தியமா?'

'ஆமாம் அண்ணு'

'உன் விருப்பப்படி அம்மா செய்யாது விட்டாலும் நான் உனக்கு மாருகச் செய்வேனு? என்ன சத்தியம்?'

'நான் கதைத்த எந்த விடயமும் அம்மாவிடம் சொல்ல மாட்டேன் என்று' எனக் கூறியபடியே கையை அவன் முன் நீட்டினுள்.

அவள் மனதில் எதை நினைத்துக்கொண்டு அப்படிக் கேட்கிருள் என்பதை உணர்ந்த போது கண்ணீர் பார்வையை திரையிட அவள் கரத்தில் தன் கரத்தை உறுதிப்படுத்தினுன்.

★ ★ ★ ★

காலை எட்டுமணி நாற்பது நிமிடம் என்பதை கைக்கடிகாரத்தில் பார்த்ததும் கல்லூரிக்குப் புறப்பட ஆயத்தமானுன் பிரகாஷ். அவன் மனம் சற்று தெளிவடைந்திருந்தாயினும் முதல்நாளிரவுச் சம்பவங்கள் அவன் மனதில் சுழன்று கொண்டிருந்தன.

'பெண்கள் ஆசையின் மறு அவதாரங்கள். ஆசையே பெண்ணுருவில் பிறப்பு எடுப்பதாக யாரோ எழுதியதையும் படித்த ஞாபகம். அவன் மனம் மீண்டும் கலங்கிய குட்டையாகி விட்டது. ஒரு பட்டதாரி ஆசிரியனைவிட சீ. ஏ. எஸ். என்றுல் அவன் எப்படி ஊதாரியாஞலும் உயர்ந்த பதவியல்லவா. பெண்கள் பண்புக்கா இடமளிக்கிருர்கள்? இல்லை இல்லை. பதவிக்குத்தான்!' என நினைத்தபடியே அறைக்கு வெளியே வந்தான்.

வெளியே அவனை எதிர்பார்த்து ஒருபெண் நின்றிருந்தாள். அவளை அவன் முன்பு எங்கும் பார்த்ததாக ஞாபகம் இல்லை.

'நீ யார்'? என்ருன்.

நான் புனிதம் அம்மா வீட்டில் வேலை செய்பவள். அம்மா அதிகாலையிலேயே புறப்பட்டுவிட்டாங்கள். அவங்க...'

'அவர்களுக்கு என்ன?' என்று பதறினான் பிரகாஷ்.

## அத்தியாயம் 4

மாலை வெய்யிலின் செம்மஞ்சள் நிறம் கடற்கரையை பொன்னொளி பிரவாகத்தில் திகழச் செய்தது. சனிக்கிழமை யாகையால் ஓரளவுக்கு சனசந்தடியாக இருக்கவே பிரகாஷ் கரையை விட்டு ஒதுங்கிச்சற்று அப்பால் சென்று ஒரு தென்னை மரத்துடன் சாய்ந்து கொண்டு இருந்தான்.

அவன் மனம் ஓரளவு சாந்தி பெற்றிருந்தது. காலையில் புனிதம் வீட்டு வேலைக்காரப் பெண் கொண்டு வந்து கொடுத்த கடிதம் அவனை ஓரளவுக்கு மாற்றி விட்டதென்றே கூற வேண்டும்.

புனிதம் வீட்டு வேலைக்காரப் பெண் வந்தபோது தான் பட்ட அவஸ்தையும், ஏக்கமும் நினைக்கவே அவனுக்குச் சிரிப்பு வந்தது.

'என்னங்க ஐயா நான் சொல்வது என்னென்றால் அம்மா ஒரு கடிதம் தந்து உங்களிடம் கொடுக்கச் சொன்னாங்க'' அந்த ஒரு விடயத்தை அவள் சொல்வதற்கிடையில் என்னவோ ஏதோ என்று தான் பதறியதைக் கண்டு அந்த வேலைக் காரப் பெண்ணே சிரித்துக்கொண்டு சென்றாள்.'

அந்தக் காட்சியை நினைக்கும் பொழுது அவனுக்குச் சிரிப்பு வந்தது.

அவளுக்கு அதாவது புனிதத்துக்கு என்னதான் வந்தால் அவனுக்கு என்ன. ஒருவனுக்கு மனைவியாகப் போகின்றவள் புனிதம். அதன்பின்பு அவளுக்கு வருவதெல்லாம் கணவனுக்கே உரிய ஒன்று. அப்படியான நிலையில் உறவோ, உரிமையோ இல்லாத அவளுக்காக அவன் ஏன் துடிக்க வேண்டும்?

இவற்றை பிரகாஷ் உணராமல் இல்லை. ஆனாலும் உறவு, உரிமை என்பவற்றிற்கு அப்பாற்பட்ட ஓர் மகா ரகசியம், உறவு, பந்தம் என்ற முறையில் அன்பு செலுத்துவது உண்மை யான அன்பாயிருக்காது. அது எல்லாம் ஓர் காரணமாக வந்தது. அதற்கு மேல் எல்லாம் கடந்து ஏற்படுகின்ற அன்பு இருக்கே அதுதான் பாசம். அந்தப் பாசம் பல காலப் பழக்கத்தால் இல்லை பார்த்த உடன் கூடத் தோன்றிவிடும். பார்க்காமலே பிறந்து விடக் கூடியது.

இத்தகைய ஒரு நிலைதான் பிரகாஷ்-புனிதம் இடையே மலர்ந்த பாசம். ஆனல் மனித மனம், தான் சிலவற்றை வைத்து அனுபவிக்கவிரும்புவது இயற்கைதானே! ஆனல் அது ஒருவன் கைக்கு மாறுகின்றது என்று தெரிந்தும் அதன்மீது மாசுமறுவற்ற ஓர் உன்னத பற்றை ஏற்படுத்திப் பூஜிக்கின்றோம் அல்லவா இதுதான் உண்மையான அன்பு, காதல், எல்லாம்.

ஆனல் இன்று காமம் என்ற வெறி உணர்வுக்கு காதல் என்று முலாம் பூசி கயமைத்தனம் கொண்டாடுபவர்களே மலிந்து விட்டார்கள்.

'ஒருவித வெறி உணர்ச்சிக்கு காதல் என்ற முலாம் பூசி பகுத்தறிவு பெற்ற மனிதவர்க்கம் அதை ஒரு கட்டுத்திட்டத்திற்குள் அடக்கி வைத்திருக்கிறது' என மாப்பஸான் கூறிய கருத்தை நினைத்த பிரகாஷ் ஒரு முறைக்கு பல தடவை அவற்றை மீண்டும் மீண்டும் நினைவு கூர்ந்து தெளிந்தான்.

'சார்' அருகே கேட்ட மென்னொலி அவன் தனிமையை நிலைகுலையைச் செய்யவே நிமிர்ந்தான்.

'ஓ நீங்களா?'

'ஜேஸ் சார், நான் உங்களுக்குத் தொந்தரவு கொடுக்கின்றேன் என நினைக்காதீர்கள். பிளீஸ் நான் நேற்றுக் கேட்ட விடயம் பற்றி......' முடிக்காமலே நிறுத்தினுள் கீதாஞ்சலி.

''மிஸ்... உங்கள் பெயரைக்கூட மறந்துவிட்டேன்... வந்து...''

'கீதாஞ்சலி'

'ஓ... ஜெஸ்... கீதாஞ்சலி. நீங்கள் சிறுபிள்ளையல்ல நான் உங்களுக்கு ரியூசன் சொல்லித்தர, நானும் இளவல். நீங்கள் பருவப் பெண். அப்புறம் ஊரவர்கள் கண்டபடி ஏதும் கதைக்க இடம் வைக்கக் கூடாது பாருங்கள். ஆகவே...'

'சார் அதோ அக்காவே வந்துவிட்டார்கள். உண்மையில் எனக்கு... கொஞ்சம் மனம் வைத்து...... சார்... நான்...'

அவர்களுக்கிடையில் சுவர்ணாவும் வந்து சேர்ந்து கொண்டாள். சுவர்ணாவிடம் கீதாஞ்சலி காலையிலேயே தன் திட்டத்தைக் கூறியிருக்கின்றாள். அவள் இஷ்டப்படி ரியூசனுக்கு வேண்டியதெல்லாம் செய்வதாக அக்காவும், அவள் கணவனும் சம்மதம் அளித்து விட்டதுடன் அக்காளே நேரடியாக அங்கு வந்துவிட்டாள்.

சுவர்ணா வந்ததும் வராததுமாக 'உங்களைப் பற்றி கேள்விப்பட்டோம். மறுக்காமல் இந்த உதவியைச் செய்து தர வேண்டும். இதுதான் கடைசித் தடவை......' என்றாள்.

'சரி...சரி...ஆனால்...'

'சம்பளம் தானே நீங்கள் கேட்டபடி தரலாம்.'

"சம்பளம் பற்றி நான் சொல்லவரவில்லை. மாலையில் தான் நேரம் கிடைக்கும்'' என்றான்.

''ஆல்ரைட் சார்'' என்று கூறிவிட்டு இருவரும் சென்றனர்.

சட்டைப் பக்கட்டிலிருந்த புனிதத்தின் கடிதத்தை எடுத்துப் படிக்க வேண்டும் போலிருந்தது பிரகாஷிற்கு. உடனே கடிதத்தை எடுத்து சில குறிப்பிட்ட இடங்களை மட்டும் படித்தான்.

''உங்கள் மனம் போல என்னைவிட அழகான மனைவி ஒருத்தி கிடைப்பாள். உங்களிடம் நான் வைத்த அன்பு அழி

யாத உண்மை அன்பு. ஆகவே நான் உங்களை கணவன் ஸ்தானத்தில் வைக்கவில்லை. நினைவு இருந்தது; ஆனாலும் கண்ணனை வழிபட்டு அவனையே மணாளனாகக் கொண்ட கோதையல்லவே. நான் வெறும் புனிதம். ஓர் சாதாரண பெண். தாங்கள் பூஜிக்கத் தகுந்தவரேயன்றி...பிரகாஷ் உண்மையில் என்னுள்ளத்துள் வாழும் - நான் பூஜிக்கும் தெய்வம் நீங்கள். பலனின்றி அன்பு செய்வதும் உதவுவதும், தெய்வம் என்று அறிந்தேன். ஆனால் மனித உருவில் தெய்வமாக உங்களைச் சந்தித்தேன். ஆட்பட்டு விட்டேன். என் அன்பு புனிதமானது. நான்உங்கள் மீது கொண்ட காதல் சாதாரண காதல் அல்ல அளவிடற்கரிய பக்தியே!

அவளுடைய கடிதத்தின் ஒரு பகுதியை வாசித்த பின்பு கீழே உள்ள பந்தியையும் அவன் கண்கள் வலிந்து சென்று பார்த்தன.

வெறும் ஆடம்பரத்துக்கும், பதவிக்கும் என்னை அடிமையாக்கிவிடவில்லை. என்னைத்தன் உதிரத்தில் வைத்துப் பேணிப் பாதுகாத்து வளர்த்த அன்னைக்குச் செய்யும் நன்றிக் கடனாக என்னை நான் தாரை வாக்கின்றேன். ஆனால் கணவனாக வரப் போகிறவரை ஏமாற்றவில்லை. அவர் என் கணவர். கணவன் தெய்வம் என்று கூறுகின்றார்கள். எல்லோரும் அப்படி எண்ணத் தகுந்தவர்கள்...என்பது ஆராய்ச்சிக்குரிய விடயம். அவர் எப்படிப்பட்டவரானாலும் ஒத்து வாழ்வது என் கடமை, ஆனால் தங்களுக்கு உரிய இடம் என் இதய பீடத்தில் என்றும் புனிதமாகவே இருக்கும்.

உங்களை என்றுமே மறக்க முடியாத

புனிதம்.

அவன் விழிகளில் நீர் சுரந்தன. இதயவாசலில் ஆயிரம் பேர் வருவார் ஆயிரம் பேர் போவார். எல்லோருமா நிலைத்து நிற்கின்றனர்? ஆயிரத்தில் ஒருவராவது நிலைத்து நிற்பது அபூர்வம் தான். ஆனால் ஆயிரத்தில் ஒருத்தியாக லட்சத்தில் ஒருத்தியாக, கோடியில் ஒருத்தியாக தன்னை நிலைநிறுத்தச் செய்து விட்டாள் புனிதம்.

இரவு எட்டு மணிவரையில் அந்த இடத்திலேயே தன்னை மறந்த நிலையில் அப்படியே உட்கார்ந்து விட்டான் பிரகாஷ்.

அதே வேளையில் யாழ்நகரில் புனிதத்துக்கு திருமணப் பதிவு முடிந்து விருந்து நடந்து கொண்டிருந்தது. புனிதத்தின் கணவன் சுந்தரேசன் ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தான். அவனைப் பார்த்ததும் புனிதத்தின் நினைவு அலை சுழன்றது.

மனிதமனம் ஒரு குரங்கு என்று அறியாமலா சொன்னோர்கள். எவ்வளவுதான் மனதை அடக்கி ஆண்டாலும் அது தாவிப்பாய்ந்து விடுகின்றது.

நாட்கள் பல நகர்ந்து விட்டன. மாதம் கூட ஒன்று ஆகி விட்டது. பிரகாஷ் ரியூசன் ஆரம்பித்து, அன்று கீதாஞ்சலி 'ஒரு மாதம் முடிந்தது சார் உங்கள் பீஸ்' என்றபோது பிரகாஷிற்கே ஒரு மாதம் எவ்வளவு கெதியாகப் போய்விட்டது, என்று நினைப்பு எழுந்தது.

ஆரம்பத்தில் பாடங்கள் படிக்கும் போது ஒரு மாணவிக்குரிய பயபக்தியுடன்தானிருந்தாள் கீதாஞ்சலி. ஆனல் நாளுக்கு நாள் அவள் எளிமையோடு பழக ஆரம்பித்திருந்தாள்.

சிறுவயது முதலிலே செல்லமாக வளர்ந்து விட்டவள் கீதாஞ்சலி. அவள் ஒன்றை அடைய வேண்டும் எனத் தீர்மானித்துவிட்டால் எப்படியேனும் அதை அடையாமல் விடமாட்டாள்.

அதே வழியில் முதல்ரியூசன் மாஸ்டர் என்றளவில் பிரகாஷைஅணுகி அவனுடைய அன்பைக் கவர்ந்து விட்டாள். 'சார் சார்' என்று எடுத்ததற்கெல்லாம் சிறுபிள்ளை போல குழைந்துஅவனுடன் வேற்றுமையின்றி பழக ஆரம்பித்திருந்தாள்.

ஆரம்ப நாட்களில் சற்று ஒதுங்கியவன் அவளை வெகுளி எனவே எண்ணிவிட்டான். அவளுடைய இனிய சுபாவம்,

காந்தம் போல மற்றவர் மனதை வசீகரிக்கும் கள்ள விழிகள். அவன் உள்ளத்தின் உறுதியை குலைத்துவிடும் அம்புகளாகப் பாயும் அவள் பார்வையை நேருக்கு நேர் சந்திக்கக் கூசினான்.

புனிதத்துடன் ஒப்பிட்டு நோக்குகையில் புனிதத்தின் குணஇயல்புகள் இவளிடம் இருக்கவில்லை என்பது உண்மை. ஆனால் உடலழகைப் பொறுத்தமட்டில் புனிதத்திலும் மேம்பட்டு விளங்கினாள். ஆனால் புனிதத்தின் முகத்தில் இல்லாத ஒரு சோகம், ஏக்கம், முகத்தில் தோன்றி அவளை ஓர் தொற்று நோய்க் காரி போலக் காட்டிக் கொண்டிருந்தது.

ஒரு நாள் மாலை அவள் அக்கா சுவர்ண வீட்டில் இல்லாத வேளை. ரியூசனுக்காக பிரகாஷை எதிர்பார்த்து இருந்தாள் கீதாஞ்சலி.

மாலை ஐந்தரை மணிக்கு சோர்வுடன் வந்து சேர்ந்தான் பிரகாஷ். வேண்டும் என்றே தன்னை அலங்கரித்துக் கொண்டவள் போன்று எழிலுடன் காட்சியளித்தாள் கீதாஞ்சலி.

அவளை ஓர் கவிஞன், அல்லது எழுத்தாளன் அந்தத் தோற்றத்தில் கண்டிருந்தால் ஓர் காவியமே தீட்டியிருப்பான். கந்தர்வக் கன்னியோ, பனிப்பதுமையோ என்று சொல்ல முடியாது விளங்கியது அவள் தோற்றம்.

அவளை பார்த்த மாத்திரத்தில் ஓர் கணவனைப் போன்று தன் மனதில் தோன்றிய இனிய கற்பனைக் களிப்பில் மிதந்து விட்டான் பிரகாஷ். மறுகணம் தன்னை சுதாகரித்துக் கொண்டான்.

அவள் தன்னுடைய மாணவி; தான் ஓர் ஆசிரியன் என்ற நினைவு வந்ததுமே ரசனைக்கு வேலி போட்டுக் கொண்டே மனதில் உறுதியை வரவழைத்துக் கொண்டான்.

மனிதன் முயன்ருல் தேவளுகலாம். ஆனுல் அவன் தேவ னல்லன். சமூகத்தின் ஊழல்களை அதிகரிக்கும் நஞ்சுக்கிருமி களோடு கிருமிகளாகச் சேராமல் ஒழுக்கத்தின்பால் தமது மன உழைச்சல்களைக் களைந்து விட்டு திருந்தி நடக்க முற்பட லாம். ஆனுல் இயற்கையின் உணர்வு மனிதனின் மனதை சல னப்படுத்தாதிருக்க முடியாது.

மின்னல் மின்னுவதையோ, முழக்கம் முழங்குவதையோ, மழை பெய்வதையோ, தடைபண்ணி விட முடியுமா? அதே போல மனித மனதில் இயற்கையாகத் தோன்றும் உணர்வு களின் தோற்றத்துக்கு தடைவிதித்துவிட முடியுமா?

பிரகாஷ் முற்றும் துறந்த முனிவனே, அன்றி வாழ்க்கை யை வெறுத்துவிட்ட ஞானியோ அல்லன். அண்டமா முனிவர் களே அடங்கிவிட்ட சிற்றின்பக் குளத்தில் சாதாரண பகுத் தறிவு வாதியான பிரகாஷ் முன்—பின் சிந்தனையுடன் நடக்க முற்பட்டாலுயினும், அளவுக்கதிகமாக அவள் செய்த உப சரணைகளால், பணிவுகளால், அவன் மனதில் இலகுவாக இடம் பெற்று விட்டாள் கீதாஞ்சலி.

முன்பு ஒருமுறை புனிதத்தின் அன்பு வெள்ளத்தில் மூழ் கித் திளைத்தவன் பிரகாஷ். மனதுடனேயே நின்றுவிட்ட பாசம் வாழ்க்கை வரை, கட்டில் வரை, துணைவரவில்லை. ஆனுல் கீதாஞ்சலி அவனை தினம் தினம் தன் அருகில் வைத்தே ஆட்கொண்டு விட்டாள்.

அன்று பாடநேரம் போக மீதி நேரம் கதையிலேயே கழிந்து கொண்டிருந்தது. சுவர்க்கடிகாரம் எட்டு மணி அடித் தபோது தான் விழிப்புற்ருன் பிரகாஷ்.

'ஓ... மணி எட்டாகி விட்டது. இன்னமும் உங்கள் அக்கா வரவில்லையே' என்ருன்.

'அக்கா சினிமாவுக்கு போய்விட்டாள் நான் உங்கள் வரவுக்காகவே காத்திருந்தேன்'.

'ம்... அப்படியா? கீதா என் வாழ்வில் இப்படி ஒரு சந்தர்ப்பம் ஏற்படும் என நான் நினைக்கவில்லை'.

'நான் அப்படியில்லை.'

'என்ன?'

'உண்மைதான் சார்'

'கீதா பாடநேரம் போக எங்கள் மிகுதி வேளையில் சார் என்று என்னை... நீ சார் என்று என்னை அழைக்கும் போது என் மனம் துணுக்குற்றுப் போகின்றது' என்றான்.

'பிரகாஷ்—பிரகாஷ்' என்று அழைத்தவாறே அவன் மார்பில் சாய்ந்தாள் கீதாஞ்சலி.

'கீதா...'

'பிரகாஷ், உங்களை கோணேஸ்வரத்தில் முதல் நாள் சந்தித்த போதே என் மனம் உங்களை விரும்பிற்று... நான்...' அவள் கரங்கள் கழுத்தில் மாலையாக விழுந்தன.

அடுத்த கணம் அவன் எதிர்பாராத ஒரு விருந்து அவனுக்குக் கிடைத்து விட்டது. அவன் மின்சாரத்தாக்குதலுக்குள்ளானவன் போல அவளைப் பார்த்தான்.

'முத்தமே காதலின் முத்திரை என்றார் ஓர் ஆங்கிலக் கவிஞர்' என்றாள்.

'ஓ... மை... காட்' என்று அவன் கூறி முடிக்கும் பொழுது வாசலில் சப்பாத்தின் ஒலி கேட்டது. அவள் அணைப்பிலிருந்து விலகுவதற்குள் அங்கே வந்தவனைக் கண்டதும் பிரகாஷின் உடல், உள்ளம் இரண்டுமே ஆட்டம் கண்டுவிட்டது.

# அத்தியாயம் 5

தனக்குரிய நன்மைகளையே எண்ணும் பண்பு மனிதரிடத்தில் மட்டுமின்றி விலங்கு முதலிய தாழ்ந்த உயிரினங்களிடத்தும் காணப்படுகின்றது. ஆனால் மனிதன் தன் நன்மையுடன் பிறர் நன்மையையும் சேர்த்து விரும்புகிறான். இது என்றும் எல்லா வேளையும் பொருந்தும் ஒன்றல்ல. சிலரிடம் சிலவேளை காணப்படும் பண்பு.

திடீரென அங்கு வந்து நின்ற சுவர்ணாவின் கணவன் அருமைநாயகத்தைக் கண்டதும் தன் நிலைமையை மட்டும் உணரவில்லை. தன்னுடன் சேர்த்து கீதாஞ்சலிக்கும் என்ன நடக்குமோ என எண்ணி வேதனைப்பட்டான். ஆனால் அங்கே—

''ஓ...ஐ...ஆம் சொறி'' என்று கூறிவிட்டு திரும்பிச் சென்றான் அருமைநாயகம்.

''கீதா...'' என்று அவளைப் பார்த்தான் பிரகாஷ்.

'பயப்படாதீர்கள். அவர்களும் ஆரம்ப நாட்களில் இப்படித்தானே நடந்திருப்பார்கள். நீங்கள் போய் வாருங்கள் பிரகாஷ்' என்றாள்.

அவன் வெளியேறும் வரை வெளி விறாந்தையில் பத்திரிகை படித்துக்கொண்டிருந்தான் அருமைநாயகம்.

'ஏன் நீங்கள் படத்துக்கு போகவில்லையா?' என்று கேட்டுக் கொண்டே வெளியே வந்தாள் கீதாஞ்சலி.

'எனக்கு படத்துக்கு போக பிரியமில்லை. சுவர்ணாவையும் குழந்தைகளையும் விட்டு விட்டு நண்பன் ஒருவனைச் சந்தித்துக் கொண்டு இங்கே...'

'அது சரி இங்கே நடந்த விடயம்'

'சுவர்ணவிடம் சொல்ல மாட்டேன்' என்று கூறிவிட்டுச் சிரித்த அருமை நாயகத்துடன் சேர்ந்து சிரித்தாள் கீதாஞ்சலி.

மறுநாட் காலை கல்லூரிக்குச் சென்றான் பிரகாஷ். அவனுக்கு வீட்டிலிருந்து ஓர் தந்தி வந்திருந்தது. அதைப் பிரித்துப் படித்த பிரகாஷ் உடனே கல்லூரி அதிபரிடம் லீவுக்கு எழுதிக்கொடுத்துவிட்டுப் புறப்பட்டான்.

அவன் பஸ்ஸில் சென்றுகொண்டிருந்தானாயினும் அவன் மனம் அவனுக்கு முன் சென்று வீட்டிலிருக்கும் தாயையும் தங்கையையும் பார்த்துக்கொண்டது.

பிற்பகல் இரண்டுமணிக்கே வீட்டுக்கு வந்து சேர்ந்து விட்டான் பிரகாஷ். அவனுடைய ஊர் பளை. தொழிலுக்காக பெற்ற தாயையும், ஒரே தங்கையான சுகுணாவையும் விட்டுப் பிரிந்து திருமலையில் தங்கியிருந்தான். தாய்க்கு சுகயீனம் என்று சுகுணா தந்தி கொடுத்திருந்ததைப் பார்த்து விட்டே ஓடோடியும் வந்திருந்தான்.

'வந்திட்டியாப்பா. உன்னைக் காணாமல் கண்ணை மூடி விடுவேனோ என்று பயந்துகொண்டேயிருந்தேன்' என்றாள். அவன் தாய் புவனம்.

'அம்மா, அப்படிச் சொல்லாதீர்கள். நீங்களிருந்து தங்கையின் திருமணத்தைப் பார்த்துவிட்டுத்தான் போகப் போகின்றீர்கள்' என்றான்.

''அண்ணா, நீங்கள் வேறு அம்மா மனதில் அந்த ஞாபகத்தை தூண்டாமலிருங்கள். ஏற்கனவே இதே பல்லவியைத்தான் அம்மா பாடிக்கொண்டிருக்கின்றாள்''

'ஏன் அம்மா நான் ஒருவன் இருப்பதை மறந்து போனீர்களா?' என்ருன் பிரகாஷ்.

'இல்லையப்பா உன் மாமன் தன் பிள்ளைக்குத் தானே இவளைக் கட்டி வைப்பதாகக் கூறினன். இப்ப என்னடா வென்ருள் உன்னுலே பத்தாயிரம் ரொக்கம் தரமுடியுமா? என்று கேட்டான்.'

'நீங்கள் என்னம்மா சொன்னீர்கள்.'

'எவ்வளவோ கேட்டேன். மறுத்துவிட்டுப் போய்விட்டான். வேறு எங்கோ கல்யாணப் பேச்சு...' என்று கூறி விட்டு இருமினுள்.

'அம்மா, நான் மாமாவைப் பார்த்து விசாரித்துக் கொண்டுவாறேன்' என்று கூறிவிட்டு எழுந்து சென்ருன்.

அரைமணி நேரம் கழித்து முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டுவந்தான் பிரகாஷ். அவனுடைய இதயம் புண்ணுகிப் போயிருந்தது. அவன் கூட மாமனுடைய மகனுக்கும் தங்கை சுகுணுவுக்கும் திருமணம் நடக்கும் என்ற துணிவினுல் அந்த நினைவையே மறந்து போனுன். ஆனுல் அன்றைய சம்பவம் அவன் மனதில் பெரும் பாருங்கல் ஒன்றைத் தூக்கிவைத்துவிட்டது.

'என்னப்பா...போன காரியம்?' என்ருள் தாய் புவனம்.

'உங்களிடம் என்ன சொன்னுரோ அதையே தான் எனக்கும் சொன்னுர். நீங்கள் ஏனம்மா இதற்காகப் பயப் படுகின்றீர்கள் நான் இருக்கின்றேன். தங்கைக்கு ஒரு நல்ல இடத்தில் கல்யாணம் செய்து வைக்கமாட்டேனு, என்ன?' என்ருன் பிரகாஷ்.

'அம்மா சுகுணு' என்ருள் புவனம்.

அவளால் மீண்டும் ஏதும் பேச முடியவில்லை. அவன் கையில் கொடுத்தாள்.

'என்னம்மா இது? இப்ப...' என்ருன் பிரகாஷ்.

'பிரகாஷ். உண்மையில் என்னை அவர் கூப்பிடுகின்ருர். நான் இனி...பிரகாஷ்...உன் தங்கையை...நீ...கை... விட்டு விடாதேயப்பா......'

'அம்மா. அம்மா' தமயனும்,, தங்கையும் சேர்ந்து குரல் எழுப்பினர். என...க்...கு கொஞ்சம் தண்ணீர்...' என்ருள்.

உடனே ஓடிச் சென்று பால் கொண்டுவந்தாள் சுகுணு அவளை மார்புடன் தூக்கி அணைத்தவாறே பாலைப் பருக்கிஞன் பிரகாஷ்.

'அதோ...அவர்...உங்கப்பா... என்னை.' என்றவள் மறு வார்த்தை ஏதும் இன்றி விழிகளை மூடிக்கொண்டாள்.

மூடிய விழிகள் மீண்டும் திறக்கவே இல்லை. கதறினர் பிரகாசும், சுகுணுவும்.

சுகுணு அண்ணன் பிரகாசுடன் திருமலைக்கே குடிவந்து விட்டாள். தாயுடைய கடன்களை நிறைவேற்றியபின் ஊரில் தங்கையைத் தனியே விட்டு விட்டு வர விரும்பாத பிர காஷ் அவளையும் அழைத்துக்கொண்டு வந்துவிட்டான்.

பணத்தை மதிப்பவர்களும் தமது சுய கௌரவங்களை அடக்கி ஒடுக்கி வாழ்வதிலேயே செலவிட்டு குணமுடை யோரையும், அறிவுடையோரையும் அவமதித்து வாழ்வதை எண்ணி அதிர்ச்சி அடைந்தான் பிரகாஷ்.

புவனம் இறந்ததற்குக் காரணம் தன் மாமனுடைய நம்பிக்கைத்துரோகமான செயல் என்பதை மறக்கவில்லை பிரகாஷ். அவனுடைய உள்ளம் அந்தக் கொடூரச் செயலை நினைத்து வருந்திக்கொண்டிருந்தபோதுதான் அங்கே வந்தார் விதானையார் தம்பாபிள்ளை.

'வாருங்கள் ஏது இந்தப்பக்கம்?' என்று வரவேற்முன் பிரகாஷ்.

'சும்மா வந்தேன். உங்களையும் பார்த்துவிட்டுப் போகலாம் என்றுதான் வந்தேன்' என்று கூறியவர் சுகுணுவின் கல்யாணப் பேச்சை எடுத்தார்.

'ஓ...சரி சரி எனக்கு நீங்கள் வந்ததன் நோக்கம் புரி கின்றது' என்முன் பிரகாஷ்.

'தம்பி சொல்கிறேனே என்று கோபிக்காதே. உங்கள் சொத்துக்களையும் கொடுத்து ஒரு ஐயாயிரம் ரூபாய்க்கு ஒரு நோட்டுத்தா. நான் சரிப்படுத்தி விடுகின்றேன் உன் மாமனை' என்முர்.

'நீங்கள் ஊரில் பெரிய மனிதன் என்றதால் சொல்லு கின்றேன். நீங்கள் சொல்லுகின்றபடி செய்ய நான் தயார் ஆனல் அவர் சம்மதிக்கவேண்டுமே.'

'தம்பி...உனக்கு உள்ளதைச் சொன்னல் என்ன. உன் தாயார் இறந்ததற்குக் காரணமே தான் என்று தான் கொம்மான் நினைக்கிமுர். ஆகவே தான் அவரே இப்படிச் சொல்லி என்னை அனுப்பினர்.' என்முர்.

'அப்படியா விடயம். இந்த நல்ல மனம் அன்று அவருக்கு இருந்திருந்தால் என் அன்னை இப்படி அரை மனத்

துடன் அவலமாய் செத்திருக்கவேண்டாமே. ஏதோ சுகுணு சந்தோஷமாய் இருந்தால் அதுவே போதும்' என்று கூறி விட்டு சுகுணுவை அழைத்தான்.

'என்ன அண்ணு' என்று கேட்டுக்கொண்டே வந்தாள்

'கேட்டியா விடயத்தை. மாமா......'

எல்லாம் கேட்டுக்கொண்டுதானிருந்தேன். அண்ணு நீங்கள் பெரியவர்கள். நான் சின்னப்பெண் சொல்லுகிறேன் என்று கோபிக்கக் கூடாது. எனக்கு உண்மையிலேயே மாமா வீட்டிற்கு இனி பெண்ணுகப் போக விருப்பமில்லே. என் அம்மாவின் ஆத்மா சாந்திபெற வேண்டுமானுல் நான் சந்தோஷ வாழ்வு வாழணும். இனிமேல் மாமா வீட்டில் நான் போய் சந்தோஷமாக வாழ்வேன் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா அண்ணு! என்று அவள் கேட்டுவிட்டு கண் கலங்கினுள்.

'சுகுணு நீ என்ன சொல்லுகிருய்? உனக்கு இந்தக் கல்யாணம்பிடிக்கவில்லேயா'?

'நாங்கள் விருப்பமாகத்தான் இருந்தோம். நானும் விரும்பித்தானிருந்தேன். ஆனுல் என் தாயை எமனுலகுக்கு அனுப்பிய அதே திருமணம் எனக்கு வாழ்வளிக்குமா அண்ணு? நான் ஓர் குடிசையில் ஓர் ஏழையுடன் வாழ்ந் தாலும் மகிழ்ச்சியோடு வாழ்வேன். அண்ணு. ஆனுல் அந்தச் சீமான் வீட்டு வாழ்க்கை எனக்குத் தேவையில்லே. எனக்கு என்று ஒரு வாழ்க்கையில்லாமலா போய்விடும். அப்படித்தா னில்லாவிட்டாலும் நான் காலம் முழுதும் கன்னியாகவே வாழ்ந்துவிட்டுப் போகின்றேன். ஆனுல் என் மாமன் வீட் டிற்கு போக நான் தயாராய் இல்லே.'

'சுகுணு இது என்ன சிறு பிள்ளேத்தனமான பேச்சு நீ...நீ' என்று கண்கலங்கினுன் பிரகாஷ்.

'நானிருப்பது உனக்குக் கஸ்டமா அண்ணை'?

'சுகுணை... சே... இதென்னவார்த்தை'

'அப்படியாயின் நான் சந்தோஷமாயிருப்பதை நீங்கள் விரும்பினால் என்னை அங்கே அனுப்பும் திட்டத்தை இன்றைக்கல்ல என்றைக்கும் மனதில் வைத்துக்கொள்ளாதே' என்று கூறிவிட்டு உள்ளே சென்று விட்டாள்.

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். எதுவுமே பேசவில்லை.

மறுநாள் வழக்கம் போல கல்லூரிக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிய பிரகாஷ் ரியூசனுக்காக கீதாஞ்சலியின் வீட்டுக்குச் சென்றான்.

பல நாட்களாக அவன் வராததால் அவனுடைய வீட்டுக்குச் சென்று ஏமாற்றமடைந்த கீதாஞ்சலி அன்று அவனைக் கண்டதும் மகிழ்ச்சியடைந்து துள்ளினாள். அவளால் பாடங்களைப் படிக்க முடியவில்லை.

பிரகாஷ் என்ன இது. சும்மா இயந்திரம் மாதிரி இயங்குகின்றீர்களே, இது நாள் வரை எங்கே போனீர்கள்? ஏன் வரவில்லை. அன்று இங்கு நடந்த நிகழ்ச்சியினால் பயந்து......'

'இல்லைக் கீதா. என் வாழ்வே அடியோடு பாதிக்கப் பட்டு விட்டது.'

'பிரகாஷ்' என்று அவனை அணைத்துக்கொண்டாள் கீதாஞ்சலி.

'என்னைத் தொடாதே கீதா. மனிதர்கள் கணநேர உணர்வுக்கு அடிமையாகி உலகத்துக்கே பெரிய தீமைகளைச்

செய்து விடுகின்றனர். நீ கூட அன்று அன்பு மிகுதியினுல் அவசரப்பட்டுச் செய்த காரியம் எவ்வளவு பெரிய.........

'பிரகாஷ் நான் அவசரப்பட்டு விட்டேன்தான். ஆனுல் நானே உங்களை மணம் செய்து கொள்ளப்போறவள் தானே? அதனுல் என்ன?'

'யாராவது பார்த்திருந்தால்'

'பார்க்கட்டுமே. அதனுல் என்ன குடியா முழுகிவிடும்' என்றவள் தொடர்ந்து 'நீங்கள் ஏன் ஒரு மாதிரியாக இருக்கின்றீர்கள்' என்ருள்.

ஆதியோடந்தமாக எல்லா விடயத்தையும் கூறி முடித்தான் பிரகாஷ்.

'உங்களுக்கு ஒரு தங்கையிருப்பதாகக் கூறவில்லையே நீங்கள். நான் வந்து உங்கள் தங்கையைப் பார்க்கவா,

'அது மட்டுமல்ல கீதா. இனி நான் இங்கே ரியூசனுக்கு வரவும் முடியாது என்னை மன்னித்துவிடு.'

அவன் விழிகள் பனித்தன.

'நீங்கள் எவ்வளவு சுயநலக்காரர். நான் உங்களிடம் படிப்பதுதான் விருப்பமில்லையென்ருலும் என்னைக் கைகழுவி விடத் துணிந்துவிட்டீர்களா?'

'கீதா நான் சொல்வதைக் கேள். தங்கையைத் தனியே விட்டு விட்டு என்னுல் எங்குமே போக' முடிவதில்லை. இனி அப்படிப் போகவும் முடியாது.'

'அப்படியானுல் நானே அங்கே வருகின்றேன் பிரகாஷ்

'கீதா......நீ......'

'உண்மையாகவேதான் பிரகாஷ் நான் அங்கேயே வந்து விடுகின்றேன். எனக்கு இந்த ஊர் பழக்கப்பட்டது தானே.

'உன் இஸ்டம். நான் வருகின்றேன்.' என்று கூறிவிட்டுப் புறப்பட்டான்.

வீட்டுச்குச் சென்ற பிரகாஷ் உள்ளே பேச்சுக்குரல் கேட்டுத் திடுக்கிட்டு நின்முன். திடீரென அவன் மனதில் ஏதோ ஓர் இனந்தெரியாத பலஹீனம். ஒரு வாறு மனதைத் திடப்படுத்திக்கொண்டு உள்ளே நுழைந்தான்.'

## அத்தியாயம் 6

விரும்பியோ விரும்பாமலோ சில காரியங்களை வாழ்க்கையில் நாம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்திற்காளாகின்ரேம். அப்படித்தான் வீட்டுக்குள்ளே பேச்சுக்குரல் கேட்டதும் யாருடையது என்று தெரிந்துகொண்டு உள்ளே செல்லத் தயங்கியவன் மனதைத் திடப்படுத்திக்கொண்டு உள்ளே சென்முன்.

'ஹலோ பிரகாஷ். இப்படியொரு அழகான தங்கை இருப்பதைப் பற்றி எனக்கொன்றும் சொல்லவில்லையே' என்ருள் புனிதம்.

'எங்களைப் பற்றியே நாங்கள் ஒருவருக்கொருவர் தெரிந்து கொள்ளாமலிருந்துவிட்டோம். மற்றவர்களைப் பற்றி எப்படித்தான் சொல்லிவைப்பது. இருந்தாலும் எப்படியோ இப்ப நேர்முகமாகவே அறிந்து விட்டீர்களல்லவா?' என்முன்.

'என்ன சுகுணு வந்த நேரம் தொடக்கமே கதைத்துக் கொண்டிருந்தீர்களா அல்லது உபசரணை ஏதாவது நடந்ததா?'

'கதைச் சுவையில் எல்லாமே மறந்துவிட்டேன் அண்ணு இதோ ஐந்து நிமிடத்தில் நான் வந்து விடுகின்றேன். என்று கூறிவிட்டுச் சமையலறைப் பக்கம் சென்முள் சுகுணு.

'என்ன—எனக்குத் திருமணப்பதிவு நடந்தால் என்னுடன் கதைக்கப்படாது என்று திட்டமா பிரகாஷ். நீங்கள் என்னை மறந்துவிட்டாலும் நான் உங்களை......'

'புனிதம். எங்கள் சமூக நிலமை உனக்குத் தெரியாதா என்ன? நாளைக்கு நாலுபேர் உன்னைப்பற்றி தாறுமாமுகக் கதைத்தால்......

'நீங்கள் அப்படிப் போறீர்கள்? அதுவும் சரிதான். நீங்கள், எங்கள் மனத்துக்கு நல்லவர்களாக நடந்துகொள்ள வேண்டுமே யன்றி மற்றவர்களுக்காக......'

ஒரு கணம் பிரகாஷ் திகைத்துப்போனுன். அவன் கீதாஞ்சலியுடன் கொண்டுள்ள உறவுபற்றி அவளுக்குத்தெரியாது. ஆகவே உண்மையை மறைக்காமல் யாவையும் அவளிடம் கூறினுன் பிரகாஷ்.

'பிரகாஷ். நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். உங்களை அவ்வளவு கெதியில் கவர்ந்துவிட்ட அவளை நான் ஒரு முறை பார்க்கவேண்டும்போலிருக்கு' என்முள்.

'ஒரு முறையல்ல பல முறை பார்க்கலாம். நாளைக்கு மாலை இங்கு ரியூசனுக்காக வருவாள்' என்முன்.

அவர்கள் கதைத்துக்கொண்டிருக்கும் போதே தேனீர் கொண்டு வந்தாள் சுகுணு. இருவரும் தேனீர்க் கோப்பை

களை எடுத்துக்கொண்டனர். சுகுணவும் அவர்களுடனேயே இருந்தாள்.

'என்ன இருந்தாலும் நீங்கள் இவ்வளவு எங்களை ஒதுக்க வேண்டியதில்லை பிரகாஷ்.

'எதைப் பற்றிக் கூறுகின்றீர்கள் புனிதம்?'

'உங்கள் அம்மாவின் 'பியூனறல்' பற்றி ஒரு வார்த்தை தெரிவித்திருந்தால் என்ன?

'நீங்கள் வாழ்க்கைப் பிரயாண ஆரம்பத்துக்குப் போன வேளையில் இழவுச் செய்தி சொல்லி அனுப்பச் சொல்கிறீர் களா?' என்று கூறிக் கதையைத் திசைதிருப்பி விட்டான் பிரகாஷ்.

'மிஸ்டர் பிரகாஷ் நீங்கள் என்னிடம் பத்தோ இருபதோ கேட்டிருந்தால் கடஞகவேனும் தந்திருப்பே னல்லவா?'

'ஆமாம். ஆனல் எனக்கு பத்து இருபது தேவைப்பட வில்லையே புனிதம்.'

'ஏன் பொய் சொல்லுகின்றீர்கள். உங்கள் தங்கையின் திருமணம் குழம்பியது ஏன்?'

'ஓ...நீங்கள் பத்தோ இருபதோ என்றது ரென்' ஓர் ருவன்ரி தௌசன்ட்டையா?'

'ஆமா ஆமா?'

'அவ்வளவு தொகை உங்களிடமிருக்கா? அம்மாவிட மோ, அண்ணவிடமோ? கேட்டுத்தானே......'

'இல்லை இல்லை. என்னுடைய எக்கவுண்டில் இருபத் தையாயிரம் இருக்கு. நீங்கள் உடனே உங்கள் மாமா பையனுக்கு...'

'நிறுத்துங்கள் கதையை. மிகுதி உங்களுக்கு சுகுணா சொல்லவில்லையா? அவர்கள் வீட்டுப் படிக்கு கால்வைக்க மாட்டேன் என்று மறுத்து விட்டாள் சுகுணா. ஆகவே இனி...'

'அப்படியா? விடயம்? சரி சரி. மிஸ்டர் பிரகாஷ். நாளைக் காலையில் கல்லூரிக்குப் போகும்போது இங்கே வருகின்றேன். எனக்காக நீங்கள் கொஞ்ச நேரம் இங்கேயிருப்பீர்களா?' என்கிறாள்.

ஓ...கே. உங்களை எதிர்பார்த்திருக்கின்றேன்' என்றான்.

'மிஸ் சுகுணா. உங்களுடைய மனதைப் பாராட்டுகின்றேன். ஆடம்பரமான வாழ்வையோ, பணத்துக்காக பெண்ணையோ விரும்புகின்றவர்களுக்கு நல்ல பாடம் படிப்பித்து விட்டீர்கள்' என்று கூறிவிட்டு விடை பெற்றுச் சென்றாள்.

அவள் வெளியே சென்ற பின்பு 'யாரண்ணா இவள்? பணம் இவளுக்கு தண்ணீர் பட்டபாடு போலிருக்கே' என்றாள்.

'சுகுணா அவளைப்பார்த்தாயா? அழகு, குணம், பணம் அத்தனையும் நிறைந்திருந்தும் பெருமையில்லாத பெண். பெயரைப் போன்று குணமும் புனிதமானது' என்றான்.

'ஏனென்றால் உங்களுக்குப் பத்தாயிரம், இருபதாயிரம் சும்மா தாறேன் என்றபடியால். அப்படித்தானே அண்ணா?'

'உண்மையிலேயே நீ ஒரு.'

'நான் ஒரு... என்னவாம்?'

'சுகுணா சும்மா உன் வாயை வைத்துக்கொண்டிரடி. நான் படிக்கப்போறேன்' என்று கூறிவிட்டு ஆபீஸ் அறைக்குள் புகுந்தான்.

ஆபீஸ் அறைக்குள் நுழைந்துவிட்டால் அவன் அறிவுலகில் சஞ்சரிக்க ஆரம்பித்துவிடுவான். காந்தி, யேசு, புத்தர், விவேகானந்தருடைய படங்கள் நான்கு பக்கச் சுவர்களிலும் காட்சியளித்தன. மேசையிலும், அலுமாரியிலும் புத்தகங்கள் பரப்பி வைக்கப்பட்டிருந்தன. அந்த அறையே கலைக்களஞ்சியமாகக் காட்சியளித்தது.

அண்ணு ஏதோ படித்துக்கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு' உள்ளே வரட்டுமா அண்ணு, என்ருள்.

'வாவேன்...' என்ருன் பிரகாஷ்.

'அந்தப் பெண் உன்னிடம் ஏன் இவ்வளவு... சில சமயம் அவளும் உன்னை...'

'உனக்குப் புண்ணியம் கிடைக்கும் பேசாமலிரடி சுகுணு' என்ருன்.

பேசாமல் ஒரு புத்தகத்தை எடுத்து வைத்துக்கொண்டு அண்ணனுக்கு முன் உட்கார்ந்துகொண்டாள்.

'அக்கா என்ன பேசாமலிருக்கின்ருய். நான் சொன்னது கேட்கவில்லையா?' என்ருள் கீதாஞ்சலி.

'கீதா நீ கூறிய விடயம் பற்றித்தான் நினைத்துக்கொண்டிருக்கின்றேன். பிரகாஷ் மாஸ்டர் உன்னைத் திருமணம் செய்துகொள்வதாகக் கூறுகின்ருர் என்ருயே, தற்சமயம் நீ யூனிவசிற்றிக்கு செலக்ட் பண்ணப்பட்டால்...'

'அக்கா அவர் விருப்பம் எப்படியோ அப்படிச்செய்யலாம்.' என்ருள்.

'ஏதோ உனக்குப் பிடித்தமென்ருல் எங்களுக்கு என்ன நாங்கள் வேண்டாம் என்ரு கூறப்போகின்ருேம்' என்ருள்.

'நாளைக்கு இங்கே ரியூசனுக்கு வரமாட்டாராம். நான் அங்கே வருவதாகக் கூறியிருக்கின்றேன்.'

'என்னவோ புத்திசாலித்தனமாக நடந்து கொள்பவர்கள் என்று சொல்லிக்கொண்டு தவறிவிடுபவர்களும் உண்டு. மிகவும் கவனம் கீதா' என்ருள்.

தங்கையை அவள் சின்னப் பாப்பாவாகவே நினைத்து விட்டாள். ஆனல் அவளோ சுவர்ணுவின் நினைவுக்கும் எட்டாத தூரத்தில் வட்ட மிட்டுப் பறந்துகொண்டிருந்தாள். அவளுடைய நோக்கம், செயலாற்றம் இவையாவும் வானத்தில் பறந்து வட்டமிடும் பருந்து போன்று விளங்கிஞள் என்பதை எங்கே அறிவாள் அந்த அப்பாவி அக்காள்

மருந்து கசப்பானது. நாம் விருப்பமில்லாதபோதும் நோயைக் குணப்படுத்த மருந்தைக் குடிக்கவேண்டியிருக்கின்றது. அதே போன்று உடல் நோயைத் தீர்ப்பதற்காக சில விருப்பமற்ற காரியங்களையும், தேவையைப்பொறுத்து செய்யவேண்டியிருக்கின்றது. அது தேவையோ தேவையில்லையோ, அவள் உள்ளத்தில் பீறிட்டெழும் அசுர உணர்வுகளுக்குத் தீனி போட்டு தீரவேண்டிய இக்கட்டான நிலைக்கு தன்னை ஆட்படுத்திக்கொண்டு விட்டாள்;

சிறு பிள்ளைக்கும்சரி, பெரியவர்களுக்கும் சரி மனதில் ஆசையில்லாமல் போவதில்லை. அதே ஆசை இளம் மனதில் விரிசல் கண்டு ஆசையே வெறியாகிவிட்டால் அந்த வெறி பிடித்த மனம் ஒரு சிறுகண நேரத்தில் உலகத்தின் பஞ்சமா பாதகங்களையெல்லாம் நினைவு கூராது விடுவதில்லை. வசதி கிடைத்தால், சந்தர்ப்ப சூழ்நிலை கிடைத்தால் மட்டுமன்றி செயலாற்ற வேண்டுமென்ற நினைவு எழுந்து விட்டாலே போதும் அவர்கள் மிருகங்களைவிடக் கேவலமாகி விடுகின்றனர்.

கீதாவின் மனம் எங்கே சென்ருலும், எப்படி வட்ட மிட்டாலும் முடிவில் பிரகாஷ் என்ற கூட்டில்தான் வந்து வீழ்ந்து கிடந்தது.

ஆண்மைக்கே உரிய சகல லட்சணங்களும் கொண்ட எளிமையான தோற்றம். அவனுடைய பேச்சும், சிரிப்பும் எவரையும் மயங்கிவிடக் கூடியவை, அவள் மனம் பிரகாஷிடம் சரண் அடைந்து விட்டது.

அவன் அவளிடம் அன்பு கொண்டிருந்தான். ஆனால் அவன் அவளிடம் செலுத்தும் அன்பு பரிசுத்தமானது. அவளும் அவனிடம் அன்பு கொண்டாள் என்பதைவிட அவனிடம் தன்னையே கொடுத்துவிட்டாள் என்றுதான் சொல்ல வேண்டும். ஏனோ அவனிடம் அளவுக்கு அதிகமான பாசம்?

காலைக் கதிரவன் கீழ்வானில் தங்கநிறக் கதிர்களை வீசிய வண்ணம் மேலெழுந்து கொண்டிருந்தான். புனிதத்தின் மனதிலும் புது வெள்ளம் பாய்ந்தது போல மகிழ்ச்சி கரைபுரண்டோடியது. அவள் மனதில் அளவிடமுடியாத ஆனந்தம் குடிகொண்டிருந்தது,

இரவு பூரா சிந்தித்து பின்பு அவள் மனதில் திருப்தி ஏற்படும் வகையில் பதில் கிடைத்தபோது உறக்கம் வரவே மாட்டேன் என்றது. அதி காலையிலேயே எழுந்தாள். அன்று நேரத்துடனேயே கல்லூரிக்குப் புறப்பட்டு விட்டாள். அவளை ஏற்றிச் சென்ற கார் பிரகாஷ் வீட்டு வாசலில் வந்து நின்றபோது மணி ஏழரை. வீட்டுக்குள் வந்தவளை முகம் மலர வரவேற்றான் பிரகாஷ்.

'பிரகாஷ் ஒரு விடயம் உங்கள் அறையில் போயிருந்து மனம் விட்டுப் பேசுவோம் என்றாள்.

அவளுடைய வேண்டுகோள் புதுமையாயிருக்கவே அவனும் சில விநாடிகள் சிந்தனை வசப்பட்டானாயினும் கால்கள் அவனுடைய ஆபிஸ் அறைநோக்கி நடந்தன.

வெளியே கார் வந்து நின்ற சத்தம் கேட்டதும் சமையலறையில் நின்ற சுகுணா வெளியே வந்தாள். வந்ததும்

வராததுமாக புனிதம் கூறிய வார்த்தைகள் அவள் செவியில் விழுந்ததும் அவர்கள் கண்ணில் படாமலே பின்னே நின்று கொண்டாள்.

இருவரும் ஆபீஸ் அறைக்குள் சென்றதும் பின்னே சென்ற புனிதம் கதவைப் பூட்டுவதையும் பார்த்துக் கொண்டாள். அது சுகுணாவின் மனதில் உள்ள ஆவலை மேலும் அதிகப்படுத்தி விட்டது.

சிறு வயது முதலே பணக்கார வீட்டுப் பெண்கள் மீது சுகுணாவுக்கு அவ்வளவு பிடித்தமில்லை. புனிதத்தைப் பார்த்த போது அவளுக்குப் பிடித்துக்கொண்டதாயினும் காரணமின்றி அவள் தமயனிடம் அன்பு செலுத்துவதில் சந்தேகம் அண்ணன் நல்லவனாயிருந்தாலும் அவள் பணத்தை வாரி இறைக்கிறேன் என்று கூறுகிறாள். அது காதலின் வேகம் என்று நினைக்கலாம். ஆனால் அவள் இன்னொருவனுக்கு நிட்சயம் செய்யப்பட்டவள். ஆகவே அவள் செய்கை இயற்கையாகவே சுகுணாவின் மனதில் சிறு சலனத்தை ஏற்படுத்திவிட்டது.

அடிமேல் அடிவைத்து அறையின் வாசலை அடைந்தாள். உள்ளே பேச்சரவம் எதுவும் கேட்கவில்லை. காதைக் கூர்மையாக்கிக்கொண்டாள்.

'என்ன பிரகாஷ் அப்படியே ஸ்தம்பித்துப் போய்விட்டீர்கள்' என்றாள் புனிதம்.

'என்னால் எதுவுமே பேச முடியவில்லை புனிதம். உண்மையாகவே நான் கனவுலகில் இல்லையே நான் கேட்டது உண்மைதானா?

உண்மைதான். நான் நேற்று இரவு தான் இந்த முடிவுக்கு வந்தேன். பிரகாஷ் இந்தவிடயம் சுகுணாவுக்கு தெரியாமல் இருப்பது தான் நல்லது. 'இதைப்பற்றி அறிந்தால் அதிர்ச்சியடைந்தேபோய்விடுவாள்'.

'புனிதம் நீ நினைத்ததைச் சாதிப்பவள் என்பதை நிலை நாட்டிவிட்டாய். உண்மையிலேயே நான் பாக்கியசாலி என்னைவிடப் பாக்கியம்செய்தவன் இந்த உலகத்தில் கிடையாது. என்னைத் தெய்வமாகப் பூஜிப்பதாக நீ கூறினாய் என் இதய பீடத்தில் மட்டுமன்றி பூஜை அறையில் வைத்தும் வணங்கப்பட வேண்டிய புனிதம் நீ' உணர்ச்சி வசப்பட்டவனாய் ஏதேதோ பிதற்றினான்.

'பிரகாஷ் இதன் மூலம் நாங்கள், மிகவும் நெருங்கிய உறவு கொண்டு விட்டோம் இல்லையா?'

'ஆமாம் புனிதம்'

இவ்வளவுதான் சுகுணாவால் கேட்க முடிந்தது. அதற்கு மேல் அங்கு நிற்க முடியவில்லை திரும்பிவிட்டாள். கதவு திறக்கப்படும் சப்தம் கேட்டபோது திரும்பிப் பார்த்தாள் மகிழ்ச்சி ததும்பும் முகங்களுடன் சிரித்தபடியே இருவரும் வந்ததைப் பார்த்தபோது உலகமே சுழல்வது போன்றிருந்தது சுகுணாவுக்கு.

## அத்தியாயம் 7

அன்று கல்லூரியால் பகல் உணவுக்கு வீட்டிற்கு வந்த பிரகாஷிற்கு தலைவலி பிடித்துக்கொண்டுவிட்டது. காரணம் என்னவோ தெரியவில்லை.

'அண்ணா உனக்கு தலைவலி மட்டுமல்ல உன் பெயருக்கே களங்கம் ஏற்படும்படியாக நடந்து கொள்ளுகிறாய். இனிமேல் அந்தப் புனிதம் இங்கே வரக்கூடாது.' என்று மனதில் வைத்திருந்த வெறுப்புகளை வார்த்தையில் வடித்துக் கொட்டினாள் சுகுணா.

'சுகுணு நீ என்ன சொல்லுகிறுய். புனிதம் புனிதமான வள். அவள் உன் வாழ்வுக்காக எவ்வளவு பாடுபடுகின்றுள் தெரியுமா?'

'அவள் ஏன் பாடுபடுகின்றுள் என்பது எனக்குத்தெரியும் அண்ணு'

'உண்மையாகவா?'

'நீங்கள் அறைக்குள் நடத்திய நாடகம் எல்லாம் கேட்டுக்கொண்டுதானிருந்தேன்'

'நீ சரியான கள்ளி. உனக்குத் தெரிந்தால் ஆச்சரியப் பட்டுப் போவாய் என்று உனக்கு இப்போ தெரியக் கூடாது என்றுள்.

'தெரிந்தால்...அவளுடைய புனிதத்தன்மைக்கு மாசு ஏற்பட்டுவிடும் என்றுளா?'

'சுகுணு நீ'

'எனக்கெல்லாம் தெரியும் அண்ணு நீ கூட அவளுடைய செயலுக்கு இணங்கி...'

'சுகுணு! நீ தவருக விளங்கிவிட்டாய்.'

'தவறு! நான் என்ன சின்னப் பிள்ளையா? அண்ணு ஒரு வனுக்கு நிட்சயம் செய்யப்பட்ட பெண் அவளுக்கு உன் அறையில் என்ன வேலை? நீயும் அவளும்...' ஆத்திரத்தில் எதை எதை யெல்லாமோ உளறினுள்.

பொறுத்தே பொறுத்துப்பார்த்த பிரகாஷிற்கு ஆத்தி ரம் பீறிட்டுக்கொண்டு வந்தது. சொல்வதை நம்பாமல் முழுவதையும் சொல்லவும் விடாமல் மள மள என்று வாய்க்கு வந்தபடியெல்லாம் அவள் பேசிக்கொண்டுபோனுள். திடீரென அவள் கன்னத்தில் பளீரென அறைந்துவிட்டான் பிரகாஷ். மழை ஓய்ந்தது போல பேச்சு நின்றது.

'அடிப்பதற்கு உனக்கு உரிமையுண்டண்ணு. ஆனல் அவளுக்காக...நீ...பரிந்து என்னை...'

'சுகுணு நான் மீண்டும் சொல்லுறேன். உன் நல்வாழ்வுக்காகப் பாடுபடும் அவளை நீ கண்டபடி பேசினல் நான் மிருகமாக மாறிவிடுவேன். அறைக்குள் நடந்தது என்ன வென்று நீ கண்டாயா?'

'...' 'மௌனம்'

'கண்டாயா சுகுணு? ஏதோ அரைகுறையாகக் கேட்டதைக் கொண்டு அவளை...நீ... சே இவ்வளவு கீழ்த்தரமான குணம் உனக்கிருக்குமென்பது எனக்குத்தெரியாமல் போச்சு. ஐயோ என் மண்டையே வெடித்துவிடும் போலிருக்கே அவள் என்ன சொன்னுள் என்று உனக்குத் தெரியுமா?'

'.........'

மௌனம்,

'தெரியுமா சுகுணு? தன்னுடைய ஒரே ஒரு அண்ணனுக்கு உன்னை மனைவியாக்கி தன் மைத்துனியாக்க வேண்டும் என்று கேட்டாள். அவள் அண்ணன் சாதாரணமான ஆள் அல்ல ஒரு கிறிமினல் லோயர், புரிந்ததா? சீ...ச்சீ ...நீ நீயா... என் தங்கை...' என்று கூறிவிட்டு படிக்கும் அறைக்குள் சென்று படுத்து விட்டான்.

அவனை அணுக அவளுக்குப் பயமாகவிருந்தது. தன்னுடைய அவசரபுத்தியும், சந்தேக மனமும், தனக்கு வரவிருந்த நல்வாழ்வைத் தானே கெடுத்துக் கொள்ள விருந்ததையும் எண்ணி மனம் நொந்தாள் சுகுணு. ஆத்திரமெல்லாம் ஆறிய பின்பு மன்னிப்புக் கேட்போம் என பேசாமல் விட்டு விட்டாள்.

மாலை நான்கு மணியளவில் வாசலில் கார் நிற்கும் சப்தம் கேட்டது. அறைக்குள்ளிருந்த சுகுணு ஓடிவந்தாள்.

புனிதத்தைக்கண்டதும் அவள் மனம் துணுக்குற்றது. அதே வேளையில் அவளைச் சுகுணா எதிர்பார்க்கவில்லை. ஆகவே அவள் எதுவும் பேசாமல் 'அண்ணா உள்ளே அறையில்' என்றாள். 'தாங்ஸ் சுகுணா' என்று கூறிவிட்டு பிரகாஷின் அறையை நோக்கி நடந்தாள்.

அறை திறந்து கிடந்தது. வாசலில் நின்றபடியே 'பிர காஷ்' என்றாள்.

'புனிதம் நீங்களா? ஐ ஆம் செடேக், ஆகவே தான் பின்னேரம் கல்லூரிக்கு வரவில்லை.'

'அது சரி நாளைக்கே அண்ணா இங்கு வருவதாக போன் பண்ணினார்.'

'புனிதம் நீங்கள் இங்கு வருவதையும் என்னுடன் இந்த அறைக்குள் காலையில் நின்று கதைத்தீர்களே அதை யும் என் தங்கை சந்தேகிக்கிறாள். பிளிஸ் புனிதம் இனி நீங்கள் இங்கே வராதீர்கள்.'

'பிரகாஷ் நீங்கள்...'

'நான்தான் சொல்கிறேன் நீங்கள் செய்ய விரும்பியதை அறிந்துகொள்ளாமலே உங்களையும், என்னையும் சேர்த்து...'

'அவள் அப்படி நினைக்க இடம் கொடுத்து நடந்தது எங்கள் தவறுதான் பிரகாஷ் ஆனால் அவள் சிறுபிள்ளை...'

'புனிதம்...உன் பெருங்குணத்தை அவள் அறியவில்லை. அவள் கண்டபடி கதைத்ததால் அடித்துவிட்டேன். அந்த நேரம் தொடக்கம் இந்த அறையை விட்டே வெளியேற வில்லை- அவளிடம் உண்மையை நான் கூறியும், என்னிடம் வந்து மன்னிப்புக் கேட்கவில்லையே புனிதம்.'

'பிரகாஷ், அவள் பயந்து வராதிருக்கலாம் அல்லவா. நீங்கள் அவசரக்காரர்.'

'நானு அவசரக்காரன். புனிதம் அவள் அண்ணனையே நம்பவில்லை...' என்று அவன் கூறிமுடிப்பதற்குள் அவன் காலடியில் வந்து விழுந்தாள் சுகுணு.

'அண்ணு என்னை மன்னித்துவிடண்ணு நான் செய்தவை, பேசியவை யாவும் தவறு என்னை மன்னித்துவிடுங்கள்' என்று கதறினுள்.

'சுகுணு எழுந்திரம்மா' என்று அவளை தூக்கினுள் புனிதம்,

'நான்...நான்...' என்று அவளைப் பார்த்துத் தேம்பினுள்,

'தெரியும். அதனுல் என்ன உன்நிலையில் நானிருந்தாலும் அப்படித்தான் நினைத்திருப்பேன்.'

'புனிதம்' என்முன் பிரகாஷ்.

'ஆமாம் பிரகாஷ். நிச்சயமாக நான் கூடச் சந்தேகப் பட்டுத்தானிருப்பேன். பெண்கள் இயற்கையிலேயே சந்தேகப் பிராணிகள். அதற்கு நானே உங்கள் தங்கையோ விதிவிலக்கல்ல' என்று கூறிச் சிரித்தாள் புனிதம்.

'அண்ணு நீங்கள் என்னை மன்னிக்கமாட்டீர்களா?' என்று அவன் மார்பில் சாய்ந்து அழுதாள்.

'பைத்தியக்காரி. இனிமேல் இப்படியான நினைவுகளை மட்டும் மனதில் வைத்துக்கொள்ளாதே' என்று கூறி அவளைத் தேற்றிவிட்டு 'நீங்கள் இனி ஒன்முகி வீட்டீர்கள். நான் புறத்தி, என்முன்.

ஒரு நிமிடத்துக்கு முன்பு நிலவிய நிலைக்கு எதிர்மாமுக அங்கே சிரிப்பொலி நிறைந்து வழிந்தது.

சில நிமிடங்களின் பின்பு புனிதம் விடைபெற்றுக் கொண்டு சென்றுவிட்டாள்.

மணி ஐந்து அடித்து ஓய்ந்தபோது பிரகாஷின் வீட்டு வாசலில் ஓர் பெண் வந்து நின்முள். அவளைப்பார்த்ததும் சுகுணுவே அசந்து போனுள்.

தந்தத்தில் கடைந்தெடுத்த பேசும் பொற் சிற்பம் போல அழகுடன் நின்ற அவள் தோற்றத்தைப் பார்த்ததும் ஒரு கண நேரம் அப்படியே ஸ்தம்பித்து நின்ற சுகுண ,நீங்கள் யாரைப் பார்க்கின்றீர்கள்' என்றாள்.

'உங்களைத்தான் மிஸ் சுகுணா' என்றாள்.

'என்னையா? என்னை உங்களுக்கு...'

'தெரியும். உங்கள் அண்ணா மிஸ்டர் பிரகாஷ் கூறினார். நான் ரியூசனுக்கு வந்ததாகக் கூறுங்கள். என் பெயர் கீதாஞ்சலி' என்றாள்.

அவளுடைய கண்களில் ஓர் கவர்ச்சி இருப்பதை உணர்ந்தாள் சுகுணா. அது கவர்ச்சி என்றும் சொல்லிவிடமுடியாது அவளுடைய விழிகளில் ஓர்... என்னவென்றே அவளால் புரிந்துகொள்ளமுடியவில்லை. அவள் இதழ்களில் தோன்றி மறைந்தது ஓர் முறுவல்.

'அண்ணா, அண்ணா' என்று குரல் கொடுத்தாள்.

'என்ன சுகுணா?'

'உங்களை யாரோ தேடி வந்துள்ளனர்.'

'இங்கே வரச் சொல்'

அவனுடைய குரல் கேட்டதும் மகுடியின் இசைகேட்ட நாகம் போல அவனுடைய அறைநோக்கி நடந்தாள் கீதாஞ்சலி. அவளுடைய நடையும், வாளிப்பான கரங்களும், பளிங்கு போன்ற முகமும், எடுப்பான நாசியும் அவளைப் பார்க்குந் தோறும் மீண்டும் மீண்டும் பார்க்க வேண்டும் போலிருந்தது சுகுணாவுக்கு. ஆனால் அவளுடைய அழகுவிழிகளைச் சுற்றி அமைந்துள்ள கருமை அவளுடைய எழிலுக்கு திருஷ்டி கழிக்க அமைந்தது போலிருந்தது.

கீதாஞ்சலி உள்ளே சென்ற போது அந்த அறையைப் பார்த்து மலைத்து நின்றாள். அந்த அறை ஒரு கலைக்கூடமாக தூய்மை நிறைந்த சந்நிதானம் போல விளங்கிற்று. அறை மத்தியில் இருந்த மேசைக்கு அருகே சாய்வு நாற்காலி ஒன்றில் படுத்துக் கிடந்தான் பிரகாஷ்.

விழிகளை மூடிக் கிடந்த பிரகாஷ் தன்னருகே காலடி ஓசை கேட்டபோதுதான் விழிகளைத் திறந்தான். அவன் அருகே அலங்கார பூஜிதையாக, நிற்கும் கீதாஞ்சலியைப் பார்த்தபோது 'கீதா நீயா? என்றான்.

'நான் வருவேன் என்று நீங்கள் எதிர்பார்க்க வில்லையா? சார்'

'ஆமா சார்' என்றான் கேலியாக பிரகாஷ்.

'பிரகாஷ் நான்...நான் வந்து...'

'என்ன வார்த்தைகள் பின்னி பிணைகின்றன. இன்றைக்கு ரியூசன் வேண்டாம். எனக்கு தலைவலியாலிருக்கு உடம்பு லேசாக காய்ச்சலடிக்கின்றது' என்றான்.

'பிரகாஷ் என்றவள் புத்தகத்தை மேசைமீது போட்டு விட்டு அவன் நெற்றியில் கையைவைத்துப் பார்த்தாள்.

'என்ன? வைத்தியம் தெரியுமா?'

'உங்களுக்கு எடுத்ததற்கெல்லாம் கேலிதான் போங்கள். 'விக்ஸ்' இல்லையா இங்கே'.

'இருக்கே'

'எங்கே'

'அங்கே சுகுணுவிடம் கேட்டுப்பார்க்கணும்.'

உடனே சீதாஞ்சலி எழுந்து சென்றாள். பலநாள் அந்த வீட்டில் பழகியவள் போன்று உரிமையுடன் சமயலறைப்பக்

கம் விரைந்தாள். தேனீர் கலந்து கொண்டிருந்த சுகுணா விடம் 'மிஸ்டர் பிரகாஷிற்கு தலைவலியாம். விக்ஸ் இருக் காமே வாங்கிவரும்படி கூறினார்' என்றாள்.

'ஓ...நான் மறந்தேபோய்விட்டேன். அப்போ கூறினார் தலைவலி என்று' என்று கூறிவிட்டு ஓடிச்சென்று விக்ஸ் போத் தல் ஒன்றை எடுத்துக்கொண்டு சென்றாள்.

சுகுணா. என்னிடம் தாருங்கள். நானே கொண்டுபோய்...

'சரி இதோ. நான் தேனீர் கொண்டு வருகின்றேன் என்று கூறிவிட்டு அவசர அவசரமாக தேனீர் கலந்தாள்

விக்ஸ் போர்த்தலுடன் சென்ற கீதாஞ்சலி.

விக்ஸ் தைலத்தில் கொஞ்சம் எடுத்து அவன் நெற்றி யிலும், கன்னத்திலும் தடவினாள்.

'கீதா'

'ம்'

'இப்பவே என் தலைவலி எல்லாம் நீங்கிப்போய்விட்டது.'

'பொய்...பொய்'

'உண்மையாகத்தான் சொல்கிறேன்' என்று கூறிக் கொண்டிருக்கும்போதே உடல் எல்லாம் வியர்வைத்துளிகள் முத்து முத்தாக அரும்பின.

அவள் தன் இடுப்பில் செருகியிருந்த கைக்குட்டை யால் அவனுடைய மேனியில் துளிர்த்த வியர்வைத்துளி களை ஒத்தி விட்டாள்.

'கீதா'

'சொல்லுங்கள்'

'ஒரு மாதிரி இருக்கு' என்று கூறிவிட்டு எழுந்தான். 'பிரகாஷ் படுத்திருங்கள்'

'தலையைச் சுற்றுகின்றது கீதா. வாந்தி வரும் போலிருக்கு. வெளிக் கதவடிக்குப் போக வேண்டும்.' என்று கூறிவிட்டு எழுந்தவன் நிற்க முடியாமல் தள்ளாடினான்.

'பிரகாஷ். உட்காருங்கள்.'

நெஞ்சுக் குழியிலிருந்து அடி வயிற்றை இழுத்துதொண்டைக்குள் கொண்டுவந்தது போலிருந்தது. உடனே இருந்துவிட்டான். மீண்டும் வயிற்றைக் குமட்டவே' 'பிளீஸ் அறைக்கு வெளியேபோக உதவுங்கள் கீதா' என்று அவன் கூறு முன்பே வாந்தி எடுக்க ஆரம்பித்தான்.

அதே வேளையில் அறையில் நுழைந்த சுகுணா அங்கே நடந்த காட்சியைக் கண்டு உள்ளம் சிலிர்க்க, உடல் சிலிர்க்க பனிப்பதுமையாக அசையாது நின்று விட்டாள் 'என்ன 'என்ன கீதா இது?' கண்கலங்கினான், பதறினான் பிரகாஷ்.

'எதுவுமே பேசாமல் வெளிக்கதவை நோக்கி நடந்தாள் கீதாஞ்சலி.

## அத்தியாயம் 8

குரு—சிஷ்ய பரம்பரைக் கதைகளைப் பற்றி பலநூல்களில் படித்திருக்கின்றான் பிரகாஷ். கண்ணால் பார்த்தது கிடையாது. ஒரு முனிவர் தான் நோயுற்றிருந்த காலை வாந்தி எடுத்ததையும் அதை அவரின் பிரதம சீடன் கரத்திலேந்தி நின்றதையும், அப்போ அந்த குருவானவர் அவனை நோக்கி மனிதனுடைய காலடி பிடிக்காத இனமாகப் பார்த்து அதைப் போடச் சொன்னதும், உடனே

அவன் காலடி பிடிக்காத இடம் என்றால் அது என் வயிறாய் தானிருக்கும் என்று தானே குடித்ததையும் கதையாக சரித்திரமாகப் படித்திருந்தான்.

ஆனால் ஓர் நாகரீக யுவதி' என்னதான் மாணவியாக காதலியாக இருந்தாலும் தான் வாந்தி எடுத்தபோது கை நீட்டி இவற்றை ஏந்திய அந்தக் காட்சியைக் கண்ட போது பதறிவிட்டான். அவனுள்ளத்தில் கீதா மீது வைத்த மதிப்பும், அன்பும் மேலும் மேலும் உயர்ந்து கொண்டு விட்டன.

'சுகுணா அவருக்கு...' என்றான்.

உடனே தேனீர்த்தட்டை மேசைமீது வைத்துவிட்டு கீதாவின் பின்னே ஓடினாள் சுகுணா. பாத்ரூமிற்கு அழைத்துச் சென்று சோப் தண்ணீர் முதலியன கொடுத்து உதவினாள்.

கைகளை நன்கு கழுவிவிட்டு அறைக்கு வந்த கீதாஞ்சலியைப் பின் தொடர்ந்து வந்தாள் சுகுணா. அவளுடைய மனதில் கீதாவைப்பற்றி பல்வேறு சிந்தனைகள் படர்ந்தன. உண்மையில் பெற்ற தாய் ஒருத்தியாலேதான் அப்படி ஒரு செயலைச் செய்ய முடியுமே யன்றி ஒருவனுடைய அன்புக்காக ஏங்குபவளால் அப்படிச்செய்ய முடியும் என்று நினைக்கத் தோன்றவில்லை.

'கீதா நீ...' என்று பிரகாஷ் பேச முடியாமல் தத்தளித்தான்.

'பிரகாஷ் நான் உங்கள் அன்புக்காக ஏங்குபவள் என்பதால் இப்படிச் செய்யவில்லை. என் பெற்றோர்களுக்கோ, சகோதரர்களுக்கோ இப்படி ஒரு சந்தர்ப்பத்தில் உதவவில்லை. உதவுவேன் என்றும் என்னால் சொலல முடியவில்லை

ஆனுல் என்னையும் அறியாமல் என் கரங்கள் தானே நீண்டு விட்டன. பிரகாஷ் நான் வேண்டுமென்றே, செய்யவேண்டு மென்றே கடமை என்றே செய்யவில்லை. என்னையறியாத ஒரு சக்தி இந்தச் சந்தர்ப்பத்தை அளித்துவிட்டது' என்று விழிகளில் நீர் பெருகக் கூறினுள்.

கீதா...கீதா' அவனுல் பேச முடியவில்லை.

'நீங்கள் பேசாமல் படுத்திருங்கள். நன்கு ஓய்வெடுங் கள்' என்ருள்.

'அண்ணு தேனீர்' என்று இரு கோப்பைகளில் தேனீர் எடுத்து இருவரிடமும் நீட்டினுள்.

கீதாஞ்சலியுடன் கதைப்பதற்கே அவளால் முடியவில்லை. முதலில் உண்மையிலேயே அவளை அண்ணனின் மாணவி என்றுதான் நினைத்தாள். ஆனுல் அவள் மாணவி மட்டு மல்ல தனக்கு அண்ணியாகப் போகின்றவள் என்பதையும் தெரிந்து கொண்டபோது அவளுடன் எப்படிக் கதைப்பது என்றே புரியவில்லை.

'சுகுணு...இதோ... இவளைப்பற்றி உனக்குத் தெரியாது தானே' என்ருன் பிரகாஷ்.

'தெரியும் அண்ணு' என்ருள்.

'எப்படி?'

'இங்கு நடந்ததை நானும் தானே பார்த்துக்கொண் டிருக்கின்றேன். மிஸ் கீதாஞ்சலி என் அண்ணிதானே?' உள்ளத்தில் அடக்கிவைத்திருந்த எல்லாவற்றையும் ஒரே மூச்சில் கேட்டுவிட்டாள்.

'ஆமாம் சுகுணு, உன் அண்ணி செய்த வேலையைப் பார்த்தாயா?'

'பார்த்தேன் அண்ணு, ராமகிருஷ்ணருடைய சீடன் விவேகானந்தர் இப்படித்தான் நடந்து கொண்டாராம். அதேபோல உங்கள் மாணவியும் குருவுக்கு.........'

'போக்கிலிப்பெண்ணே என்னைக் கேலியா செய்கின்றாய்' என்று அவளைத் திரும்பிப் பார்த்தாள்.

'பிரகாஷ் எதுவுமே பேச வில்லை. மௌனமே உருவாக வீற்றிருந்தான்.

வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்த கீதாவின் மனதில் குதூகலம் பொங்கி வழிந்து கொண்டிருந்தது. எப்படியாவது அவனுடைய பூரண அன்பைப் பெற்றுவிட வேண்டும் என்று துடித்துக்கொண்டிருந்தவளுக்கு கடவுளே அளித்த சந்தர்ப்பமாகவே அதைக் கருதினாள். தானே வாந்தியெடுத்தால் அதைப் பார்க்கவே அருவருப்பவள். ஆனால் எப்படியோ கை நீட்டி அவன் எடுத்த வாந்தியை ஏந்திக்கொண்டாள். அருவருப்படையாது சாதாரணமாகவே நடந்துகொண்டாள்.

சிந்தனை வசமாகவே நடந்து கொண்டிருந்தவள் செவிகளில் 'ஹலோ கீதா' என்ற வார்த்தைகள் கேட்டதும் நின்று விட்டாள்.

'நீங்கள் இங்கேயா இருக்கின்றீர்கள்' என்றாள் கீதா.

'ஆமாம். நான் இந்த மாதம் முதலாம் திகதியிலிருந்து இங்கே மாற்றலாகி வந்துள்ளேன்' என்றான் அந்த வாலிபன்.

அவனுடைய கண்கள் அவளை விழுங்கி விடுவனபோலப் பார்த்துக்கொண்டிருந்தன.

'என்ன அப்படிப் பார்க்கின்றீர்கள்?'

'உங்கள் அழகு பார்த்தாலும் மீண்டும் மீண்டும் பார்க்கத் தூண்டும் பேரெழில்' என்றான் அவ்வாலிபன்.

பெண்களை மயக்குவதில் கைதேர்ந்த பேர்வழி அவன் பெண்களை புகழ்ந்தால் எந்தப் பெண்ணும் மயங்கிவிடுவாள். அதிலும் அவளை அழகி என்று கூறினால் அதைவிட எந்தப்

பெண்ணுக்கும் வேறு வாழ்த்துக் கூறவேண்டாம். ஆனால் இயற்கையாகவே எழிலுடைய கீதா தன் அழகைப் புகழ் வோரிடம் புன்னகை பூப்பாள் அவளை மயக்க, ஆசைமொழி பகர்வோர் அவள் புன்னகையில் மயங்கி விடுவார்கள்.

'ஆறு மாதத்துக்கு முன்பு உங்களைச் சந்தித்ததற்கும் இன்று காண்பதற்கும் எவ்வளவோ வித்தியாசம் என்றான் அவன்.

'உண்மையாகவா சுதாகர்?'

'உண்மையாகத்தான் கூறுகின்றேன்.'

'அதற்குக் காரணம் உண்டென்றால் மிஸ்டர் பிரகாஷ் தான். எனக்கு விரைவில் திருமணம் நடக்கப்போகின்றது.'

'திருமணமா? உனக்கா?'

'ஏன் நான் தி ரு ம ண ம் செய்துகொள்ளக்கூடாதா? அப்படி ஏதும் சட்டமா?'

'இல்லை கீதா. ஆனால் உன்னை அவன் விரும்பித்தான் திருமணம் செய்கின்றானா?'

'ஆமாம்.'

'உன்னைப்பற்றி அவனுக்குத் தெரியுமா?'

'என்னைப்பற்றி என்ன தெரியவேண்டும்'

'கீதா மறந்துவிட்டாயா? அல்லது நடிக்கிறாயா?'

'மிஸ்டர் சுதாகர், நீ மணமானவன். இ ள மை யி ல் நடப்பவைகள் கனவுகள் போன்றவை. அவற்றை மறந்து விடுவதுதான் மனிதத் தன்மை' என்றாள்.

'ஓ...கீதா...ஐ...லவ்...யு வெறிமச்' என்ருன்.

'யூ...பூல்...இடியட்' என்ருள் கீதா.

இடையில் ஆட்கள் வரவே அவள் பேசாமல் நடந்து கொண்டிருந்தாள். அவனும் அவளைப் பின் தொடர்ந்து சென்று கொண்டிருந்தான் திடீரென நின்று விட்டான்.

'கடவுளே; இது என்ன சோதனை. ஒருவரிடம் நட்புக் கொள்ளும்போது ஆராய்ந்து கொள்ளவேண்டும் என்பார்கள். அதே நட்பை விலக்கும் பொழுது நன்கு ஆராய்ந்தே விலக்கவேண்டும் என்பார்கள். ஆனல் இவர்களிடம் நான் நட்புக்கொள்ளவில்லையே சந்தர்ப்பம், சூழ்நிலை, இயற்கை இளமை இவைகளின் கோளாறுகளால் ஏற்பட்ட கணநேர உறவுகள்......? உள்ளத்தில் இவர்களைப்பற்றி நினைக்கவோ மகிழவோ முடியாத நிலையில் இவர்களது தொல்லை ஏன் என்னைத் தொடருகின்றது. நான்......நான் அவளால் மேற் கொண்டு எதுவும் நினைக்கத் தோன்றவில்லை. மனதில் நினைவு கள் தோன்றி அழிய வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தாள்.

இரவும் தனிமையும் மனிதர்களின் எதிரிகள் போலும் இரவிலும் எத்தனையோ நடைபெறுகின்றன. அத்துடன் இரவில், தனிமை, மனித மனத்தில் தோன்றுபவை அள விடற்கரியன. எண்ணிலோ, எழுத்திலோ அடங்காதவை.

கீழ்வானப் படுதாவில் வெண்மதி எட்டிப்பார்த்துக் கொண்டிருந்தாள். அந்தியில் மலரும் மலர்களின் இனிய நறுமணத்துடன் சீதளத் தென்றல் சிலு சிலுவென்று வந்து புனிதத்தின் உள்ளத்தை குளிர வைத்துக்கொண்டிருந்தது.

குளிர்ந்த மனதின் பசுமையான நினைவுகள் படர்ந்தன. அவற்றின் செழுமையில், மதமதப்பில், சுகந்தத்தின் நினைவு களில் கலந்து வலம் வந்தான் பிரகாஷ்.

திருமணப் பதிவு முடிந்து ஒருவனுக்கு நிட்சயம் செய்யப்பட்டவளாயினும், வெளி உலகத்தில் பிரகாஷின் உறவை அவள் வளர்த்துக்கொள்ளவில்லையேயன்றி உள்ளத்தால் அவனை மறந்துவிட அவளால் முடியவில்லை. அவனை மறப்பதற்காக அவள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் அத்தனையும் அவன் நினைவுகளை அழியாத சித்திரமாக மாற்றினவேயன்றி மறக்கும்படி செய்யவில்லை.

பிரகாஷிடம் அவள் கொண்ட உறவு உடலாலோ அன்றி வேறு நலன்களாலோ ஆன ஒன்றல்ல சுற்றமும், சூழலும் படைத்த உறவல்ல. ஏதோ தெய்வீகமாக மலர்ந்த உறவு. அந்த உறவை மனித வாழ்வுக்கும் சட்ட சம்பிரதாயங்களுக்கும் அப்பாற்பட்ட ஒன்ருகவே அவள் கருதினுள்.

கணவன் ஒருவன் வாழ்க்கைக்குக் கிடைத்த பின்பும், நலன் ஏதும் கருதாத, பயன் அற்ற ஓர் உறவாக இதயத்தை விட்டே பிரிக்கமுடியாத உறவாக அவள் நினைவு மலர்ந்து நின்றுவிட்டதென்ருல் அது தெய்வீகமானது தானே?

சாதாரண மனித வாழ்வில் பிணைப்புண்ட உறவுகள் ஏற்படுவதும், மறைந்துபோவதும் சகஜம். காதல் வாழ்வும் களியாட்டங்களும் நடாத்திவிட்டு திருமணமானதும் அவற்றை அடியோடு மறந்து புனிதமானவர்களாக மற்றவர்களுக்கு அறிவுரை கூறுவோர் பலர் இன்று நமது சமுதாயத்தில் பெரிய மனிதப்போர்வையில் வாழ்ந்துகொண்டு தானிருக்கின்றனர்.

ஆனுல் புனிதத்தின் மனதில் வளர்ந்த அன்பு சாதாரணமானது என்று கூறிவிடமுடியாது. அதே அன்பு வாழ்வில் துணை போயிருந்தால் அவளைவிடப் பாக்கியசாலி இந்த உலகிலேயே இருந்திருக்கமுடியாது. ஆனுல் திரு

மணம் என்ற உறவு வந்து அவளது அன்பு வெள்ளத்தை அணைகட்டித் தலை திருப்பியது. ஆயினும் அந்த அணையை மீறிய ஓர் தெய்வீக சக்தி அவன் நினைவை வளர்த்துக் கொண்டிருந்தது.

அதற்காக நம்பிய கணவனுக்கு துரோகமோ, துரோக நினைவோ, விகற்பமான எண்ணங்களோ அவள் மனதில் உதயமாகவில்லை.

அவளாக விரும்பியோ, விரும்பாமலோ வாழ்க்கை என்ற உறவை ஏற்றது போலவே திருமணம் என்ற உறவையும் ஏற்றுக்கொண்டாளாயினும் அவற்றின் புனிதத்தன்மைக்கு மாசு ஏற்படுத்தும் நினைவோ, செயலோ அவளிடம் இல்லை.

அவளுடைய ஒரே அண்ணன் பாஸ்கர் அன்றிரவே திருமலைக்கு வந்துசேர்ந்துவிட்டான். 'அண்ணா நீ விரும்பிய அதேமாதிரிப் பெண் உனக்கும் பலவிதத்திலும் பொருத்த மானவள். பார்த்த மாத்திரத்திலே எனக்குப் பிடித்துக் கொண்டது. நாளைக்கு நீங்களும் வந்து பாருங்களேன்' என்றாள்.

'என்னவோ புனிதம் நீ சொன்னால் சரிதான். எனக்கு என்ன தெரியும். இதுவரை காலமும் நான் சட்டப் புத்த கங்களைத் தான் படித்திருக்கின்றேன். பெண்கள் பலரை வழக்குகளில் சந்தித்திருக்கின்றேன். நீ உலகத்தைப் பற்றி நன்கு அறிந்திருப்பாய். ஆசிரியையல்லவா. ஆகவே சுகுணா பற்றி நீ கூறிய உடனேயே என் மனதிலும் ஓர்... அதை எப்படி உன்னிடம் கூறுவதென்றே புரியவில்லை. புனிதம், அந்தப் பெண் படித்திருக்கவேண்டும் என்றோ வேண்டாத நாகரீக மோகத்தில் தன் காலத்தை போக்கடித்திருக்கவேண் டும் என்றோ நான் விரும்பவில்லை. குடும்பம் நடத்தக்கூடிய

அறிவும், என்னுடன் இல்லற வாழ்வில் ஒத்துழைக்கக்கூடிய ளாகவும், ஒழுக்கமுடைய மனைவியாகவும் வாழ்ந்தால் அதுவே போதும்' என்றான்.

'அண்ணு நீங்கள் பலே ஆள்தான்' என்றாள்.

'புனிதம் இந்தக்கால உலகம்பற்றி நல்லதையும்' பொல்லாததையும் நீ அறிந்திருப்பாய். ஆனால் என்னைப் பொறுத்தமட்டில் வழக்குக்கென்று வருபவர்களிடம் நான் காண்பது பொய்யும், புரட்டும், பித்தலாட்டமுமே. ஒழுக்க முள்ளவன் என்று கணிக்கக்கூடிய எவனுமே வரவில்லை.'

'கோட்டுக்கு வருபவர்கள் எல்லாம் அப்படிப்பட்டவர்கள் தானண்ணு அதுவும் நீங்கள் கிறிமினல்.'

'புனிதம் கோட்டுக்கு வருபவர்கள் மட்டுமல்ல; என்னுடன் படித்த ஒரு நண்பன் அவன்கூட தற்சமயம் திருமலையில்தான் வேலை செய்கின்றான். அவன் கூறிய கதையைக் கேட்டால்......என்ன உலகம் என்றுதான் எண்ணத் தோன்றுகின்றது.'

'என்னண்ணு கூறுகின்றீர்கள்? எனக்கு எதுவுமே புரியவில்லையே.'

'உனக்குப் புரியாது புனிதம். நீ ஒரு அக்காவோடு கூடிப் பிறந்திருந்தால் சில வேளை புரிந்துகொண்டிருப்பாய்.'

'ஒரு அக்காளோடா?'

'இல்லை உனக்கு மூத்த அக்காள் சிலபேர் இருந்து அவர்கள் மணம் முடித்த பின்பு, நீயும் ஒரு கன்னிப்பெண்ணாக அவர்களோடு வசித்துவந்திருந்தால் உனக்கும் ஒரு

வேளை நான் சொல்வது புரிந்திருக்கும்.' என்று கூறிய அண்ணனை பொருள் புரிந்த பார்வையுடன் நோக்கினாள்

'புனிதம் வந்து நான்......'

'ஸ்ரொப் பிளீஸ்' என்று கர்ஜித்தாள் புனிதம். திகைப் புற்றான் பாஸ்கர்.

## அத்தியாயம் 9

ஒருவரைப் போல மற்றவர்களையும் எடைபோடும் பழக்கம் எம்மவருள் அநேகருக்கு உண்டு. வழக்கறிஞர்கள் பெரும்பாலும் ஒன்றுக்கு ஒன்று உதாரணம் காட்டி நிரூபிப்ப திலும், இல்லாததை உண்டென்று வாதிடுவதிலும் கைவந்த கலைஞர்கள். ஆகவே அவர்களை அவர்கள் எண்ணத்துக்குப் போகவிட்டால் விபரீதம் ஏற்பட்டுவிடும் என்பதை நன்கு உணர்ந்தவள் புனிதம், தவறான கருத்துடன் பேசும் அண் ணனை ஓர் அதட்டலுடன் நிறுத்திவிட்டாள்.

''புனிதம்... நீ...''

''நீங்கள் கூறும் வாதம் கோட்டில் ஏற்கக்கூடியதாயினும், இங்கு என்னால் ஏற்க முடியாது. ஒருவனைப் போலவோ, ஒருத் தியைப் போலவோ எல்லோரும் இருப்பார்கள் என்று நீங்கள் நினைப்பது தவறு அண்ணா. இனிப்புள்ள இடத்தைச் சுற்றி எறும்பு ஊரத்தான் செய்யும். இனிப்பு வைக்கப்பட்டுள்ள போத்தலோ அன்றி வேறு பொருளோ இறுக்கமாகவும் தற் காப்பாகவும் இருந்து விட்டால் எறும்பால் என்ன செய்ய முடியும்? எல்லாம் அவரவர்மன இயல்பைப் பொறுத்தது அண்ணா'' என்றாள்.

''அடேயப்பா இனம் இனத்தை நாடும் என்பது எவ்வ ளவு பெரிய உண்மை. அம்மையாரே, புனிதமான அம்மை

யாரே நான் இனி இப்படிக் கூறமாட்டேன் என்னை மன்னித்து விடம்மா'' என்முன் கேலியாக.

''அண்ணு'' என்று அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

''புனிதம் உன்னைப்போல ஒரு தங்கைக்கு அண்ணனுக இருக்க நான் எவ்வளவு புண்ணியம் செய்திருக்க வேண்டும்'' என்று அவள் முதுகை வருடி விட்டான்.

அவன் பெரிய கிறிமினல் வழக்கறிஞராயிருந்தாலும் தன் அண்ணன் என்பதை நினைத்தபோது பெருமையாகவும், மகிழ்சியாகவுமிருந்தது புனிதத்திற்கு அதே வேளையில் அவள் உள்ளத்தில் சுகுணவும் பிரகாசும் தோன்றினர்.

கீழ் வானில் கதிரவன் தங்க முலாம் பூசி பவனி வர ஆரம்பிக்கும் வேளையில் புனிதம் எழுந்து குளித்துவிட்டு நல்ல ஆடைகளும் அணிந்து கொண்டு பூசை அறைக்குள் சென்முள். அவள் எழுந்ததைப் பார்த்ததும் இரவு பூராவும் இன்பக் கனவு கண்டுகொண்டே படுத்துக் கிடந்த பாஸ்கரும் எழுந்து விட்டான்.

அன்று எட்டு மணியளவில் பிரகாஷ் வீட்டு வாசலில் வந்து நின்றது பாஸ்கருடைய கார் அதிலிருந்து முதலில் இறங்கியவள் புனிதம் தான்.

கார்ச்சத்தம் கேட்டு வாசலுக்கு ஓடிவந்த பிரகாஷ் காரிலிருந்து இறங்கிய புனிதத்தை வரவேற்றுக்கொண்டே காரிலிருந்த பாஸ்கரையும் உள்ளே வரும்படி அழைத்தான்.

அவர்களிருவரும் உள்ளே வந்து அமர்ந்ததும் தங்கையை அழைத்தான் பிரகாஷ். அவள் சமயலறையில் இருந்தபடியால் வாசலில் கார் வந்து நின்றதோ அங்கு ஆட்கள் வந்ததோ அவளுக்குத் தெரியாது. ''என்னண்ணு இங்கே நான் கையில்...'' என்று அண்ணனுடன் செல்லமாகக் கோபித்துக் கொண்டாள்.

அவர்களுடைய அன்பான வாழ்வைக் கண்டும், கேட்டும் உணர்ந்து கொண்ட பாஸ்கருடைய உள்ளம் மகிழ்ச்சியால் நிரம்பி வழிந்தது.

உள்ளே சென்று விடயத்தைக் கூறி அவனை அழைத்து வர விரும்பி புறப்பட்ட பிரகாஷை தடுத்து நிறுத்திய புனிதம் அழகான விழிகளால் சைகை செய்தாள். அவளுடைய சைகையை உணர்ந்து கொண்டான் பிரகாஷ்.

''சுகுணா... சுகுணா... இங்கே வந்து யார் வந்திருக்கின்றது. என்று பாரேன்'' என்றான்,

ஒரு போதும் இல்லாதவாறு அன்று, அப்படி அழைத்த அண்ணனுடைய குரலைக் கேட்டு வெளியே வந்த ,சுகுணா திகைத்துவிட்டாள்.

அங்கேயிருந்தவன் நிச்சயமாக புனிதத்தின் அண்ணனுகத்தானிருக்க வேண்டுமென்பதை அவள் உணர்ந்து கொண்டாள். புனிதத்தின் முகச்சாயல் கூட அவனிடமிருந்ததை அந்த வினாடிக்கிடையில் கண்டு கொண்டு விட்டாள். உடனேயே கதவுக்குப் பின் சென்று ஒழித்துக்கொண்டாள்.

அவளுடைய நிலையைப் புரிந்து கொண்ட புனிதம் தன்னுள் சிரித்துக் கொண்டாள். 'சுகுணா தேனீர் கொண்டு வாரும்' என்றாள் புனிதம்.

சுகுணா துள்ளிக் குதித்து சமயலறைக்குள் ஓடினாள், அவள் உள்ளத்தில் ஒரே பரபரப்பு ஒன்றும் பேசாமல், அறிவிக்காமல் புனிதம் தன் அண்ணனை அழைத்துக் கொண்டு வந்து அவனை ஆச்சரியத்திலாழ்த்தி விட்டாள்.

வருடம் ஒன்று கழிந்து பிரகாஷின் தாயாருடைய ஆண்டுத் திதி கூட முடிந்து விட்டது. சுகுணா பாஸ்கர் திருமணம் நிச்சயமாகி திகதியும் குறிப்பிட்டாயிற்று.

இடையிடையே எத்தனையோ நிகழ்ச்சிகள் ஆயிரமாயிரம் வார்த்தைகளில் வடித்து வைக்க வேண்டிய இன்ப

ரச நிகழ்ச்சிகள், இனியபனி நினைவுகள், உணர்ச்சிப்போராட்டங்கள்.

அன்று மாலையில் கீதாவும் பிரகாசும் சந்தித்தனர். அவர்களிடையே எத்தனையோ எண்ணக் கனவுகள் ஒன்றை ஒன்று முட்டி மோதின. அடக்கியாள முடியாத உணர்வுகளுடன் போராடும் கீதா தன் உடல் உணர்ச்சிகளை அவனைப் பொறுத்தமட்டில் கட்டியாளப் பழகிக் கொண்டாள் என்றால் அதற்கு அவனுடைய அன்பு மட்டும் காரணமில்லை. அவள் அவன் மீது வைத்திருந்த தீராத அன்புதான் காரணம். அவள் உடலில் கிளர்ந்து எழுந்த அக்கினி உணர்வுகள் அவனுடைய அன்புப் பனியில் நனைந்து குளிர்ந்து அடங்கி விடும்.

'அத்தான்'

'ம்,

'எங்கள் திருமணத்துக்காக நான் அவசரப்படவில்லை!

ஆனால்......

'என்ன ஆனால்'

'சுகுணவுக்குத் திருமணமான பின்பு......'

'திருமணமான பின்பு......'

'நீங்கள் என்னத்தான் சொல்வதற்கெல்லாம்......?

'சொல்வதற்கெல்லாம்......'

'போங்க இனி நான் பேசமாட்டேன்' என்று பொய்க் கோபத்துடன் கூறிவிட்டு திரும்பிக்கொண்டாள்.

'கோபமா கீதா?' அவள் தோள்களைப் பற்றினான்-

'விடுங்கள்' என்று நகர்ந்து இருந்தாள்.

'ராதே உனக்குக் கோபம் ஆகாதடி என் காதலியே தவறேது செய்தேன் பிரிய ராதே' என்று அவன் பாடிய போது அவளால் மேலும் கோபமாக நடிக்க முடியவில்லை. சிரித்துவிட்டாள்.

'கோபக்காரி நான் பாடினல் ஏன் சிரிக்க வேண்டுமாம்'

'உங்கள் பாட்டைக் கேட்ட பின்பு உண்மையில் கோபித்திருந்தால் கூட மாறிவிட்டிருப்பேன். எவ்வளவு நல்லா பாடுகின்றீர்கள் தெரியுமா?'

'அடேயப்பா, காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு தானே,

'ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்'

'நான் கழுதையாட்டம் கத்தினல் கூட நீ நல்லாயிருக்கென்று தானே சொல்வாய்,

'போங்கத்தான்'

'எங்கேங்க' என்று கூறி அவளை இழுத்து மடிமீது படுக்க வைத்தான்.

'மடிமீது தலை வைத்து' என்று தொடங்கினுள்.

'விடியும் வரை தூங்குவோம் என்று சினிமா டுயட் பாடுவோமா?' என்று கூறிவிட்டு அவளைத் தூக்கி விட்டான்.

'அண்ணு என்று அழைத்துக்கொண்டே சுகுணு தேனீருடன் உள்ளே நுழைந்ததும் அவர்களது ஆனந்த ஆட்டமெல்லாம் அப்படியே ஒய்ந்துவிட்டது.

மறுநாட் காலை விடிந்த பொழுது புனிதத்தின் மனதில் ஓர் மறுமலர்ச்சி. தனக்கு முன்பே பிரகாஷிற்கு திருமணம் நடக்க வேண்டும் என்ற ஓர் எண்ணம் அவள் இதயத்தில் உருவானது.

அவளுடைய கணவன் திருமணப் பதிவு நடந்த இரண்டாவது மாதமே உபகாரச் சம்பளம் பெற்று இரண்டு வருடப் படிப்புக்காக லண்டனுக்குச் சென்று விட்டான். ஆகவே அவளுடைய திருமணம் தடைப்பட்டு விட்டது,

தன்னுடைய திருமணம் நாட்சென்றுலும் பரவாயில்லை என எண்ணிய அவள் மனதில் பிரகாஷை மணக் கோலத்தில் காண விழைந்தது மனம்,

அன்று கல்லூரி லீவு, ஆகவே காலை உணவை முடித்துக் கொண்டு பிரகாஷ் வீட்டிற்குச் சென்ருள் புனிதம்.

அவள் பிரகாஷ் வீட்டிற்குச் சென்ற சமயம் பிரகாஷ் தன் ஆபீஷ் அறையிலிருந்து புத்தகம் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தான்.

'மிஸ்டர் பிரகாஷ் உள்ளே வரலாமா?'

ஓ......வாருங்கள், நீங்கள் தான் புனிதமாச்சே எங்கேயும் அனுமதியின்றி நுழையலாம்' என்ருன் பிரகாஷ்.

'என்ன படித்துக் கொண்டிருகிறீர்கள். நானும் தெரிந்து கொள்ளலாமோ?'

'நீங்களும் நானும் தெரிந்து கொள்ளும் விடயமல்ல, யாவரும் படித்தறிய வேண்டிய ஒரு பாடல். புறநானூற்றில் படித்துக்கொண்டிருக்கிறேன்.'

'அதைத்தான் சொல்லுங்களேன்.'

'அதாவது 'நன்றும் தீதும் பிறர் தர வரா' என்ற அடிப்படையையே திரும்பத் திரும்பப்படித்துக் கொண்டிருக்கின்றேன். எத்தனை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நமது தமிழ் புலவன் கூறிய தத்துவம். இந்தக் காலத்து மக்கள் இந்த அடியின் உண்மைகளை உணர்ந்து கொண்டால் சண்டை சச்சரவு இன்றி எல்லோரும் ஒற்றுமையாய், 'அன்பாய் வாழ முடியும். புனிதம் இது பற்றி நீங்கள்... என்று நிறுத்திவிட்டு அவளைப் பார்த்தான்.

அவளுடைய அழகு நயனங்களில் நீர் பனித்து தழும்பின.

'புனிதம்! புனிதம்! வட் ஹப்பின்ட்.'

'நதிங் மிஸ்டர் பிரகாஷ்' என்று கூறிவிட்டு மீண்டும் 'புறநானூறு வாக்கியம் என் உள்ளத்தைத் தொட்டு விட்டது' என்ருள்.

'நீங்கள் ஏதும் தவருக......'

'இல்லை. இல்லை, என்று கூறியவள் 'பிரகாஷ் உங்களி

டம் ஒன்று கேட்கலாம் என்று எண்ணித்தான் காலையில் இங்கு வந்தேன்' என்றாள் புனிதம்.

என்னிடமா? என்ன விடயமாக? வா புதிர் போடாமல் நேரடியாக விஷயத்தில் குதியுங்கள்' என்றான்.

'கல்யாண விடயமாக...'

'கல்......கல்யாண விடயமாகவா? அதுதான் எல்லாம் நிச்சயமாகி விட்டதே, டேட் கூட தீர்மானிச்சாச்சே.'

'அதில்லை பிரகாஷ்'

'வேறு எதைப்பற்றி?'

உங்கள் கல்யாண விடயம் பற்றி?'

'அதற்கு இப்போ என்ன அவசரம்?'

'பிரகாஷ் நான் சொல்வதைக் கொஞ்சம் ஆறுதலாகக் கேட்பீர்களா?'

'ஓ. கே. ஓ. கே' என்று கூறிவிட்டு கையிலிருந்த புத்தகத்தை மூடி மேசை மீது வைத்தான்.

'பிரகாஷ் நீங்கள் இனியும் தனித்திருப்பதை நான் விரும்பவில்லை.'

'அதற்காக?'

'சுகுணாவின் திருமணம் முடிந்தால் சுகுணா அண்ணனுடன் யாழ்ப்பாணத்தில்தான் தங்க நேரிடும். நீங்கள் தனித்து இருக்க நேரிடும். ஆகவே உடனே திருமணத்துக்கு நடவடிக்கை எடுங்கள்' என்றாள்.

'புனிதம். நான் இவ்வளவு காலமும் தங்கையுடனிருந்தேன். அதற்கு முன்பும் தனியத்தானே இருந்தேன். அப்படித் தான் என்று இழுத்தான்?

'பிரகாஷ் நான் பலதையும் உத்தேசித்துத்தான் கூறுகின்றேன். உங்கள் இஷ்டப்படியே செய்யுங்கள். பிரகாஷ் சிலவேளை உங்கள் சொந்த விடயத்தில் தலையிடுகின்றேன் என்றும் நினைப்பீர்கள். ஆனால் சுகுணாவுக்குத் திருமணம் முடிந்த பின்பு நான் இங்கு வந்துபோக வேண்டும் என நீங்கள்விரும்புகின்றீர்களா?'

'புனிதம் வட் இஸ் திஸ் நீங்கள் என்ன சொல்கின்றீர்கள்?'

'பிரகாஷ், உங்களிடம் நான் மதிப்பும், மரியாதையும் வைத்திருக்கின்றேன்.'

,இல்லே என்று சொன்னேனு?'

'அந்த மதிப்பும் மரியாதையும் என்றும் நிலைத்திருக்க வேண்டும். அதுமட்டு மல்ல உங்களோடு பழகும் ஒவ்வொரு விநாடியும் என் உள்ளம் ஆனந்த பரவசத்தில் ஆழ்ந்துவிடுகின்றது. அதே வேளையில் சுகுணுவுக்குத் திருமணம் முடிந்துவிட்டால் அவள் இங்கு இருக்கமாட்டாள்.?

'ஆமாம், அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?' என்று கேட்டான் பிரகாஷ்.

'பிரகாஷ் நான்—என்னுல் எப்படிச் சொல்வதென்றே புரியவில்லை. உண்மையில் என்னை நீங்கள் புனிதமான எண்ணங்களுடன் நேசித்தால் என் வேண்டுகோளை ஏற்பீர்கள் என்றே எண்ணுகின்றேன், அதாவது சுகுணுவுக்கும் அண்ணனுக்கும் திருமணம் நடக்கும் அன்றைய தினத்தில் உங்களுக்கும்......'

'புனிதம்' என்று கூறியவன் மேலே எதுவும் பேசாமல் அவளையே விழுங்கி விடுவதுபோலப் பார்த்தான் பிரகாஷ்.

## அத்தியாயம் (10)

மிகப் பெரிய விடயங்களுக்கெல்லாம் அலை மோதாத மனம் மிகச் சிறிய அற்பமான விடயங்களில் பேதலித்து விடுகின்றது. ஒவ்வொருவர் வாழ்விலும், மனதிலும் அனுபவ ரீதியாக இப்படியான நிகழ்ச்சிகள் ஏற்பட்டிருக்கலாம்.

ஆனால் அற்ப விடயங்களுக்காக மனதை அலைபாய விட்ட முதற் சந்தர்ப்பம் பிரகாஷ் வாழ்வில் அன்றுதான் ஏற்பட்டது.

புனிதம் தன் அண்ணன் திருமணத்தன்றே, பிரகாஷின் திருமணமும் நடைபெற வேண்டும் என்று கூறியபோது அதை ஓர் அற்ப விடயமாகத்தான் நினைத்தான். ஆனால் அவன் கேட்ட கேள்விகளைக் கோர்வைப் படுத்திப் பார்த்த போது அவளுடைய கேள்வியில் தொக்கி நின்ற பதில் என்ன வாயிருக்கும் என்பதில் அவனுக்கு குழப்ப நிலையே ஏற்பட்டது.

'புனிதம் என் திருமணம் தனியே என்னைப் பொறுத்த விடயமல்லவே- அதற்குக் கீதா...' என்று இழுத்தான்.

புனிதத்துக்கு திருமணப் பதிவு நடந்து விட்டபோதும் அவள் திருமணத்துக்கு அவசரப்படுத்தியதால் சில வேளை அவள் மனதில் புதிய சகாப்தம் ஏதும் உருவாகியிருக்குமோ என்ற நினைவினால் தான் அப்படிக் கூறினான்.

ஆனால் அவன் அப்படிக் கேட்டதும் புனிதம் கதிரையை விட்டு துள்ளி எழுந்தாள்.

'என்ன புனிதம்?'

'கீதாவைச் சம்மதிக்க வைப்பது என் பொறுப்பு. இரண்டு திருமணமும் ஒரே நாளில் ஒரே மேடையில் நடைபெறப் போகின்றது பாருங்களேன்.'

'எனக்குத் திருமணம் நடைபெறுவதில் உங்களுக்கு அவ்வளவு சந்தோஷமா?'

'ஆமாம்'

'ஏன் புனிதம்?,

'நீங்கள் திருமணமாகமலிருந்தால் தனியே தானே இருப்பீர்கள்'

'ஆமாம்'

'நீங்கள் தனியே இருக்கும் இடத்திற்கு நான் எப்படி தனியே வந்து போவதாம்.'

'புனிதம்! நீங்கள் என்ன சொன்னீர்கள்...'

'பிரகாஷ், உங்களை நான் தவருக நினைக்கவில்லை. உங்களோடு தனி அறையில் இரவில் கூட நான் தங்கியிருப்பேன். உங்கள் மீது அவ்வளவு நம்பிக்கை எனக்கு ஆனுல்...?

'ஆனுல் என்ன புனிதம்?'

எனக்கு திருமணப் பதிவு நடைபெற்று விட்டபடியால் நான் ஒருவனின் மனைவி உங்களுடன் தனியேயிருந்து வீட்டிற்குள் கதைத்தால் ஊரார் என்ன நினைப்பார்கள்?'

'புனிதம்'

'பனை மரத்தின் கீழ் நின்று பாலைப் பருகினுல் யார்தான் நம்புவார்கள்? ஆகவே உங்கள் புனிதத் தன்மைக்கும், உங்கள் அன்புச் சினேகிதி புனிதத்துக்கும் இடையூருன கதைகள் வளராதிருக்க, எங்கள் தூய்மையான அன்பு வளரவே இந்தத் திட்டத்தைத் தீட்டினேன்'

'புனிதம் நீ... பெண்ணல்ல புனிதம் நீ...நீ...என்ருன் கண்கள் கலங்கி விட்டன.

'பிரகாஷ் நீங்கள் என்னை நீ என்று ஒருமையில் அழைக்கும்போது நான் எவ்வளவுமகிழ்ச்சியடைகிறேன் தெரியுமா?,

'உண்மையாகவா?'

அன்பின் நெருக்கம் இறுக இறுக மரியாதை பின் வாங்கி விடுகின்றது. அதிலிருந்து நீங்கள் நீயாக குறுகி விடுகின்றது.'

'வண்டபுல்' என்று கூறிக்கொண்டே உள்ளே வந்தாள் சுகுணு.

'அண்ணி' என்று திரும்பினுள் புனிதம்.

'போங்கள் — என்னதான் நான் உங்கள் அண்ணியானலும் நீங்கள் எனக்கு புனிதம் அக்காதான்'

'எனக்கு தேனீர் கூடத்தர வில்லையே அண்ணி' என்றாள் புனிதம்.

'அன்பு நெருங்க நெருங்க மரியாதை குறைந்து விடுகின்றது, ஆகவே தேனீரும் இல்லை' என்றாள் சுகுணா.

"தவறு அண்ணி தவறு. இங்கே உங்களுக்கும் எனக்கும் அன்பு நெருங்கவில்லை உறவு முறையில் தான் நெருக்கம். உங்கள் அன்பு நெருங்கியுள்ள இடம் என் அண்ணனிடம் தான்" என்றாள் புனிதம்.

சுகுணா வெட்கத்துடன் தலை குனிந்து கொண்டாள். அவள் அப்படி நேரடியே தாக்குதல் நடாத்துவாள் என்று சுகுணா கனவிலும் நினைக்கவில்லை. கேலியாகவே புனிதம் கூறினாளாயினும் சுகுணாவுக்கு வெட்கம் பிடுங்கித்தின்றது.

"என்னண்ணா நீங்கள் கூட பேசாமல் நிற்கின்றீர்களே" என்றாள்.

"எனக்கென்ன தெரியும் இனி நீங்கள் ஒன்று நான்..."

"அண்ணா..." எனச் சிணுங்கினாள் சுகுணா.

"சரி நான் வருகின்றேன் பிரகாஷ். அண்ணிக்குச் சொல்ல வேண்டிய அவசியமேயில்லை" என்று கூறிவிட்டு விடைபெற்றாள் புனிதம்.

அவள் சென்ற பின்பு சுகுணா தமையனை ஒருமாதிரியாகப் பார்த்தாள்.

"என்ன சுகுணா அப்படிப் பார்க்கிறாய்?"

"புனிதம் அக்கா சொன்னது உண்மைதானா?"

"என்னவோ அவளும் சம்மதித்தால் செய்து முடிக்கட்டும்" என்றான் பிரகாஷ்.

"நானே உன்னிடம் கேட்க வேண்டுமென்றிருந்தேன் அண்ணா. ஆனால் புனிதம் அக்கா முந்திக்கொண்டாள்" என்றாள்.

''என்னவோ சுகுணு நடக்கவேண்டிய காலத்தில் நீயோ, நானே தடுத்து நிறுத்திஞலும் நிற்கப்போவதில்லே. நடக்கா தென்ருல் புனிதம் முயற்சித்தாலும் நடக்காது. முதலில் உன் திருமணம் முடியட்டும்'' என்று கூறிவிட்டு படிப்பு அறைக்குச் சென்ருன்.

வாழ்க்கையில் மனிதனுடைய அபிலாசைகள் எதுவுமே தோன்றும்—அழியும். அவற்றில் சில சித்தி பெறவும் கூடும். பலசாலியான ஒருவன் தொற்றுநோயால் பீடிக்கப்படுவது போன்று மனித இதயத்தில் உணர்ச்சியும் ஓர் உற்பத்திச் சாதனம். ஒருவனே மலேரியா எப்படித் தாக்குகின்றதோ அதே போன்று சிலரைக் காம உணர்ச்சி தகித்து விடுகின்றது உடற் கூற்றைப் பற்றி விரிவாக ஆராய்ந்து படிக்கப் போயின் இதுபற்றி ஓரளவு அறிவு ஆதார ரீதியாகக் கிடைக்கக் கூடும் ஆனுல் எடுத்த எடுப்பில் இப்படிக் கூறிவிட்டால் அறிவுடை யோரே எம்மை எள்ளி நகையாடுவர்.

சமூக ஒழுங்கு என்ற கட்டுப்பாட்டிற்குள் சிலர் ஒழுக்க மானவர்களாக வாழ்ந்தாலும் அந்தரங்கம் என்னவோ ஆயி ரம் இருக்கும். சிலர் இறைச்சி தின்றுவிட்டு எலும்பையும் கழுத்தில் கோர்த்துக் கட்டிக்கொண்டு திரிகின்றனர். ஆனுல் அவர்களேப் போலல்லாது சிலர் சந்தர்ப்ப சூழலால்—?

சுதாகரைச் சந்தித்த நாள் முதலாக கீதாவின் மனதில் ஓயாத போராட்டங்கள். ஆனுல் தனிமை — இரவு — அவ ளுக்கு பகைமையாகிவிடுகின்றன.

திமிரான பேச்சும் உறுதியான வேளேகளில் அவளிட மிருந்து விடைபெற்று விடுகின்றன. அவள் எதையோ வேண் டித் துடிக்கும் ஒருத்தியாக மாறிவிடுகின்ருள்.

ஆனுல் பிரகாஷ் மீது அவளுக்கு ஓர் தனிமையான பற்று மறக்கமுடியாத வாஞ்சை அவள் எண்ணங்களின் பெருந் தலேவனுக நின்ருன் பிரகாஷ்.

வாசலில் கார் ஹோண் சப்தம் கேட்டதும் வெளியே ஓடி வந்த கீதா காரிலிருந்து இறங்கிய புனிதத்தைக் கண்டதும் திகைத்து விட்டாள். ஆனால் மனதை ஒரு நிலைப்படுத்திக் கொண்டே ''வாருங்கள் ரீச்சர்'' என்று வரவேற்றாள்.

''ஓ...மிஸ்...கீதா...உங்களிடம்தான் வந்தேன். ஒரு முக்கியமான விடயம் உங்களோடு தனியாக பேச வேண்டும்'' என்றாள்,

''வாருங்கள் ரீச்சர் தாராளமாகப் பேசலாம்', என்று அவளை அழைத்துக்கொண்டு வீட்டிற்குள் சென்றாள் கீதா.

அவளாகவே பேச்சை ஆரம்பிக்கட்டும் என்று மௌனமாகவே இருந்தாள் கீதா. கீதாவிடம் எப்படி விடயத்தை விளக்கிக் கூறுவது என்று ஆலோசித்துக் கொண்டிருந்தாள் புனிதம்.

''மிஸ் கீதா நீங்கள் மிஸ்டர் பிரகாஷ் மீது...'' என்று கேட்டுக்கொண்டே கீதாவை உற்று நோக்கிச் சிரித்தாள்.

''உங்களுக்குத் தெரியாதா ரீச்சர்''

''ஆனால் பிரகாஷ் மீது மிகுந்த அக்கறையுண்டல்லவா என்றுதான் கேட்க வந்தேன்''

''ஆமாம்''

''சுகுணாவுக்கு கல்யாணமானால் அவர்......தனித்துவிடுவார்''

''தெரிந்தது தானே''

''ஆகவே உங்கள் திருமணத்தைத் தள்ளிப்போடாமல்''

''ரீச்சர் அவர் விருப்பத்துக்கு மாறாக நான் வற்புறுத்துவதோ கேட்பதோ அழகல்ல. ஆகவேதான் நான் இந்த விடயமாய் எதுவும் அவரிடம் கதைக்க வில்லை.

''அப்படியா''!?''

''ஆமாம் ரீச்சர். எனக்கு இன்றைக்கு திருமணம் நடந்தால் கூட வேண்டாம் என்று சொல்வேன். அவரோடு

இணைந்து இன்புற்று வாழும் நாளை ஆவலோடு எதிர் பார்த்திருக்கின்றேன் ரீச்சர்'' என்றாள் கீதாஞ்சலி.

''மிஸ் கீதா உங்கள் சிஸ்டரோ...''

''அவர்கள் தயவில்தானே நானிருக்கிறேன். அவர்கள் எப்போ நான்...,'

''புரிகின்றது. நீங்கள் என் சகோதரி போல. ஆகவே நான் உங்களுக்கு உதவத் தயாராயிருக்கின்றேன். சுகுண வின் திருமணத்தன்றே உங்கள்...''

''அக்கா நான்...''

''மிஸ்டர் பிரகாஷ் கூடச் சம்மதம் தெரிவித்துவிட்டார். ஆகவே...நிச்சயமாக சுகுண அண்ணன் திருமணத்தன்று கீதா பிரகாஷ் திருமணமும் நடைபெறும்'' என்றாள்.

''அக்கா அக்கா என்று அவளை அணைத்துக் கொண்டே கண்ணீர் விட்டாள்.

''கீதா இனி நீங்கள் எதற்கும் அஞ்சவேண்டாம். எல்லாம் என்னுடைய பொறுப்பு.'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டாள்.

''அக்கா காப்பி கூடச் சாப்பிடவில்லையே. இருங்கள் ஐந்து நிமிடத்தில் ரீ போட்டுக் கொண்டு வருகிறேன்''

'உங்கள் அன்பு ஒன்றே போதும் கீதா. நீங்களும் பிரகாசும் ஒன்றாயிருக்கும் போது நான் அடிக்கடி வருவேன் அப்போ வட்டியும் முதலுமாகத் தந்து தீர்த்து விடுங்கள்' என்றான் புனிதம்.

நீங்கள் ஒரு ஆணாய் பிறந்திருந்தால் என்னைப் போன்ற பெண்கள் பலர் உங்களை...'

'போக்கிரிப் பெண்ணே...' என்று அவளைக் கட்டியணைத்துக் கொண்டாள் புனிதம்.

புனிதம் கூறிய விபரங்களை கேட்டது முதல் கீதாஞ்சலியின் உள்ளம் கற்பனைக் கனவு காணத் தொடங்கி விட்டது.

அவள் முன்பின் அறியாத ஓர் உணர்வலைகளால் பிரகாஷின் நினைவு அவளைப் பிணைத்துக் கொண்டது.

'பிரகாஷ். உங்களோடு......வாய்விட்டே பிதற்றினள் கீதா,

'என்னடி கீதா, 'என்று கேட்டுக் கொண்டே உள்ளே வந்தாள் சுவர்ணு.

'அக்கா ஒரு நல்ல செய்தி. புனிதம் ரீச்சர் என்று சொன்னேனே ஞாபகமிருக்கா?

'ஆமாம்'

'அவர்கள் இங்கு வந்தார்கள்'

'இதுதான் நல்ல செய்தியா'

'இல்லை அக்கா'

'பின்னே என்னவாம்?'

'புனிதம் ரீச்சருடைய அண்ணனுக்கும், பிரகாஷின் தங்கைக்கும் திருமணம் நடக்கப் போகும் அன்றே எனக்கும் பிரகாஷிற்கும் திருமணம் நடைபெறப்போகின்றது'

'யார் சொன்னது?'

'புனிதம் ரீச்சர் தான்'

'உன்னுடைய திருமண விடயமாய் புனிதம் ரீச்சருக்கு ஏன் இவ்வளவு அக்கறை,?

'அக்கா;

'இடையில் உள்ள ஒருத்தி ஏன் இப்படி அவசரப்படணும்?' என்முள் மீண்டும்

'அக்கா மிஸ்டர் பிரகாஷிடம் புனிதம் ரீச்சர் பெரும் மதிப்பு வைத்திருக்கிருர்கள். அவருடைய வாழ்க்கையில் நிறைந்த அக்கறையுடையவர்கள்'

'சரி சரி எனக்கும் சந்தோஷம் தான் 'ஆனல் அவர் என்ன சொல்கின்ருரோ?'

'யார்? அத்தானு?'

'ஆமாம்'

'அக்கா அவரை நான் சமாளித்து விடுகின்றேன். நானே பிரகாஷிடம் பலதடவை கேட்க நினைத்துப் பயந்திருந்தேன், ஏதோ நல்ல காலம் புனிதம் உருவில் கடவுள் துணை புரிகின்ருர், இந்த சந்தர்ப்பத்தில் யார் எது சொன்னுலும் நான் கேட்கப்போவதில்லை'

'கீதா. உன் திருமணத்தில் எங்களுக்கு அக்கறையில்லை யாடி. நான் சும்மா தான் கூறினேன். ஆனல் நீ...

'அக்கா நான் முக்கியமாகத் திருமணம் செய்ய கொள் வதே உங்களுக்காகத்தான்,

'தெரியுமடி கீதா எனக்கு,

'அக்கா நீங்கள்...

'நானே உன்னிடம் கேட்கலாம் என நினைத்தேன்...... ஆனல்...'

சுவர்ணு இப்படிக் கூறிவிட்டு நிறுத்தியதும் கீதா பயந்து போய் என்னவோ ஏதோ என்று அங்கலாய்த்தாள்,

## அத்தியாயம் (11)

உள்ளத்தில் கள்ளமுள்ளவர்கள் தங்கள் பலஹீனத்தை பிறர் தாக்கும் பொழுது அசந்து போய் விடுகின்றனர். தெரிந்தோ தெரியாமலோ இரண்டாம் ஆள் ஏதும் கதைத்து விட்டால் தன் பலஹீனத்தைப்பற்றி அவர்கள் அறிந்து கொண்டு விட்டார்கள் எனப் பதறி விடுகின்றனர். இதே போன்று சுவர்ணு தனக்கு எல்லாம் தெரியும் என்று கூறிய தும் கீதா அசந்து போனுள்.

'ஏன் கீதா எங்களுடன் இருப்பது எங்களுக்கு பெரும் பொறுப்பு என்று நினைத்துத் தவிக்கிறாய் இல்லையா?'

'அக்கா,

'பைத்தியக்காரி நீ திருமணம் செய்து கொள்ளாமலிருந்தால் கூட உன்னை வைத்துப் பார்க்க நாங்கள் தயங்க மாட்டோம். அவரே என்னிடம் கூறினார்—கீதாவுக்குத் தேவையான எதையும் என்னைக் கேளாமலே உன் இஷ்டப்படி செய்து கொடு உன் தங்கைக்கு என்று. நீ அடிக்கடி பித்துப் பிடித்தவள் மாதிரி இருப்பதைப் பார்த்து நானே உன்னிடம் இதைச் சொல்லலாம் என்று எத்தனையோ நாள் நினைத்தேன். அப்புறம்.........'

'அக்கா' என்று ஓடிச்சென்று அவளை அணைத்துக் கொண்டாள் கீதாஞ்சலி.

அவள் உள்ளத்தில் மகிழ்ச்சி கரை புரண்டோடியது. தன் பலஹீனம் அக்காளுக்குத் தெரிந்து விட்டதோ என்று பயந்தவள், அவள் வேறு எதையோ கூறியதைக் கேட்டதும் பயவுணர்ச்சி சந்தோஷமாக மாறிவிட்டது.

பிரகாஷ்—கீதாஞ்சலி, பாஸ்கர், சுகுணா ஜோடிகளுக்கு கோணேஸ்வரர் ஆலயத்தில் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது.

அன்று பகல் பிரகாஷ் வீட்டிலேயே பொதுவில் விருந்து நடைபெற்றது.

வாழ்க்கையை கற்பனையில் கண்டானந்தித்தவன் பாஸ்கர். இப்பொழுது உண்மையான மணவாழ்வில் புகுந்து கொண்டான்.

கற்பனையில் அனுபவிக்கும் ஒன்றை, கற்பனையில் எதிர்பார்க்குமளவிற்கு உண்மையான அனுபவத்தில் காணவும் முடியாது—அனுபவிக்கவும் முடியாது! கற்பனையில் அனுபவிக்கும் எதற்கும் தனியான ஓர் சுகம் உண்டு என்பதை அனுபவரீதியாக உணர்ந்தான் பிரகாஷ்.

வீட்டிலும், கடற்கரையிலும் கீதாவுடன் கதைத்துப் பழகி அவள் மேனியில் தொட்டுக்கூட இருக்கின்றான். ஆனால் அவளைப் புது மணப் பெண்ணாக அறையில் சந்தித்த பொழுது அவனுள்ளத்தில் பொங்கிப் பிரவகித்த உணர்வுகளை எழுத்தில் வடிக்க முடியாது.

கீதா என்னதான் பலரோடு பழகக் கூடிய ஒருத்தியாக வாழ்ந்துவிட்டாலும் அன்றைய தினத்தில் பிரகாஷின் முன்னால் பனிப் பதுமையாக நின்றிருந்தாள்.

'கீதா' என்று அவள் தோள்களைப் பற்றினான் பிரகாஷ். அவன் குரலில் ஒருவித நடுக்கம்.

'ம்' என்றாளே தவிர நிமிரவோ, அன்றி அவனைத் திரும்பிப் பார்க்கவோ இல்லை.

'கீதா நீ எப்படியோ என் மனதில் இடம் பிடித்துக் கொண்டாய். அது மட்டுமா உன்னுடைய செய்கையால் என் அன்பின் வலிமையாவும் உன்னிடம் தஞ்சமடைந்து விட்டன. என்றான்

'நீங்கள் உங்கள் வார்த்தைகளாலும் செயல்களாலும் என் மனதை அடிமை கொண்டு விட்டீர்கள். என் வாழ்வில் பெற்றோரை இழந்த பின்பு என் அன்பு முழுவதையும் தேக்கி வைத்திருந்தேன். அவை யாவும் உங்களைக் கண்டது முதல் நாளிலும் பொழுதிலுமாக உங்களை வந்தடைந்து விட்டது. உண்மையில் இந்த உலகில் கூடிய அன்பு செலுத்தும் ஓர் உள்ளம் உங்களுடையதாய்தானிருக்கும். இந்த உலகில் உங்களைத் தவிர வேறுயாரையும் நான் நேசிக்கவில்லை' அத்தான், அவளுடைய உள்ளத்திலேயிருந்து வாய் வழியாக வார்த்தைகளில் வடியும் ஒவ்வொரு சொல்லும் உணர்ச்சிக் குழம்பில் தோய்ந்து வந்தன. அந்த வார்த்தைகள் ஒவ்வொன்றும் தேனில் தோய்த்த மாங்கனித் துண்டுகளாக இனித்தன பிரகாஷிற்கு.

அவன் பழமையில் புதுமைகான விரும்புபவனே யன்றி நவநாகரீகத்திற்கோ, அதன் கோணல் தன்மைகளுக்கோ அடிபணியாதவன். நாகரீகமுள்ள ஆனல் பழமையில் நம்பிக்கையுடையவனுக விளங்கினுன். ஆகவே அவளுடைய எளிமையான, இன்பமான பேச்சுவார்த்தைகளையும், ரசித்து நுகர்ந்தான்.

விநாடிகள் நிமிடங்களாகி நகர்ந்துகொண்டிருந்தன. வாய் வார்த்தைகள் குறைந்தன. எதிர்ப்பாலான உணர்வுகள் ஒன்றை ஒன்று பின்னிப் பிணைந்து சுகம் காண முற்பட்டன. இன்பம் கூட மனிதனுக்கு ஒருவகையில் வேதனைதான். ஆனல் வேதனை என்று தெரிந்தும் இன்பம் காணும் வேட்கையில் மனிதன் தன்னைத்தானே திருப்திப்படுத்திக் கொண்டு முன்னேறுகின்ருன்.

நாய் எலும்பைக் கடித்து தன் முரசிலிருந்து வரும் இரத்தத்தை ருசிப்பது போன்றே மனிதனும் தன்னைத் தானே வருத்தி இன்பம் பெறுகின்ருன். புதுமைக் கவிஞன் பாரதியும்

'கூடல் கூடல் கூடல்,
கூடிப்பின்னே குமரன் போயின்
வாடல் வாடல் வாடல்.'

என்று மிகவும் பூடகமாக கூறியுள்ளார் போலும்.

புதுமையை அனுபவித்த அலுப்பு, உடலில் ஏற்பட்ட தளர்வு, கீதாவை அணைத்தபடியே கட்டிலில் துயின்று கொண்டிருந்தான் பிரகாஷ். அவன் பிடிக்குள் அகப்பட்டுக் கிடந்த கீதாவுக்கு தூக்கம் வரவில்லை,

நன்ருகக் குடித்துப் பழகிய ஒருவனுக்கு ஒரு கிளாசில் அரைவாசிக்கு மது கொடுத்தால் அதனுல் அவன் திருப்தியடைந்துவிடுவானு என்ன? அதே நிலையில் கீதாவின் எண்ணச் சிறகுகள் வானத்தில் ஓய்வின்றி பறந்து கொண்டிருந்

தன. தூங்கும் கணவனுடைய முகத்தைப் பார்த்துக் கொண்டே ''பிரகாஷ், ஐ லவ் யூ வெறி மச்'' என்றாள்.

பெண் என்பவள் உணர்ச்சிகளின் ஒன்றுபட்ட உருவம். எளிதில் உணர்ச்சிக்கு அடிமையாகிவிடும் ஆண்களைப் போன்றவள் அல்லள். ஆனால் உணர்ச்சி வசப்பட்ட பெண் தன் வேட்கை தீராதவிடத்தில் குமுறும் எரிமலை போன்றே குமுறிக்கொண்டிருப்பாள். அவளுடைய விருப்பை நிறைவேற்ற முடியாதவிடத்தில் தன் நிறைவு பெற்ற கணவன் தூங்குவதைப் பார்த்து அவளால் வெதும்புவதைத் தவிரவேறு என்ன செய்ய முடியும்? சில சமயங்களில் சில பெண்களின் உள்ளங்களில் கணவன் மீது அந்தரங்கமான ஓர் வெறுப்பும் வளர ஆரம்பித்து விடுகின்றது. பெண்களில் அனேகமானோர் நிலையை கணவன்மார் உணரத் தவறுவதன் காரணத்தினால் பெண்களின் மனதில் தவறான பாதைகளும் தோன்றி விடுவதுண்டு. ஆனால்—?

கீதாவின் மனம் அப்பாவியான கணவனின் களங்கமற்ற முகத்தைப் பார்த்துக்கொண்டே கற்பனைச் சிறகடித்துப் பறந்தது. பிரகாஷ் போன்ற ஒருவனை கணவனாகப் பெற ஆயிரத்தில் ஒருத்தியால்தான் முடியும், அந்த ஒருத்தியே தான் என்பதை எண்ணும்பொழுது அவள் உள்ளத்தில் தேனாறு பாய்ந்தது.

காலை விடிந்தது. விடிவதற்கு முன்பே எழுந்துவிட்டாள் கீதாஞ்சலி. காலைக்கடன்களை முடித்துக்கொண்டு குளித்து விட்டு அலங்கார பூஜிதையாக அறைக்குள் வந்தாள் கீதாஞ்சலி. அவளையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான் பிரகாஷ்.

'என்ன அப்படிப் பார்க்கின்றீர்கள்?' என்றாள் கீதாஞ்சலி.

சவர்க்காரம் தேய்த்துக் குளித்தால் அவளுடைய முகம் பளிங்குபோலப் பிரகாசித்தது. சிகையுலர்த்தி வந்ததால் கருங்கூந்தல் அவள் மேனியை மூடி நின்றது. அவளுடைய

தோற்றத்தில் மெருகு ஏறியிருப்பது போன்ற பிரமை பிரகாஷிற்கு.

'நான் கேட்டது உங்களுக்குக் கேட்கவில்லையா? என்று அவன் கண்களைப் பொத்தினாள்.

'கேட்காமல் என்ன. ஆனால்...' என்று அவள் கரங்களைப் பற்றினான் பிரகாஷ்.

'நீங்கள் பெரிய ரசிகன் என்று எனக்குத் தெரியும். விடுங்கள் கையை' என்று சிணுங்கினாள் கீதா.

'கீதா' என் வாழ்க்கையிலேயே இன்று தான் விடியும் வரைக்கும் தூங்கியிருப்பேன் என நினைக்கிறேன். நீ வந்து நிற்கும் கோலத்தைப் பார்த்தால் அதிகாலையிலேயே எழுந்து இந்த......ம்...... அப்படித்தானே?'

'ஆமா கணவன் மனத்தைசந்தோஷப்படுத்துவது தானே மனைவியின் கடமை காலையில் எழுந்து இப்படி அழகாகக் காட்சியளித்தால் கணவனுடைய மனதில்.........'

'நீ பலே ஆள்தான்......ஆனால் உள்ளத்தால் பொய்யாது ஒழுகும் அழகுதான் எனக்குப் பிடிக்கும். அலங்கோலமாக அசிங்கமாக இருக்கப்படாது என்பதற்காக அலங்காரம் பண்ணிக்கத்தான் வேண்டும். கணவனைக் கவருவது அலங்காரமல்ல—உள்ளம்தான். கண்ணுக்கு விருந்தளிக்கும் அலங்காரம் சிறு நேரக் கவர்ச்சிதான். கவர்ச்சி உணர்ச்சியைக் கொடுக்கும். அந்த உணர்ச்சி மங்க கவர்ச்சியின் தன்மையும் வெறுத்துவிடும்' என்று கூறிச் சிரித்தான்.

'நீங்கள் பெரும் ஆராய்ச்சியாளன் தான். உங்கள் கூற்றில் நிறைய உண்மைகள் இருக்கின்றன.'

'அது ஒன்றுதான் இந்த உலகில் அழிவற்றது.'

'எது அத்தான்?'

'உண்மை.'

'நீங்கள் ஆசிரியரல்லவா. நிறையப் பேசுவீர்கள். எனக்கு என்ன தெரியும்?'

'தெரியாமல் இருப்பதால் தான் பலர் தவறுகள் புரிகின்றனர். எதைப் பற்றியும் நன்கு தெரிந்து வைக்க வேண்டும்.'

'இனித் தான் எனக்குப் பயமில்லையே' என்று கூறிவிட்டு உள்ளே சென்றுள் கீதாஞ்சலி.

அவள் சென்றதும் கண்களை மூடிக் கொண்டு கட்டிலில் சாய்ந்தான் பிரகாஷ். உள்ளே சென்ற கீதா அள்ளிச் செருகிய கூந்தலுடன் நெற்றியில் குங்குமம் பளபளக்க வந்து நின்றுள். கண்களை இறுக மூடியிருந்த பிரகாஷின் கன்னத்தில் மெல்லத் தட்டினுள்.

விழிகளைத் திறக்காமலே 'கீதா' என்று கைகளை நீட்டினுன் பிரகாஷ்.

'உங்கள் கள்ளக் குணம் எனக்குப் புரியும். என்னை ஏமாற்றவா பார்க்கின்றீர்கள்'

'கீதா வாழ்க்கையில் நாம் சந்தோஷமாயிருக்கும் ஒவ்வொரு நிமிடமும் எம்மை நாமே ஏமாற்றிக்கொள்கின்ருேம் இல்லையா?' என்று அவள் கன்னத்தைக் கிள்ளினுன்.

'ஏன் அத்தான்' என்று அவன் முகத்தைக் கரங்களில் ஏந்தி நிமிர்த்தினுள் கீதா.

'கீதா இன்பம் என்பது நாம் நினைக்குமளவிற்கு அனுபவிக்கும் பொழுது இருப்பதில்லை. மனதில் எழும் வேட்கையும் வேட்கையின் பால் எழும் உணர்வும் உடலை உணர்ச்சிப் பிழம்பாக மாற்றிவிடவே, அவற்றைத் தணிப்பதற்கு மனித உள்ளங்கள் முயலுகின்றன. அவற்றில் ஓர் ஆத்ம திருப்தி ஏற்படவும் செய்கின்றது' என்று அவன் கூறிய பொழுது அவனையே விழுங்கி விடுபவள் போலப் பார்த்துக்கொண்டு நின்றுள் கீதாஞ்சலி.

நாட்கள் நகர்ந்தன. வாரங்கள் கடந்தன. இரண்டு மூன்று மாதங்களுக்கு மேலாகி விட்டன.

பிரகாஷ் கீதாஞ்சலி தம்பதிகளின் வாழ்க்கைத் தேனறு கரை கடந்து பெருகும் இன்பத் தேனுருகப் பாய்ந்தது.

தனிமையில் காணும் இன்பத்தைவிட இரு அன்பு உள்ளங்களின் இணைப்பால் ஏற்படும் இன்ப விருந்தில் ஓர் மகத்துவம் இருப்பதை உணர்ந்தான் பிரகாஷ். ஆனால் கீதா—

அவளுக்கு உள்ளத்தில் நிம்மதி. முன்பு அனுபவித்த இன்பங்கள் யாவும் டப்பா சங்கீதம் போன்று கேட்ட போது சுவைத்தனவேயன்றி பின்னர் அவற்றின் இனிமையை அவளால் நினைத்தும் பார்க்க முடியவில்லை.

குடும்பத்தில் ஈடுபாடு கொண்ட பின்பு பிரகாஷின் உண்மை அன்பில் தோய்ந்து எழுந்து அனுபவிக்கும் இன்பத்தில் கர்நாடக சங்கீதத்தின் இனிய சுவையைக் கண்டாள். நினைக்கும் தோறும் அனுபவித்த இன்பத்தின் இனிய நிழலில் சுகித்திருந்தாள்.

பிரகாஷின் இன்ப வாழ்வைத் தானே அனுபவித்தவள் போன்று நினைத்து மகிழ்ந்தாள் புனிதம். என்ன தான் ஒருவனுக்கு நிச்சயம் செய்யப்பட்டவளாயினும், நிச்சயம் செய்யப்பட்ட கணவன் வேற்று நாட்டுக்குச் சென்ற பின்பு அவன் நினைவிலிருந்தாளாயினும் நேரே பிரகாஷின் இனிய வாழ்க்கையைக் காணும் பொழுது அவன் இன்பத்தைத் தானே அனுபவிப்பதாக மகிழ்ந்தாளாயினும் உள்ளத்தினுள்ளே ஓர் தவிப்பும்—ஏக்கமும்!

ஒருநாள் மாலை கல்லூரியில் பிரகாஷிற்கு அருகில் உள்ள நாற்காலியிலிருந்து கதைத்துக் கொண்டிருந்தாள். அவள் முகத்தில் கவலையின் ரேகை எதுவுமின்றி மகிழ்வோடு தானிருந்தாள். அவளுடைய மகிழ்ச்சியான வாழ்வைக்கண்டு கடவுளே பொறுமை அடைந்தான் போலும்.

''ஹலோ புனிதம் உமக்கு ஒரு தந்தி'' என்று கூறிக் கொண்டே வந்தாள் அருந்ததி.

''தந்தியா எங்கிருந்து......'' என்று கேட்டுக்கொண்டே தந்தியை வாங்கிப் படித்தவள் ''பிரகாஷ்'' என்று ஓரே ஒரு வார்த்தைதான் கூறினாள். அடுத்த கணம் திடீரென மயங்கிச் சாய்ந்தாள்.

அவளை மார்பிலே தாங்கி ஒரு கையால் அணைத்தபடி தந்தியைப் பார்த்த பிரகாஷிற்கு உலகமே சுழல்வது போன்றிருந்தது.

## அத்தியாயம் (12)

நாம் ஒன்றை நினைக்க தெய்வம் ஒன்றைச் செய்து விடுவது இயல்பாகிவிட்ட ஒன்று. இதுதான் விதி "என்று கூறுகின்றனரோ? நினைத்தது நடக்காமல் போவதால் தானே விதிப்படி நடந்துமுடியும் என்று சமாதானம் சொல்லி மனதை ஆற்றிக் கொள்கின்றனர் மனிதர்கள்.

தந்தியில் காணப்பட்ட வாசகத்தைப் படித்துவிட்டு மயங்கிவிட்ட புனிதம் சுய உணர்வடைந்ததும் முதலில் விதியை வெல்ல எவராலும் முடியாது என்ற தத்துவத்துக்கே முழு ஆதரவு கொடுத்தாள்.

அவளைவிட மனம் கலங்கியவன் பிரகாஷ்தான். அவனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. எதுவித சிந்தனையுமில்லாது ஓய்ந்து போன வெற்று மனத்துடன் புனிதத்தைப் பார்த்தான். அவள் இதழ்களில் முறுவல் மலர்ந்தது.

'புனிதம்......நீங்கள்......' பேசுவதற்கு வார்த்தைகளே தோன்ற வில்லை.

'பிரகாஷ், உங்களுக்கு ஆச்சரியமாயிருக்கின்றதா?'

'புனிதம், உன் வாழ்வே போய்விட்டது. நீ சிரிக்கின்றாயே உனக்கு என்ன பைத்தியமா?,

'பிரகாஷ், புனிதம் மாசுபடாத புனிதமாகவே இருக்கின்றாள். கணவன் என்ற ஒருத்தருடன் ஒப்பந்தம் செய்து கொண்டேனேயன்றி சேர்ந்து வாழவில்லை. உரிமை, உறவு கொண்டாடவும் இல்லை. தவிர அழுது விட்டால் வெளிநாட்டியேயே

இறந்துவிட்ட என் கணவர் எனப்பட்ட அவர் உயிர் பெற்று விடுவாரா என்ன?'

'இருந்தாலும் புனிதம் நீ......'

'நான் மனதில் புனிதமான ஒரு நினைவை வளர்த்தேன். அது கடமையினால் அழிந்து விட்டது என்று நினைத்தேன். ஆனால் புனிதம் புனிதமாகவே உடலையும், உள்ளத்தையும் வைத்திருந்தாள். வைத்திருப்பாள் என்ற நம்பிக்கை இப்போது பிறந்து விட்டது, என்று கூறிவிட்டு பிரகாஷைப் பார்த்தாள்.

பிரகாஷ் நிலத்தைப் பார்த்துக்கொண்டே நின்றான். அவன் கண்கள் நீரை உகுத்தன. 'என்ன பிரகாஷ்? என் சொல்லைக் கேட்க மறுத்தாளே இன்று வேதாந்தம் பேசுகின்றாளே என்று எண்ணுகின்றீர்களா? பெண்கள் சபலபுத்தி படைத்தவர்கள். திடீரென லட்சியம், கடமை என்று கூறி எதையாவது செய்துவிட்டு பின்பு நித்தம், நித்தம் வருந்திக் கொண்டே இருப்பார்கள். பொறுமையும், நிதான உணர்வும் கொண்டு சிந்திக்கும் திறனற்றுப் போகின்றார்கள், இயற்கையே பெண்ணுக்கு நிரந்தரமற்ற நிலையை வகுத்து வழியாக்கி விட்டது.'

'என்ன சொல்கின்றாய் புனிதம்?'

'உண்மைதானே? சிறு வயது முதலே பெற்றோர்கள் வீட்டில் செல்லமாக வளர்ந்துவிட்டு பருவமாகி கணவன் வீட்டை அடைந்ததும் அவள் நிலைமாறிவிடுகின்றது. அந்த நிலைகூட தாயாகி, பாட்டியாகி வரும் போதெல்லாம் மாறுகின்றது தானே? ஆனால்...'

'புனிதம்......நான்... அவசரப்பட்டுவிட்டேன் புனிதம்!'

'பிரகாஷ் உங்கள் நிலையை நீங்கள் எண்ணி சந்தோஷமடையுங்கள். நான் சந்தோஷமாயிருப்பதே உங்கள் மகிழ்ச்சியான வாழ்வைக் கண்டுதான் ஆகவே நீங்கள் கலங்கக் கூடாது என்றாள்,

'புனிதம் நீ......நீ......'

'நான் புனிதம் தான், ஆனால் நீங்கள் எனக்கு ஒரு வாக்குத் தர வேண்டும்.'

'என்ன புனிதம்?'

'நீங்கள் என்னைப் பற்றி கவலைப்படமாட்டேன் என்று.'

'புனிதம்? என்று துடித்தான் பிரகாஷ்.

'என்னில் உண்மை அன்பிருந்தால் நான் கேட்டபடி செய்யுங்கள்' என்று கையை நீட்டினாள்.

வேண்டா வெறுப்பாக அவள் கையை தன் கரத்தால் தொட்டு சத்தியம் செய்தான் பிரகாஷ்.

ஒருவர் துன்பத்துக்காகவோ, இன்பத்துக்காகவோ காலம் விரைந்து நிற்பதுமில்லை. இயற்கையின் நியதிக்கு ஏற்ப காலமும் சுழன்று கொண்டிருந்தது. நாட்கள் வாரங்களாகி வாரங்கள் மாதங்களாகி வருடம் ஒன்றைக் கடந்தும் விட்டது.

ஒரு வருடத்திற்குள் குறிக்கப்பட்ட மாறுதல்கள் பல நிகழ்ந்துவிட்டன.

யாருக்காக தன் மனதிலுள்ளவனை மறந்து வேறு ஒருவனுடன் வாழ்க்கை ஒப்பந்தம் செய்து கொண்டு, அவனையும் இழந்தாளோ அதே தாய் மகளின் நிலைகண்டு அதிர்ச்சி தாங்காது படுக்கையில் வீழ்ந்தால் ஒரு மாதத்திற்கிடையில் தன் வாழ்வையே முடித்துக்கொண்டாள்.

புனிதம் யாழ் நகரிலே, தன் ஊரோடு தங்கிக்கொண்டாள்.

பிரகாஷ் - கீதாஞ்சலிக்கு குழந்தையே இல்லாத குழப்பம் வேறு அவர்களை வாட்டிக் கொண்டிருந்தது.

பிரகாஷின் தங்கைக்கும், புனிதத்தின் அண்ணன் பாஸ்கருக்கும் அழகான ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அந்த குழந்தையை வைத்தே தன் காலத்தை சந்தோஷப்படுத்தி வந்தாள் புனிதம்.

கல்லூரியால் வந்த பிரகாஷ் வீட்டிற்குள் நுழைந்ததும் தங்கையும் மைத்துனரும் வந்திருப்பதைக் கண்டு மகிழ்ச்சி பொங்கி ''சுகுணு எங்கே என் மருமகன்? கூட்டிக்கொண்டு வரவில்லையா?'' என்ருன்.

'உங்கள் ரூமில் புனிதத்துடனிருக்கின்ருன்' என்ருன் பாஸ்கர்.

'எப்படி சௌக்கியகாயிருக்கின்றீர்களா? யாழ்ப்பாண புதினம் எப்படி?'

'புதினம் என்னண்ணு?, என்ற சப்புக்கொட்டினுள் சுகுணு.

'புனிதம் இங்கே யார் வந்திருக்கிறது என்று பாரேன்' என்னுன் ாபஸ்கர்.

'நானே போய் கூட்டி வருகின்றேன்' என்று அறையை நோக்கி நடந்தான்,

'வாருங்கள் பிரகாஷ்' எங்கே என்னை மறந்துபோவீர் களோ என்று எண்ணி விட்டேன்' என்று வரவேற்ருள் புனிதம்.

'புனிதம்! உங்களையா மறப்பேன். என் மனதில் நீங்காத நினைவாகப் பதிந்துவிட்ட உங்களை மறப்பது என்ருல்...மறந் தால் தானே நினைப்பதற்கு?'

'மாமா'

'அடே போக்கிரி. உனக்கு இது சொல்லித் தந்தது யாருடா?'

'அத்தே'

'வெறிகுட்' என்று அவனை வாங்கி மார்புடன் அணைத் தான். அவன் விழிகளில் நீர் முத்தாகச் சொரிந்தது.

'அடே கண்ணு. உனக்கு என்ன வேணும்?' என்று அவன் ஆப்பிள் கன்னத்தில் முத்தமிட்டான்.

'ம்......எனக்கு கார் வேணும் மாமா'

'ஓ......கே. கட்டாயம் வாங்கி வாரேன்' என்றான்.

'ஆளைப்பாருடா கண்ணா, ஒரு பெண்ணைப் பெற்றுக் கொடுக்க முடியவில்லை. காராம் கார்' என்றாள் புனிதம்.

புனிதம், நீ சொல்வது எனக்குப் புரிகின்றது. பெண்ணைப் பெறுவது என் கையிலா தங்கியிருக்கிறது.'

'என்ன இருந்தாலும் நீங்கள்......பிரகாஷ் யாராவது டாக்டரை கொன்சல்ட் பண்ணினீர்களா?'

'இல்லையே!'

'அந்த நினைவு என்றாலும் வந்ததா?'

'கிடையாது.'

'புத்தியாவது இருக்கா உங்களுக்கு?'

'புனிதம்' அவன் விழிகளில் மீண்டும் நீர் முத்துக்கள்.

'பிரகாஷ் நீங்கள் படித்தவர்தான். ஆனால்...என்ன பிரகாஷ் உங்களுக்கு ஒரு மகனோ—மகளோ பிறந்து, அந்த செல்வத்தை நான் இப்படித் தூக்கி வைத்து நீங்கள் கிருபாவின் கன்னத்தில் கொடுத்தது போல நானும் கொடுத்து மகிழும் நாள் எந்நாளாம்? சொல்லுங்கள் பிரகாஷ்? ஏன்டா கிருபா நீயே சொல்லு?'

'மாமா அழாதே மாமா'

'டேய் கண்ணா' அவனைக் கன்னத்துடன் அணைத்துக் கொண்டான் பிரகாஷ்.

'பிரகாஷ் நாளைக்கே கீதாவைக் கூட்டிச் சென்று லேடி டாக்டரிடம் ஒருமுறை - அல்லது நீங்களே......'

'புரிகிறது புனிதம். அப்படியே செய்கின்றேன்' என்றான் பிரகாஷ்,

'அண்ணா . அண்ணா' என்று அழைத்துக் கொண்டே உள்ளே வந்த சுகுணா அண்ணாவின் நிலையைக் கண்டதும் தயங்கி நின்றாள்.

'என்னம்மா?' என்றுன் பிரகாஷ்.

'அண்ணு உங்க மருமகன் கிருபாகரனைக் கேளுங்களேன் ஒரு கதை சொல்கிறுன்.'

'என்னடா போக்கிரி அம்மாவிடம் என்ன சொன்னுய்?'

'அதுதான் முன்பே கூறி விட்டானே. தனக்கு ஒரு காரும் காருடன் ஒரு...'

'அப்படியா? ம்' என்றுன் பிரகாஷ்.

'தருவீங்களோ மாமா?'

அவனுடைய கொஞ்சும் மழலை கேட்டு எல்லோருமே சிரித்தனர்.

'உங்களைப் போன்று அழகா நறுக்கி வைத்தாற் போல் பேசுகிறுன்' என்றுன் பாஸ்கர்.

'ஏன் அவன் அப்பா குறைந்தவரா? கிரிமினல் லோயராச்சே' என்றுன் பிரகாஷ்.

'அதெல்லாம் அவனுக்கு வேண்டாம். அண்ணனுடைய பேச்செல்லாம் சட்டத்துடனும் குத்து வெட்டுடனும். கிருபா உங்களைப் போலத்தான்...' என்றுள் புனிதம்.

'அவனுக்குக் குருவாக இருப்பதே நீங்கள்தானே' என்று புனிதத்தைச் சாடினுள் சுகுணு.

அன்றைய நிகழ்ச்சிகள் யாவும் முடிந்து விட்டன, மாலையிலேயே புனிதம், பாஸ்கர், சுகுணு பையன் கிருபாவுடன் யாழ் நகர் திரும்பிவிட்டன.

புனிதம் கூறிச் சென்ற ஒவ்வொரு வாக்கியமும் பிரகாஷின் நெஞ்சை அரித்துக் கொண்டிருந்தது. நிமிடத்துக்கு நிமிடம் அவன் வேதனை கூடியதேயன்றிக் குறைவதாகக் காணேம்.

'என்னத்தான் ஒரு மாதிரி இருக்கின்றீர்கள்?'

'என்னவா? நேற்று கொஞ்ச நேரம் இந்த வீடே மழையில் ஆழ்ந்து குலுங்கிற்றே ஞாபகமில்லையா?

ஏன் இல்லை?'

'நமக்கு மட்டும் கடவுள் இப்படி ஏன் வஞ்சகம் செய்கிறார்.

கீதா கலங்கினுள். அவளுடைய அழகிய நயனங்கள் கண்ணீரில் நனைந்து படபடத்தன.

'கீதா' என்று அவள் தலையை வருடினுன் பிரகாஷ்.

'ம்.'

'புனிதம் ஒரு யோசனை சொன்னுள்'

'என்னவாம்?'

'லேடி டாக்டரிடம் உன்னை...'

'அத்தான் வேண்டாம் அத்தான்' என்று திரும்பி அவன் மார்பில் முகம் புதைத்தாள்.

'பைத்தியம் ஏன் பயப்படுகின்ருய். சும்மா பரீட்சித்துப் பார்ப்பதுதானே' என்று சமாளித்தான்.

'கடவுளே கண் திறக்கவில்லையாம். டாக்டர்கள்' என்று கூறிஞளேயன்றி அவள் மனத்துள் இனந்தெரியாத ஒரு பயம் பூதாகர உருவமெடுத்து தன்னை அமுக்க வருவதாக உணர்ந்தாள்.

கடந்த காலத்திய பயங்கரங்கள் ஒன்று சேர்ந்து பெரும் குகை வாயிலாய் வாய் பிளந்து நிற்க அதனுள்ளிருக்கும் இரகசியங்களையெல்லாம் பிரகாஷ் பார்த்து விட்டு தன்னைக் கொல்ல வருவது போன்ற காட்சி அவள் மனத்தில் தோன்றியது.

'அத்தான்... அத்தான்... என்னை... என்னை' என்று கூறி மயங்கி தடால் எனச் சாய்ந்தாள் கீதா.

## அத்தியாயம் (13)

தனி மனித வாழ்வில் மறைப்பதற்கென முயற்சிக்கும் சில காரியங்கள் மற்றவர்கள் அறிந்து விடுவார்களோ என்ற ஐயப்பாடு தோன்றும் பொழுது மனதில் பல ஹீனமும் தோன்றி விடுகின்றது. அத்தகையதொரு ஐயம் கீதாவின் மனதில் தோன்றிய அதே வேளையில் கடந்த காலமும் எதிர் காலமும் சேர்ந்து திசை தெரியாத ஓர் சூனியப் பெரு வெளியாக பயங்கர இருட் குகையாய்த் தோன்றிற்று. உடனேயே அவள் மயக்கம் போட்டு விழுந்து விட்டாள்.

என்ன செய்வதென்று தெரியாது பதறி விட்டான் பிரகாஷ். சில சினிமாக் காட்சிகளில் வருவது போன்று கதாநாயகி மயக்கம் போட்டதும் டாக்டர் வந்து பார்த்து உங்களுக்கு குழந்தை பிறக்கப் போகின்றது என்று சொல்வது

போலத்தான் தன் மனைவியின் நிலையும் இருக்குமோ என ஐயுற்றவன் உடனே லேடி டாக்டருக்கு போன் செய்தான்.

சில நிமிடங்களிலேயே டாக்டர் வந்து விட்டார். தனியாக அவளைப் பரிசோதனை செய்தார்.

பிரகாஷ் வெளியே இருந்தானாயினும் அவன் மனம் நிலையின்றித் தவித்தது. டாக்டர் சந்தோஷச் செய்தியுடனேயே வருவார் என்று நம்பினான்.

டாக்டர் அறையை விட்டு வெளியே வந்து 'மிஸ்டர் பிரகாஷ்' என்றாள்.

'என்ன டாக்டர்........?என்றான் ஆவல் மேலிட்டவனாய்

ஏதாவது அதிர்ச்சி தரும் செய்தி கூறினீர்களா?'

'டாக்டர் மனைவிக்கு?'

'ஒன்றுமில்லை மிஸ்டர் பிரகாஷ். மயக்கம்தான். இன்னும் சில நிமிடங்களில் சுகமாகிவிடும்'

'டாக்டர் என்று கூறியவன் நடந்த விடயங்களை கூறி முடித்து விட்டு டாக்டரின் விழிகளை நோக்கினான்.

'மிஸ்டர் பிரகாஷ் உங்கள் மிஸ்ஸிஸ்சையும் கூட்டிக் கொண்டு ஹாஸ்பிட்டலுக்கு வாருங்கள். உங்களுக்கு வசதியான நேரம்' என்று கூறிவிட்டுச் சென்றாள்.

டாக்டர் சென்ற பின்பு பிரகாஷ் சென்று கீதா படுத்திருந்த கட்டிலின் ஓரத்திலிருந்தான். அவளுடைய முகத்தையே கூர்ந்து பார்த்தான்.

அழகான சந்திரபிம்பத்தில் காணப்பட்ட களங்கம்போல அவள் முகத்தின் கருவிழிகளைச் சுற்றிவர உள்ள கருமையான வளையம் அந்த விழிகளையே அசிங்கப்படுத்திக் காட்டியது.

அவளையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த அவனுடைய விழிகளில் நீர் முத்துக்கள் பொல பொலவென உதிர்ந்து அவள் முகத்தில் விழுந்து தெறித்தன.

'கீதா கீதா' என்று அவள் தலையை வருடினான்.

அவள் இமைகள் படபடத்தன. உதடுகள் அசைந்தன. 'அத்தான் அத்தான்' உதடுகள் அழைக்க முயன்றபோதும் ஒலி எதுவும் பிறக்கவில்லை.

'கீதா—கீதா'

'ம், அவள் கண்கள் பரிவுடன் அவனைப் பார்த்தன.

'என்ன கீதா?'

ஒன்றுமில்லை அத்தான் பயந்துவிட்டீர்களா?'

'இருந்தாற் போல மயங்கி விழுந்தால் பயப்படாமல் என்ன செய்வதாம்?'

'அத்தான்' என்று எழுந்த அவளை அணைத்துக் கொண்டான்.

'டாக்டர் வந்தது முதல் நடந்த காரியங்களை ஒவ்வொன்ருக அவன் கூறி முடித்தபோது 'நீங்கள் சரியான பயந்தவர்' என்ருள் கீதா.

'என்ன கீதா நீ மயங்கிக் கிடக்க என்னைப் பார்த்துக் கொண்டிருக்கும்படி கூறுகின்ருயா?'

'என்மீது உங்களுக்கு எவ்வளவு பிரியம் என்பதை செயல் மூலம் உணர்த்துகின்றீர்கள் அப்படித் தானே?'

'பைத்தியம் பைத்தியம். உன்னில் நான் அன்பு இல்லையென்ருல் கல்யாணம் செய்திருப்பேனு?, என்று அவள் கரங்களைப் பற்றி தன் கன்னத்துடன் அணைத்தான்.

'அத்தான் என்னைக் கை விடமாட்டீர்களே'

'கீதா இது என்ன பைத்தியக்காரத்தனம்' என்று அவளை இழுத்து இறுக அணைத்துக் கொண்டு கண்ணீர் விட்டான்.

'அத்தான்'

'ம், என்ன கீதா,'

'உண்மையாகவே ஆஸ்பத்திரிக்குப் போகத்தான் வேண்டுமா?'

'ஆமாம் ஏன் கீதா. போவதினால் உனக்கு ஏதும் கஷ்டமா?'

'இல்லை.'

'அப்புறம் ஏன் பயப்படுகின்றாய்?'

'வந்து.........'

'என்ன வந்தும் போயும். ஒரு முறை பரீட்சை செய்து தான் பார்த்து விடுவோமே. அதனால் என்ன வந்து விடப் போகின்றது?' என்று அவளைத் தேற்றினான் பிரகாஷ்.

மறுநாட்காலையே டாக்டரிடம் சென்று வந்தனர் பிரகாஷ் தம்பதிகள். வரும் பொழுது பிரகாஷ் முகத்தில் ஒளியில்லை. அவன் ஆழ்ந்த யோசனையில் ஆழ்ந்து போனவனாகக் காணப் பட்டான்.

'அத்தான்.'

'ம்'

'என்ன சொன்னார்கள்?'

'ஒன்றும் பேசாமல் வாரும்; வீட்டிற்குப் போன பின்பு ஆறுதலாகக் கதைக்கலாம். உன் நிலை பற்றி எதுவுமே டாக்டர் கூறவில்லை என்றான்.

'மனிதரால் ஆகக் கூடியது எதுவுமேயில்லை அத்தான்.'

அவள் கூறிய எதுவும் பிரகாஷின் செவியில் விழவில்லை. அவன் மனம் சுற்றிச் சுழன்று கொண்டிருந்தது.

லேடி டாக்டர் கூறிய விடயங்கள் அவன் மனதைக் குடைந்து கொண்டிருந்தன. கீதா டாக்டரிடம் வர மறுத்த தற்கும், டாக்டர் கூறிய விடயத்துக்கும் தொடர்பு இருக்க வேண்டும். இல்லையெனில் கீதா டாக்டரிடம் வர ஏன் மறுக்க வேண்டும்? கீதாவிடம் கேட்டறியலாம் என்றால் கீதாவின் மனத்தைத் துன்பப்படுத்தும் எண்ணம் அவனுக்கு இருக்க வில்லை.

இரவு வெகு நேரமாகி விட்டது. முன்னிரவு முடிந்து தேய்பிறைச் சந்திரன் கீழ் வானில் மேலெழுந்து கொண்டி தான். பிரகாஷிற்கு உறக்கம் வரவில்லை. ஆனால் கீதா அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தாள்.

அவளைப் பார்த்தால் கள்ளங் கபடமற்றவளாகத் தோன்றினாள். மனதில் எதுவித கவலையுமின்றிக் காணப் பட்டாள். அவளைப்பற்றி தவறாக நினைத்துப் பார்க்கவும் அவ னால் முடியவில்லை. "கடவுளே! நான் யாருக்கு என்ன கொடுமை செய்தேன். என்னை ஏன் இப்படித் தடுமாற வைக் கின்றாய்? என் வாழ்வே சூனியமாகி விடுமா?'' என்று வாய் விட்டே கதறி அழுதான்.

விழிகளிலிருந்து பெருகிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டே கட்டிலில் சாய்ந்தான்.

காலை விடிந்தது. கீதா நேரத்துடனே எழுந்து விட்டாள் என்பதைக் கண் விழித்த பொழுதுதான் உணர்ந்தான் பிர காஷ். தலை விண்ணென்று வலித்தது. இமைகள் கனத்தன. எழுந்திருக்கவே முடியாத நிலையில் மீண்டும் படுத்துக் கொண் டான்.

காலைக்கடன்களை முடித்துக்கொண்டு படுக்கையறைக் குள் நுழைந்த கீதா கணவன் எழுந்திருக்காததைக் கண்ட தும் பதறிக்கொண்டோடி ''அத்தான்'' என்றாள்.

'கீதா,

'என்னத்தான்'

'தலைவலிக்கின்றது கீதா'

'நெருப்பாய் கொதிக்குதே' என்று அவன் தலையை வருடி விட்டாள்.'

'அத்தான் இரவு பூரா யோசித்துக்கொண்டிருந்தீர் களா?'

'ஹ்கும்'

'அப்புறம் ஏன் அத்தான் தலைவலி வருகுது?'

'என்ன கீதா' என்று சிரித்தான்.

அவனுடைய புன்சிரிப்பையே பார்த்துப் பழகிப்போன கீதாவிற்கு அவனுடைய வேதனை நிறைந்த சிரிப்பின் பின்னே ஏதோ மறைந்திருப்பது போன்ற பிரமைமேவி' எனக்கு எல்லாம் தெரியும் அத்தான்' என்ருள்,

'என்ன தெரியுமாம்?'

நேற்று டாக்டரிடம் போனது முதலே நீங்கள் ஏக்கத்துடன் திரிவதை நான் அவதானித்தேன்'

'ஆகவே'

'உங்களுக்கு எதற்கும் கேலிதான் போங்கள்'

'என்ருல் எழுந்திருக்கவே முடியவில்லையே. எங்கே போவேன்?'

'ஒரு இடமும் போகவேண்டாம். நான் எல்லாம் இங்கேயே கொண்டு வருகின்றேனே' என்று கூறிவிட்டுச் சென்ருள் கீதா.

பிரகாஷின் மன அலைகள் ஆர்ப்பரித்து மோதின. அவன் மனத்துள் புழுங்கும் விடயத்துக்கான காரணத்தை எப்படியோ அவள் அறிந்துவிட்டாளாயினும், எப்படி அவளிடம் டாக்டர் கூறிய விடயத்தைக் கேட்பது என்று புரியவில்லை.

ஈருடல் ஓர் உயிர் ஓர் உணர்வு என்று உறவாடிய அவளிடம் டாக்டர் கூறிய விடயம் பற்றிக் கேட்டுவிட்டால் குடும்பத்தில் சந்தேகப் பேய் புகுந்துவிடுமே எனப் பயந்தான் பிரகாஷ்.

கணவன் மனேவியருக்கிடையில் கூட ஒருவருக்கொருவர் தெரியாத இரகசியங்கள் மறைந்திருக்கின்றனவா? எனக்குத் தெரியாமலே என் மனைவி இக் காரியத்தைச் செய்திருப்பாளா? அப்படிச் செய்யக் காரணம் எதுவுமிருப்பதாகவும் பிரகாஷிற்கு புரியவில்லை.

'அத்தான் பல்லை விளக்கி விட்டு முகத்தை கழுவுங்கள் என்று கூறிக்கொண்டே உள்ளே வந்தாள் கீதா'.

'கீதா......'

'ம்'

'கொலிஜ்சுக்கும் போன் செய்துவிடு லீவுக்கு.'

'சரி அத்தான்' என்று கூறி விட்டுபோன் செய்யச் சென்றாள் கீதா.

மாலை வெய்யிலின் மஞ்சள் நிறம் பார்க்குமிட மெல்லாம் பொன்மயமாக காட்சியளித்தன. சாய்வு நாற்காலியில் படுத்துக் கிடந்தான் பிரகாஷ். வேறு நாற்காலியில் ஆழ்ந்த யோசனை வசப்பட்டவளாய் சோர்வுற்றுக் காணப்பட்டாள் கீதா. அவள் மனவானில் பல்வேறு எண்ணச் சுழல்கள். வேதனைக் கீறல்கள், துன்பச் சுமையின் அழுத்தல்கள்.

முதல் நாளே கணவனுக்குச் சுகயீனம் என்று அவள் அக்காளுக்கு எழுதி விட்டாள்.

இரவு நெருங்கிக்கொண்டு வந்தது. இரவின் பயங்கரத்தை நினைக்கவே அவள் மனம் பயந்தது. கணவன் நோயினால் துன்புற்றிருக்கும் பொழுது அவளால் இரவின் தனிமையைப் பொறுத்து வாழ முடியவில்லை. ஆகவே இரவு வரப் போவதை எண்ணிப் பயந்தாள்.

சில மனிதர்களுக்கு அசுரப்பசி இருப்பது போன்று சிலருக்கு அசுர உணர்வுகளை தன்னிலைப்படுத்தி ஆளும் தன்மை அவர்களுக்கு இருப்பதில்லை. அந்தவகையில் ஒருத்தி தான் கீதாவும் என்பதை அவளே உணர்வாள். மற்றவர்களுக்கு ஏனோ அது புரியவில்லை!

அன்று காலை விடிந்தது முதலே அவள் உள்ளம் தடுமாறிக்கொண்டிருந்தது. அவளுக்கு கணவன் மீதிருந்த பாசம் அத்தனையும் பயமாக மாறிவிட்டபோது அவன் நீதியின் காவலனாக அவளுக்குத் தோற்றமளித்தான்.

பிரகாஷைப் போன்ற ஓர் அன்புக் கணவனைப் பெறுவதென்பது எல்லோருக்கும் எளிதான காரியமன்று. கிடைத்தற்கரிய ஒருவனைக் கணவனாகப் பெற்றாள். குழந்தையில்லாப்

பிரச்சினை அவளுக்கு ஒரு யமனாக வந்து தொலைத்துவிட்டது. அந்தக் கணம் முதல் கீதா கலங்க ஆரம்பித்தாள். கணவன் மீது கொண்ட அளவிடற்கரிய பாசம் அவள் உள்ளத்தில் பயத்தையே தோற்றுவித்துக் கொண்டிருந்தது.

'கீதா'

'என்னங்க......' எழுந்து அவன் படுத்துக் கிடந்த சாய்வு நாற்காலியருகில் சென்றாள்.

'கீதா' நான் உன் மீது வைத்திருக்கும் பாசம் தூய்மையானது. களங்கமற்றது என்றும், எப்பொழுதும் மாறாதது என்றும் தெரியும் தானே?'

'அத்தான் நான்......தங்களையே என்னுயிராக மதிக்கின்றேன். நீங்கள் என்னைச் சாகச் சொன்னாலும் இந்த நிமிடமே செத்துவிடுகின்றேன். உங்கள் மீது நான் வைத்திருக்கும் பாசம் இந்த உலகில் வேறு எவர் மீதும் இல்லை அத்தான்'

'கீதா' நான் உன்னிடம் ஒன்று கேட்கப் போகின்றேன் உண்மையைச் சொல்ல வேண்டும்.

'கேளுங்கள் அத்தான்,

'நீ குழந்தையை விரும்பவில்லையா?'

'குழந்தையை விரும்பவில்லையா? யார் உங்களிடம் அப்படிச் சொன்னதாம்?'

'அப்படி என்றால் குழந்தைகளைவிட உன் உடல் வனப்பை அதிகம் விரும்புகின்றாய், இல்லையா?'

'இது என்ன கேள்வி அத்தான்.

'அப்படியானால் அளவுக்கு அதிகமான கருத்தடை வில்லைகளை நீ ஏன் பாவித்தாய்?'

'அத்தான்' என்றவளால் மேற்கொண்டு எதுவும் பேசத் தோன்றாமல் விழிகளில் நீர் மல்க அவனையே பார்த்துக் கொண்டு நின்றாள்.

# அத்தியாயம் (14)

வாழ்க்கையின் ஆனந்தமான பகுதியை மட்டும் பிரகாசுடன் அனுபவித்த அவளுக்கு பயங்கரமான பகுதியின் ஆரம்பம் தொடங்கி விட்டதாகவே கருதினாள். ஆகவேதான் எதுவுமே பேசத் தோன்றாதவளாக நின்றாள்.

அவனிடம் பொய் பேசினால் அதற்குரிய பலனை அனுபவிக்க வேண்டும் என்ற உண்மையை ஏற்கனவே அறிந்து கொண்டதாலே அவனிடம் பொய் பேசும் துணிவு ஏற்படவில்லை. ஆனாலும் முழுதாக உண்மை பேசவும் அவள் தயாராய் இல்லை. ஆகவே அப்போதைய சூழ்நிலையைச் சமாளிப்பதற்காக ஒரு சொட்டுக் கண்ணீரைச் சிந்தி விட்டபடி நின்றிருந்தாள்.

'என்ன கீதா நான் கேட்டதற்குப் பதில் இல்லையா?'

'அத்தான். நான்......நான்......

'நீ கருத்தடை வில்லைகளைப் பாவித்ததை எப்படி அறிந்து கொண்டேன் என்றுதானே கேட்கின்றாய். டாக்டர் தான் கூறினார். நான் ஏற்கனவே என்னைப் பரிசோதித்தறிந்து கொண்டேன். ஆகவேதான் உன் நிலையையும் அறிந்து கொள்ள விரும்பினேன். உன்னிடம் எப்படிக் கேட்பது என்று நான் தயங்கிய பொழுதுதான் புனிதம் வந்தாள் அவள் கேட்ட வேளையில் உன்னைக் கேட்டேன். நீ மறுத்ததற்கும் டாக்டர் சொன்னதற்கும் சம்பந்தமிருப்பதாகத்தான் நான் நம்புகின்றேன்.'

'தெரியாத்தனமாக சில......

'கீதா' படித்த பெண்களெல்லாம் நாகரீகத்தின் பெயரால் இப்படித்தான் தவறுகள் செய்கின்றனர். நீ படித்தவள் பண்புள்ளவள் என்று நம்பினேன். நானு பண்புள்ளவள் என்று

கேட்க வேண்டும் போலிருந்தது கீதாவுக்கு. ஆனால் எதுவுமே பேசாமல் மனதை அடக்கிக்கொண்டு விம்மினாள்.

'அத்தான் தெரியாத்தனமாகச் செய்து விட்டேன் என்னை மன்னித்து விடுங்கள் என்று அவன் பாதங்களைப் பற்றிக்கொண்டே அழுதாள்.

'கீதா திருமணமான பின்பா அதற்கு முன்பா உபயோகித்தாய்?'

'திருமணத்துக்கு ஒரு மாதத்திற்கு முன்பு'

'கருத்தடை வில்லைகளை தந்தது யார்?'

'அக்கா'

'ஓ...... அதுதான் அவள் வருடம் ஒரு குழந்தை பெறுகின்றாளோ?'

'அத்தான் நீங்களா......'

'நானா இப்படிப் பேசுகின்றேன் என்று கேட்கின்றாய். இல்லையா? என் மனைவியான நீ இப்படிச் செய்யும் பொழுது நான் கேட்டதில் என்ன தவறு கண்டாய்? எதற்காக கருத்தடை வில்லைகளை உட்கொண்டாய் என்பது உனக்கே தெரியாதா?!

'அத்தான்!' நடுங்கினாள் கீதா.

'நான் மன்னித்தாலும் கடவுள் உன்னை மன்னிக்க மாட்டார் கீதா. திருமணம் என்பது ஒரு தெய்வீக உறவு. முன்னர் அறிமுகமில்லாத இருவரின் சங்கமத்தில் தோன்றும் புதிய உறவில் ஓர் ஜீவப்படைப்பே நிகழ்கின்றது. இக்காரணத்தினால் தான் திருமணத்தைப் புனிதச் சடங்கு எனக் கொள்கின்றனர். நீயோ! என்ன செய்து விட்டாய் கீதா' விழிகள் கலங்கிக் குளமாகின.

'அத்தான் உடம்பு சுகமில்லாத வேளையில் இப்படி மனதை அலட்டிக்கொள்ளாதீர்கள்'

வெளி வாசற் கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. உடனே கீதா எழுந்து சென்று கதவைத் திறந்தாள்.

'என்ன கீதா? பிரகாஷிற்கு சுகயீனம் என்று எழுதினீராம். உங்கள் அக்கா வரமுடியாத நிலையில் என்னைத் தனியே போய்ப் பார்த்து வாருங்கள் என்று நச்சரித்தாள்.,

'வாருங்கள்'

'என்ன கீதா ஒரு மாதிரி இருக்கின்றாய்?'

என்ன......' என்று கேட்டவள் எதுவுமே பேசாமல் சென்றாள்.

'ஓ......நீங்களா வாருங்கள்' என்றான் பிரகாஷ்.

'சுகயீனம் என்று......' என்றான் அருமைநாயகம்.

'மனைவியோ, பிள்ளைகள் யாரும் வரவில்லையா?'

'இல்லை. மனைவி பஸ்ஸில் பிரயாணம் செய்யமுடியாது.'

'ஓ......மறந்துவிட்டன்,

'அது சரி என்ன சுகயீனம்?'

'சும்மா மனம் சரியில்லை.'

'உங்கள் மனைவி கூட கருத்தடை வில்லைகளை உபயோகித்தார்களா?'

'என்ன கேட்டீர்கள்.'

நடைபெற்ற விடயங்களைப் பிரகாஷ் கூறியபொழுது அருமைநாயகம் பதறிப்போனான். எதுவும் செய்ய முடியாத நிலை.

'மிஸ்டர் பிரகாஷ். இதையெல்லாம் பெரிது படுத்தாதீர்கள்' என்று ஆறுதலளித்தான்.

இரவு அமைதியாய் உறங்கிக்கொண்டிருந்தான் பிரகாஷ். அதே வேளையில் ஓர் அறையில் அருமைநாயகம் பிரகாஷ் கூறிய விடயங்களை கீதாவுடம் கூறிக்கொண்டிருந்தான்

'கீதா நீ ஒன்றுக்கும் யோசிக்காதே. எல்லாம் நான் கவனித்துக் கொள்கின்றேன்' என்று கூறிவிட்டு எழுந்தான்.

அதே வேளையில் அறையில் எரிந்து கொண்டிருந்த மின் சாரம் திடீரென அணைந்தது.

'கீதா' என்று அவள் கரங்களைப் பற்றினான் அருமை நாயகம்.

'என்ன இது விடுங்கள் கையை' என்றாளே தவிர அவ னிடமிருந்து கையைப் பறித்துக்கொள்ளவில்லை.

அடுத்த கணம் இருளினூடே அவள் இடுப்பைச் சுற்றி வளைத்து வருடியது ஓர் கரம். கீதா தன்னை மறந்தாள் சில நாட்கள் கணவனுடன் உறவு எதுவுமின்றியிருந்ததினால் ஏற் பட்ட உணர்ச்சிக் கொந்தளிப்புகள், முட்டி மோதி அமைதி பெற விளைந்தன.

மின்சாரக் கோளாறினால் அணைந்துவிட்ட மின் விளக்கு திடீரென ஒளி வீசியபோது கீதா மிரண்டுவிட்டாள். உணர் வுப் போதையினால் மயங்கிப் போன மூளையும். விழிகளும் சுய உணர்வுற்ற போது அந்த அறையில் உள்ள பிரகாஷின் படம் அவளைச் சுட்டெரித்துவிடுவது போன்று பார்ப்பதாக உணர்ந்தாள். அந்த அறையைவிட்டு வெளியே ஓடினாள். பிர காஷ் நிலத்தில் விழுந்து துடித்துக்கொண்டிருந்தான்.

உணர்வுகள் செத்து மடிந்துவிட்ட நிலையில் கீதா விம்மி னாள். பிரகாஷின் நிலை அவளை நிலைகுலையச் செய்து விட்டது அவன் மீது அவள் உயிரையே வைத்திருந்தாள்' ஆனால்...... ஆனால்......?

'அத்தான்......அத்தான்......'

பிரகாஷ் கண்களை மெல்லத் திறந்தான். அவளை உற்றுப் பார்த்தான். அந்தப் பார்வை அவளைச் சுட்டுப் பொசுக்கி விடுவது போன்றிருந்தது.

'அத்தான். ஏன் அத்தான் எழுந்திர்கள்.'

'நீ எங்கே போயிருந்தாய்?'

அவள் அடிவயிற்றில் தீப்பற்றி எரிவதுபோன்றிருந்தது. நாடி நரம்புகளில் ஓடிய அசுர உணர்வுகள் வேட்கைப்

போராட்டத்தில் இழந்துவிட்ட நிலையில் தடுமாறிய அவள் மனம் அவனுடைய கேள்வியால் நிலைகுலைந்துவிட்டது.

'அத்தான் நான்......நான் பாத்ரூமிற்கு'

'ஓ......நான்......கூட அங்கே போவதற்குதான் வந்தேன் கால் தடுமாறிவிட்டது' என்றான்.

பெண்கள் பார்ப்பதற்கு பாவிகளாயிருந்தாலும், பாவத்துக்குத் துணிந்தவர்கள். இந்த உலகில் எதற்குமே அஞ்சாத துணிகரப் பேர்வழிகள், அவள் தான் தப்பிக்கொள்வதற்காக எதையுமே செய்யத் தயங்காள். எந்தப் பொய்யையும் துணிகரமாகச் சொல்வாள். ஆனால்—?

இதோ பிரகாஷிடம் உயிரையே வைத்தாள். அவனிடம் வைத்த பாசம் அவளைப் பைத்தியக்காரியாக்கி விட்டிருக்கும்—திருமணம் நடந்திருக்காது போனால். ஆனால் ஏனோ அவள் உணர்வுகள்......?

'கடவுளே நான் பெரிய கொடுமைக்காரி. அவர் சுகயீனத்துடன் போராட நான்...... நான்......என் மனம் ஏன் இப்படி......சீ......சீ......அவள் தன்னையே வெறுத்தாள். அவன் தன்னை வெறுப்பானோ என்று பயந்தவள் தன்னையேதான் வெறுக்கத் தொடங்கினாள். அதே வேளையில் பொலிடோலோ வேறு ஏதும் இருந்திருந்தால் பருகித் தன்னை அழித்துக் கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால் பிரகாஷ் அவனிடம் அன்பு காட்டும்வரை, அவனை அவளால் வெறுக்கவோ, பிரிந்து போகவோ முடியாது.

காலையில் வந்த கடிதங்களைப் பிரித்துப் படித்தபோது புனிதத்துக்கு தலையே சுழல்வது போன்றிருந்தது. கலங்கிய விழிகளுடன் படுத்திருக்கும் பிரகாஷின் எழிற்கோலத்தை தன் நினைவில் நிறுத்திப் பார்த்தாள்.

'பிரகாஷ்' அவள் குரலில் அவனுடைய பெயரை உச்சரிக்கும் போது ஓர் தனித்துவமான மயக்கக் கிறக்கம்.

வாழ்க்கை மனிதர்களுக்காக அமைக்கப்பட்ட ஒரு போட்டிப் பரீட்சை. அதில் பரீட்சை எடுக்காமலே தோற்று விட்டாய் நீ. நான் பரீட்சை எடுத்தே தோற்றுவிட்டேன். என்று ஆரம்பித்து, மனைவியின் கோளாறுகள் பற்றி எழுதியிருந்தான்.

'புனிதம். நீ என் புனிதமாக அன்று சம்மதம் தந்திருந்தால் இன்று எங்கள் நிலையைக் கற்பனை செய்துபார்.

புனிதத்தின் நினைவுகள் சிலந்தி வலை பின்ன ஆரம்பித்து விட்டன. பிரகாசுடன் அவள் மானசீகமாக உறவாடினுள். இருவரும் ஒன்ருக இணைந்து, பிணைந்து பறந்தார்கள்.

வாழ்வின் ஒவ்வொரு சிறு சிறு அணுவையும் அனுபவித்தார்கள்'

'புனிதம்......நீ......என்......

'பிரகாஷ்' அவன் சுருண்ட முடிகளை வருடிவிட்டாள். அதற்கு மேல் அவனால் நினைத்தும் பார்க்க முடியாது போய் விட்டது.

மீண்டும் கடிதத்தைப் படித்தாள். அவனுடைய ஒவ்வொரு வசனமும் அவள் இன்ப உணர்வுகளை சுண்டிவிட்டு இனிய நாதம் எழுப்பின.

'புனிதம் நீ உன் தாயின் வேண்டுகோளுக்காக என் கோரிக்கையை நிராகரித்தபோதும் நான் அவசரப்பட்டு விட்டேன். அதற்கான பலனை அனுபவிக்கிறேன்.'

'இல்லைப் பிரகாஷ் இல்லை. நான்தான் அவசரப்பட்டு விட்டேன்.

அம்மாவின் நலனைக் கருத்தில் கொண்டு முதலில் ஓம் சொல்லிவிட்டபோதும் நிமிடத்துக்கு நிமிடம் நான் செத்துக் கொண்டு தானிருந்தேன். அதுமட்டுமல்ல நீங்கள் தனித்திருந்தால் என்மனம் தடுமாறிடுமோ என்றுதான் உங்களைத் திருமணம் செய்ய வற்புறுத்தினேன். நான் எதற்காக அம்மா கூறியதிருமணத்தை ஏற்றுக்கொண்டேனே அதே திருமணம் என்னையும் ஏமாற்றி, எதற்காக நான் வாழ்வைப் பலியிட்

டேனே அதையும் கெடுத்துவிட்டது. விதிப்படி நடக்கும் என்பதை மறந்து நான் தியாகம் செய்தேன் என் வாழ்வை விதி விட்டதா? என்னையே நான் ஏமாற்றி கொண்டேன் பிரகாஷ் என்னையா நான் ஏமாற்றினேன். இல்லை! இல்லை! என்னை நம்பிய உங்களையும் துன்பத்தில் பிடித்துத் தள்ளிவிட்டேன். என்னை மன்னித்துவிடுங்கள்,'' அவள் வாய்விட்டே குமுறி அழுதாள்.

அவள் கூறிய ஒவ்வொரு வார்த்தையையும் கேட்டுக் கொண்டே பின்னுல் வந்து நின்ற உருவத்தை புனிதம் பார்க்க வில்லை.

மிகுதிக் கடிதத்தையும் படித்து முடித்துவிட்டு நிமிர்ந்தவள் தன்னையே பார்த்துக்கொண்டு நிற்கும் உருவத்தைப் பார்த்ததும் துணுக்குற்று விட்டாள்.

நீங்கள்...... நீங்கள்......' என்று தடுமாறிய புனிதத்தைப் பார்த்து மேலும் கீழுமாகத் தலையாட்டிய அவ்வுருவம் வெளியே சென்றது,

பித்துப் பிடித்தவள் போன்று எழுந்து ஓடினுள் புனிதம்,

## அத்தியாயம் (15)

நிர்மலமான குளம் போல விளங்கிய புனிதத்தின் உள்ளத்தினுள்ளும் பல சூட்சுமச் சுழிகள் இருக்கின்றதென்பதை அவள் பிரகாஷின் கடிதத்தைப் படித்துவிட்டு பிதற்றிய போது உணர்ந்து கொண்டான் பாஸ்கர். ஆகவே தான் தன் அறைக்கு அவன் திரும்பினுன். அதற்கிடையில் 'அண்ணி அண்ணி' என்று புனிதம் சுகுணு இருக்குமிடம் நோக்கி ஓடியதையும் பாஸ்கர் கண்டான்,

புனிதம் சுகுணாவை அண்ணி என்று அழைத்துப் பழகி விட்டாலும் புனிதத்தை அவள் அக்கா என்றே அழைத்தாள் தன்னை நோக்கி கலங்கிய கண்களுடன் ஓடிவந்த புனிதத்தை 'என்னக்கா என்ன நடந்தது? ஏன் ஓடிவந்தீங்க' என்றாள் சுகுணா.

அண்ணனுக்கு ஒரு இரகசியம் தெரிந்துபோச்சு- என்னைப்பற்றி தவறாக நினைக்கப் போகிறார். ஆகவே என்னுடைய கதையைக் கொஞ்சம் சொல்லி வையுங்கள். இதற்காக வேறு எந்த முயற்சியும் எடுக்க வேண்டாம் என்று கூறுங்கள்' என்றாள்.

'இதற்காகவா இப்படிப் பதறி அடித்துக் கொண்டு ஓடி வந்தீர்கள் அக்கா!

'ம்.........ம்' என்று தலையை ஆட்டினாள்,

'அக்கா என்னதான் நீங்கள் பட்டம் பெற்றவளானாலும் பெண் தானே?' என்று கேலி செய்தாள் சுகுணா.

'என் நிலமை தெரியாமல் விளையாடாதீங்கள்'

,அக்கா நீங்கள் கோபப்படாதீர்கள். விரைவில் உங்களுக்கு......'

'அண்ணி. இதற்காகத்தான் உன்னிடம் வந்தேன். நீங்களே அண்ணனுக்கு புத்தி சொல்லித் தூண்டி விட்டாலும் விடுவீர்கள் போலிருக்கே' என்றாள் புனிதம்.

'அப்புறம் உங்கள் திட்டம் தான் என்ன?'

'திட்டமென்ன திட்டம். முடிந்து விட்ட கதை இனித் தொடராது' என்றாள் புனிதம்-

'அக்கா நீங்கள் பாருங்களேன், நீங்களே மனம்மாறி ஒரு நாளைக்குத் திருமணம் செய்து கொள்ளத்தான் போகின்றீர்கள்' என்றாள் சுகுணா,

'அப்படி வருகிற வேளையில் உங்களுக்குத் தெரியாமல் எதுவும் நடக்காது' என்றாள் புனிதம்.

'சரி இருந்துதான் பார்ப்போமே' என்று சிரித்தான் சுகுணு.

அவர்கள் சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டே நின்ற பாஸ்கர் உள்ளே வந்தான். புனிதம் மிரண்டு போய் சுகுணுவைப் பார்த்தாள். அவள் சிரித்தபடியே நின்றிருந்தாள்.

'புனிதம் உன் இஷ்டத்துக்கு விரோதமாக நான் எதுவுமே செய்யமாட்டேன். நீயே என்னிடம் சொல்லியிருக்கலாம். இதற்கெல்லாம் சுகுணுவை நீ மன்ருட வேண்டிய அவசியமேயில்லை' என்ருள்.

'அண்ணு' என்று அவன் மார்பின் மீது ஓடிச் சென்று சாய்ந்து கொண்டாள்.

'புனிதம் வாழ்க்கைஎன்பது நாம் பலாத்காரமாக செய்யும் ஒன்றல்ல. விரும்பி ஏற்கும் ஒன்றே, நம்மையும் சேர்ந்தவர்களையும் திருப்தி செய்கின்றது. ஆகவே கட்டாயப்படுத்தி உனக்குத் திருமணம் செய்து வைக்க நான் என்றுமே துணியமாட்டேன்' என்ருன்.

அதற்குப் பின்பு அங்கே மௌனம் நிலவியது. புனிதம் தன் அறைக்குச் சென்ருள்.

'என்ன சுகுணு, உனக்கே எல்லாம் தெரிந்திருந்தும் நீர் ஒன்றும் எனக்குச் சொல்லவில்லையே'

'எப்படி எதைச் சொல்ல வில்லை. ஒவ்வொருவர் மனத்துள்ளும் ஆயிரம் ஆயிரம் இருக்கும் நான் என்ன கண்டேனு?'

'பெண்கள் மனம் பெண்களுக்குத் தெரியும் என்பார்களே சுகுணு.'

'ஆனல் உங்கள் தங்கையின் மனத்தைக் காண யாராலுமே முடியாது.'

'உண்மையாகவா?'

'உண்மைதான் அத்தான்' புனிதம் அக்கா எங்களை இணைப்பதற்கு முயற்சித்த போது நான் அவளைச் சந்தேகப்

பட்டு அண்ணனுடன் பட்டபாடு போதும். அன்றைக்குப் பின்பு புனிதம் அக்காவைப்பற்றி தவறான மதிப்பீடு எதுவும் போடுவதில்லை' என்னைப் பொறுத்தமட்டில் புனிதம் அக்கா மதிப்புக்குரியவள்' என்றாள்.

'சரி சரி என்னவென்றாலும் செய்வாளாக்கும்' என்று கூறிவிட்டு சென்றான் பாஸ்கர்.

காலை விடிந்தது. ஆனால் பிரகாஷின் மனதில் விடிவு ஏற்படவில்லை. காலையில் எழுந்து சென்றுவிட்டான் அருமைநாயகம்.

குளித்து விட்டு வந்து கணவனைப் பார்த்தாள் கீதா. கதறி அழவேண்டும் போலத் தோன்றிற்று அவளுக்கு. ஆனால் பொங்கிவந்த விம்மலை அடக்கிக் கொண்டு அவன் நெற்றியில் கையை வைத்தாள், விழிகளைத் திறந்து புன்முறுவல் பூத்த அவன் முகத்தைப் பார்க்கவே கீதாவின் உடலில் தீப்பற்றி எரிவது போலிருந்தது.

'அத்தான்'

'கீதா'

'ம்'

'உன்......'என்று கழுத்தைப் பார்த்தான்'

'என்னத்தான்' என்று கழுத்தை தடவியவள் திடுக்கிட்டாள்.

'செயின் எங்கே கீதா?'

கீதாவுக்குத் தலை சுற்றியது. அந்தச் சங்கிலியை என்ன நேர்ந்தாலும் கழுத்தைவிட்டு கழற்றக் கூடாது என்று கூறி ஒருநாள் தன் கழுத்தினின்றும் கழற்றி அவளுக்கு அணிவித்திருந்தான் பிரகாஷ். ஆகவே சங்கிலியைக் கழற்றி வைத்து விட்டேன் என்றும் கூறமுடியவில்லை.

'அத்தான் படுக்கையில் சில வேளை' என்று கூறிவிட்டு திரும்பினாள்.

ஒவ்வொரு அறையாகத் தேடினாள் - எங்குமே கிடைக்க வில்லை. அவள் மனம் படக் படக்கென்று அடித்துக் கொண்டது. தனக்கு போதாத காலம் ஆரம்பித்துவிட்டதாகவே கருதினாள். வாடிச் சோர்ந்த முகத்துடன் வெளியே வந்தாள். நான்கு புறமும் விழிகளை ஓட விட்டாள். எங்குமே காண வில்லை. விழிகளில் நீர் பெருக வந்தாள் கீதா.

'அத்தான் எங்காவது அறைக்குள் தான் விழுந்திருக் கும் பார்ப்போம் ஆறுதலாக' என்று கூறிவிட்டு அவனுக்கு வேண்டியவற்றைச் செய்தாள்.

செய்யத் தகாதவற்றைச் செய்யும் பொழுது அதற்குரிய தண்டனையை அனுபவிப்பதற்காக இப்படி ஒரு வேதனையை செய்து விடுகின்றான் கடவுள். இவற்றை யோசிக்காமல் நடந்துகொள்பவர்கள் நடந்து முடிந்து அனுபவரீதியாக உணரும் பொழுதுதான் தெளிவு பெறுகின்றனர்.

கீதாவின் நல்லறிவு விழித்துக் கொண்டபொழுது சங்கி லிக்கு என்ன கதி நேர்ந்திருக்கும் என உணர்ந்து கொண் டாள்.

வாழ்க்கை, பெரும்பாலும் இயற்கை நியதியில் ஒரே மாதிரியானதாகத் தோன்றுகின்றது. ஆனால் வாழ்க்கை வெள்ளத்தில் பலரும் பல மாதிரியாக நீந்துகின்றனர். சிலர் சுழியோடுவது போன்று வாழ்க்கை வெள்ளத்திலும் சுழி யோடி, வாழ்க்கையுடன் போராட்டமே நடத்துகின்றனர்.

இத்தகைய ஒருத்தி தான் கீதாவும், கீதா மட்டுமா புனி தமும் வேறு ஒரு வழியில் வாழ்க்கையுடன் போராடிக் கொண்டு தானிருந்தாள்.

இன்பத்தை நினைத்துச் சிலர் போராடுகின்றனர். ஆனால் அது துன்பச் சூழல்களிலேயே அமுக்கிவிடுகின்றது. சிலர் நீந்த வும் முடியாது; கரையேறவும் முடியாது தத்தளிக்க நேரிடு கின்றது.

சிந்தனைகள் கனத்த மனத்துடன் இயந்திரம் போல தனது கடமைகளிலீடுபட்டிருந்தாள் கீதா. அவள் மனம்

தன்னை ஏதோ ஆபத்துச் சூழ்வதாக அச்சுறுத்திக் கொண்டிருந்தது.

'கீதா, மெல்ல அழைத்தான் பிரகாஷ்.

அவன் அழைத்தது அவளுக்குக் கேட்கவில்லைப் போலும். ஒன்றும் பேசாது ஏதோ ஆழ்ந்த சிந்தனையிலிருந்தான்' 'என்ன கீதா? நான் கூப்பிட்டது கேட்க வில்லையா உமக்கு?.

கூப்பிட்டீர்களா? என் மனம் ஒரு வழியாலும் நிம்மதிப் படுவதாக இல்லை அத்தான். உங்கள் நிலையில் வேறு என் சங்கிலியைக் காணம்; என்று சலித்துக்கொண்டாள். அவள் விழிகளில் நீர் முத்துக்கள் உருண்டோடின.

'அதற்காகவா இப்படிக் கப்பலே மூழ்கிவிட்ட மாதிரி இருக்கின்றாய், போனால் போகட்டும். எங்கே போய்விடப் போகின்றது' என்று கூறி ஆறுதலளித்தான்.

'ஆத்திரம் தீர இரண்டு அடி அடித்துப் பேசினான் என்றாலும் அவளுக்கு ஆறுதலாயிருக்கும். ஆனால் அவன் தன் பெருந்தன்மையினால் அவளை அணு அணுவாகக் குத்திக் கொன்று கொண்டேயிருந்தான். அவனுடைய அந்தச் செயலை அவளால் எள்ளளவும் பொறுக்க முடியவில்லை,

'என்னை மன்னித்து விடுங்கள் அத்தான்' என்று அவன் கால்களைப் பற்றினாள்.

'பைத்தியம். எதற்காக நான் உன்னை மன்னிப்பது? நீ என்ன தவறு செய்தாய்? உன்னையறியாமலே செயின் விழுந்திருக்கின்றால் அது தற்செயலாக நடந்த ஒன்று. நீ ஏன் கலங்குகின்றாய்' என்றான்,

'அத்தான்' என்று அவனை அணைத்துக் கொண்டாள்.

'கீதா தெரியாமற் செய்கிறது தவறாகாது' தெரிந்து கொண்டே செய்வதுதான் தவறு. தெரியாமற் செய்யும் தவறை தவறு என்று உணரும் பொழுதே ஆண்டவன் அவர்களை மன்னித்து விடுகிறான். ஆனால் தவறு என்று தெரிந்து கொண்டே தவறு செய்பவர்களை நாம் மன்னித்தாலும் கட

வுள் மன்னிக்கவே மாட்டார். என்று அவன் கூறியதைக் கேட்ட போது கீதாவின் உள்ளத்தை ஆயிரம் விஷ நாகங்கள் ஒன்று சேர்ந்து கொட்டுவது போன்றிருந்தது.

'அத்தான், அத்தான்' அவனை அணைத்துக் கொண்டே ஆறுதல் அடைந்தாள் கீதா.

நாட்கள் நகர்ந்தன. பிரகாஷ் குணமடைந்து கல்லூரிக்குச் சென்றுவர ஆரம்பித்தான். அவனுடைய மனதில் நிறைவு என்ற ஒன்று இல்லாமல் போய் பல நாட்களாகி விட்டன.

மனைவி கற்பத்தடை மாத்திரைகளை அளவுக்கு அதிகமாகவே உட்கொண்ட காரணத்தால் அவள் கர்ப்பப்பை அழற்சியுற்றிருப்பதாகவும் இனி கற்பம் தரிப்பதற்கு ஏற்ற நிலையில் அது இல்லை என்றும் எப்போ டாக்டர் கூறினரோ அன்றே அவன் மனதில் மனைவியைப் பற்றி அவன் எண்ணிய உன்னத நினைவுகள் உருக்குலைய ஆரம்பித்து விட்டன,

மனித வாழ்வில் திருமணம் என்ற புனிதச் சடங்கின் மூலம் குழந்தைக்கு ஒரு பெண்ணும், ஆணும் தாயும் தந்தையுமாகின்றனர். அந்தப் பாக்கியம் இல்லாத இடத்தில் வெறும் சாதாரண உடல் உணர்வுகளுக்காகக் கணவன் மனைவி ஒன்று சேர்வதிலும் சேராமலிருப்பதே மேல் எனக் கருதினன் பிரகாஷ். அன்று தொட்டே மனைவி விரும்பினல் அன்றி அவன் விருப்பத்துக்கு எதுவும் வாழ்ந்திருக்கவில்லை.

குடும்ப வாழ்க்கை என்பது ஒருவரது வெறுப்புக்கு உட்பட்டதல்ல. இருவரும் சேர்ந்து சந்தோஷமாக நடத்துவது தான் குடும்பம். ஆகவே தான் பிரகாஷ் தன் விருப்புக்களை வெறுத்து விட்டபோதும் மனைவியின் விருப்புக்குத் தடை ஏதும் இன்றி ஒத்துழைத்தான்.

அன்று காலையில் பிரகாஷ் பெயருக்குப் புனிதம் கடிதம் போட்டிருந்தாள். கடிதத்தைப் படித்துக் கொண்டிருந்தான் பிரகாஷ். அவனுடைய மனைவி பற்றிய விடயங்கள் பல அந்

தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தன. அதே வேளையில் அங்கு வந்த கீதா 'யாருடைய கடிதம் அத்தான்' என்றாள்.

'இதுவா? புனிதத்தின் கடிதம்' என்றான்.

'புனிதம் அக்கா என்ன எழுதியிருக்கின்றாள்'

'மருமகனுடைய சுகம் பற்றியும் வேறும் பலவும் எழுதியிருக்கின்றாள்' என்று கூறிச் சமாளித்தான்.

அதே சமயம் அறையிலிருந்த தொலை பேசி மணி ஒலித்தது. தொலை பேசி வைக்கப்பட்டிருந்த மேசைக்கு அருகிலே தான் இருந்தான் பிரகாஷ். உடனே றிசீவரை எடுத்து 'ஹலோ' என்றான்.

'ஹலோ மிஸ்டர் பிரகாஷ் வீடு தானே.'

,ஜேஸ்,

'யார் பேசுறது'

'பிரகாஷ்'

மறுபுறத்திலிருந்து கூறும் விடயங்களைக் கேட்கக் கேட்கப் பிரகாஷின் முகத்தில் பல்வேறு உணர்ச்சிப் பாவங்கள் தோன்றி மறைந்தன. அவனுக்கு என்ன பேசுவதென்றே தெரியவில்லை.

'ஜேஸ்......'

'..............'

'ஜேஸ்......'

'ஜேஸ், பிரகாஷ் கூறும் வார்த்தைகள் தான் கீதாவுக்குத் தெளிவாகக் கேட்டன.

றிசீவரை வைத்துவிட்டு நிமிர்ந்த கணவனைப் பார்த்து யார் அத்தான் பேசினது' என்றாள்.

'உன் அக்காளும், அவள் புருஷனும்' என்று பிரகாஷ் கூறிய பொழுது அவன் முகத்தில் தெரிந்த வெறுப்புணர்ச்சியைக் கண்டு என்னவோ ஏதோ என்று பயந்து நடுங்கியவள் என்ன கூறினார்கள் என்று கேட்கவும் பயந்து பேசாமலிருந்து விட்டாள்.

# அத்தியாயம் (16)

சுவர்ணாவுக்கு நான்காவது பிரசவம். அன்று காலையில் தான் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்தாள்.

கிளிநொச்சிக்கு அருமைநாயகம் மாற்றலாகி வந்து விட்ட பின்பு சுவர்ணா தங்கையைப் பார்க்கச் செல்லவில்லை. கர்ப்பிணியாயிருந்தபடியால் பிரயாணம் உகந்ததல்ல என்று அவள் நினைத்து நின்றுவிட்டாள்.

பிரசவத்திற்காக சில நாட்கள் வந்து தன்னுடன் தங்கும் படி தான் கீதாவுக்கு போன் செய்தாள், அவர்கள் கூறிய விடயங்களைக் கணவன் கூறியதும் மறுநாளே அவள் புறப் பட்டு விட்டாள்.

சுவர்ணாவின் பிள்ளைகளைப் பார்ப்பதும், அவளுக்கு உதவி யாக இருந்து ஏதாவது கவனிப்பதும், கீதாவின் கடமையா யிருந்தும் கடமைக்கப்பாற்பட்ட காரியத்திலும் அவள் ஈடு பட்டிருந்தாள்.

சுவர்ணாவின் முதல் பிரசவத்தின் போதுதான் அவனை... நினைக்கவே ஆவேசம் பொங்கிக் கொண்டு வந்தது கீதாவுக்கு.

'கீதா' என்று அழைத்துக் கொண்டே உள்ளே வந்த அருமைநாயகம் பக்கட்டிலிருந்து ஒரு சிறு பொட்டலத்தை அவளிடம் நீட்டினான். வாங்கிப் பிரித்துப் பார்த்த கீதா திடுக் கிட்டாள்.

'இது உங்களிடமா இருந்தது.'

'நீ அன்று போனதும் எனது பெட்டில் இது கிடந்தது. எடுத்து உன்னிடம் தரவேண்டும் என வைத்துவிட்டு மறந்து விட்டேன் என்றான்.

சங்கிலியை வைத்திருந்த அவள் கரம் மட்டுமன்றி உட லும் நடுங்கியது.

அன்று இரவு பதினொரு மணியிருக்கும் படுத்திருந்தாள் கீதா. சுவர்ணாவின் கடைசிப் பிள்ளை அம்மாவுடன் படுத்த பழக்கம் கீதாவின் பக்கத்தில் படுத்திருந்தாள். உறக்கம் அவளை அணைக்க மறுத்தது. அதே வேளையில் கடந்த காலத்திய நினைவு அவள் இதயத்தில் நடமாட ஆரம்பித்தது.

சுவர்ணாவின் முதல் பிரசவத்தின் போது இப்படித்தான் ஓர் அறையில் படுத்திருந்தாள். அறையில் ஓரே இருள் சிறிது அயர்ந்து தூங்கியிருப்பாள். அவள் மார்பின் மீது ஒரு கரம் அடுத்த கணம் அவள் பதறித் துடித்து எழுந்தாள். ஆனால் அவளைப் பேசவிடாது, திமிற விடாது இறுக்கிக் கொண்டது ஓர் உருவம்.

இருளின் போர்வையில் அவள் பிறந்த மேனியாக்கப் பட்டாள். கள்ளங்கபடம், சூதுவாது அறியாத கன்னிப் பருவம், அவளுடைய எழிலான அவயங்கள் மொக்குப்போல திரண்டு விளங்கியிருந்தன. இருளின் போர்வைக்குள் காயைக் கனியாக்கும் முயற்சி. கீதாவின் சுய நினைவு தடுமாறிய நிலையில்.

வெறிகொண்ட வேங்கை புள்ளிமானை பலி கொண்டு விட்டது. பெண்மை உணர்வுகளை வலிந்து வரவழைத்து அந்த கடின முயற்சியில் களிகொண்டது அந்த உருவம்.

மணி பன்னிரண்டு அடித்து ஓய்ந்தபோது கண்களை விழித்துப் பார்த்தாள் கீதா. ஓரே இருள்மயம். அவள் உடலில் ஆடைகள் முன்பு போல சரியாக இருந்தன.

உடல் எல்லாம் வேதனை. வேதனையின் கொடுமையில் தான் இன்பம் அனுபவிக்கின்றனரா மனிதர்கள்! நேரம் செல்ல அந்த வேதனையின் இடையே அவளுக்கும் ஓர் வெறியுணர்வு. தன்னை அந் நிலைக்கு ஆளாக்கியவன் அருமைநாயகமாகத்தானிருக்க வேண்டும் என்பதை கீதா உணர்ந்தாள். அவள் காலையில் எழுந்தபோது உண்மை புரிந்து விட்டது.

அன்று வேலைக்கே போகவில்லை அருமைநாயகம். அவளிடம் மன்னிப்புக் கோரினன். மண்டியிட்டான், என்னவோ எல்லாம் செய்தான்.

அன்று இரவு பதினொருமணி அடித்தபோது கீதா உறங்க வில்லை, அவன் வரவும் இல்லை.

ஆனால் முதல் நாளைய நினைவுகள் அவள் உள்ளத்தில் அலைமோதியது. உள்ளத்தில் உறங்கிப் பதுங்கி முதல் நாள் வெறுத்து ஒதுக்கிய அதே அசுர உணர்வுகள் விழித்துக் கொண்டன. சில சமயம் அவனுடைய உறவால், அவனுடைய தீய உணர்வுகள் அவள் உடலில் கலந்திருந்து அவளையும் அந் நிலைக்காளாக்கி விட்டதோ என்னவோ கீதா எழுந்திருந்தாள். திரும்பப் படுத்தாள். புரண்டாள். அவள் உள்ளத்தில் உணர்வுப் பேரலைகள். பூரணை நிலவு கண்ட சமுத்திர அலைகளெனக் குமுறின. அவளையுமறியாது எழுந்து நடந்தாள். கால்கள் அவளையுமறியாமல் அருமைநாயகத்தின் அறைக்கு இழுத்துச் சென்றன.

திறந்திருந்த கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே சென்றாள். அருமைநாயகம் திடுக்கிட்டவனாய் 'கீதா' என்றான்

அவள் எதுவுமே பேச வில்லை. அசையாத சிலையாக நின்றிருந்தாள். கதவைப் பூட்டிவிட்டு வந்து 'கீதா' என அவளை அணைத்தான்.

அறையில் ஒரே இருள் இருளின் ஆக்கிரமிப்பில் இன்பம் காணும் மனிதமுயற்சி, மாறுபட்ட இருவகை உணர்வுகளுக்கிடையே நடைபெறும் போராட்டம்; அந்தப் போராட்ட வேதனையில் கிடைக்கும் வெற்றியோ—தோல்வியோ அல்லாத ஒரு வகைத் திருப்தி. திருப்தி என்றும் சொல்லவே முடியாதகளைப்பின் முடிவில் ஏற்படும் மயக்கம். இவற்றில்தான் மனிதர்கள் அல்ல சகல ஜீவராஷிகளுமே இன்பம் கிடைப்பதாகக் கருதிக் களிக்கின்றன.

அறைக்குத் திரும்பிய கீதாவை வெட்கம் பிடுங்கித் தின்றது. அவளையும் அறியாமல் அவள் அந்த உணர்வுகளுக்கு ஆட்பட்டு விட்டதை எண்ணி நொந்தாள். வெட்கினாள். அழுதாள் பயன்? கறந்தபால் முலையேறுமா என்ன?

சிந்தனைகள் அறுந்த போது அவள் அருகில் யாரோ அவளை வருடுவது போன்ற உணர்வு. அவள் புரிந்து கொண்டாள். எழுந்து நின்றாள்.

'போதும் உங்கள் விளையாட்டு. இனி இந்த வேலையெல்லாம் என்னிடம் வைத்துக் கொள்ளாதீர்கள்.

'மெல்லப் பேசு கீதா' என்று அவள் அருகே சென்று அவள் கரங்களைப்பற்றி காதுக்குள் கதை சொல்வது போன்று அவளுடைய செவிகளில் உதடுகளை வைத்து இரகசியம் பேசுவது போல பாசாங்கு செய்தான்.

இரவு! தனிமை! மாறுபட்ட சக்திகள். ஒன்றை ஒன்று அருகருகே; தடை போட யார் உண்டு?

சில நிமிடங்கள் தான் கீதா ஏதோ கூறினாள். அடுத்த கணம் அவள் கரங்கள் அவனுடைய கழுத்தை வளைத்துக் கொண்டன.

தவறு செய்யக் கூடாது என்று ஒருவன் அல்லது ஒருத்தி மனத்திலே திடசங்கற்பம் பூண்டொழுகி வாழ்ந்தால் அன்றி தவறு செய்யக் கூடாது என்று வாய் சொல்ல மெய் செய்யும் இயல்பினர் பலர், சந்தர்ப்பம் இல்லாத காரணத்தால் நல்லவர்களாக, ஒழுக்க சீலர்களாக வாழ்கின்றனர்தான் அந்த வகையில் கீதாவும் ஒருத்தியாய் இருந்தாள்,

அவளுடைய நல்ல குணம் இனித்தவறு செய்வதில்லையென அடிக்கடி அவளை எச்சரிக்கும். ஆனல் அவள் உடலின் நரம்புகளில் ஒழிந்து வாழும் அசுர உணர்வுகள் அவளை தடுமாறச் செய்து பெண் இனத்துக்கு, உடன் பிறந்தவளுக்கு, கணவனுக்கு ஒவ்வாத துரோக பாதையில் அழைத்துச் சென்று விடுகின்றன.

உண்மையில் அவள் உள்ளத்தில் சுரக்கும் அன்பு உணர்வுகள், அத்தனையும் பிரகாஷ் ஒருவனை நினைக்கும் போது, அவனுடன் சேர்ந்து அனுபவிக்கும் உறவில் தான் தலை தூக்கி நிற்கின்றன. மற்றும் வேளைகளில் அவள் ஓர் வெறி கொண்ட

மிருகம்! குமுறும் அலை! தன்னை தன் உணர்வுகளை கட்டியாள முடியாத ஓர் அசுர உணர்வுக்கு ஆட்பட்ட பைத்தியம்! அதன் தாகத்திற்கு ஆட்பட்டு விட்ட வெறிப் போராட்டம்.

எதைச் செய்யக் கூடாது எதை மறந்துவிட வேண்டும் என்று நினைக்கின்றாளோ அது அவளை வெகு சுலபத்தில் ஆட்கொண்டு ஆட்டிப்படைத்து விடுகின்றது, உடன் பிறந்தே கொல்லும் வியாதி என்பார்களே அதே போன்று அவளைப் பற்றிக்கொண்ட ஓர் கொடிய நோயாகிவிட்டது.

## அத்தியாயம் (17)

மனைவியை அவளுடைய தமக்கை வீட்டுக்கு அனுப்பி விட்டு தனிமையிலேயே இரண்டு நாட்களைக் கழித்து விட்டான் பிரகாஷ். அவள் இல்லாததினால் ஏற்பட்டுள்ள குறை பாடுகள், அசௌகரியங்களை அவனால் உணர்ந்து கொள்ள முடிந்ததாயினும் ஒரு வழியில் மனதில் ஆறுதலும், ஆத்ம திருப்தியும் நிலவிற்று.

சிந்தனையிலாழ்ந்து கிடந்தவனை 'யார் வீட்டிலே' என்ற பழக்கப்பட்ட குரல் ஒன்று கவர்ந்து இழுத்த போது தன்னை யுமறியாமல் எழுந்து விட்ட பிரகாஷ்' புனிதம் நீங்களா?' என்றான்.

'நானேதான். ஏன் வரக் கூடாதோ?'

அடேயப்பா. உங்களை யார் வரவேண்டாம் என்றார்கள் தாராளமாக வாருங்கள். தனியாக, முன்னறிவிப்பு ஏதும் இன்றி தாங்கள் விஜயம் செய்தது ஏன் என்று அறியலாமோ? என்றான்வேடிக்கையாக.

'பிரகாஷ்' உங்களுடன் கதைக்கும் ஒவ்வொரு விஞடி யும் சகல துன்பங்களேயும் மறந்து சிரித்து விடுகின்றேன்.

,ம்......அப்படி என்ன சிரிக்கும்படி சொல்லிவிட்டேன்.'

'எங்கே கீதாவைக் காணும்?'

'அவள் போய் விட்டாளே'

,பிரகாஷ்'

'உண்மைதான். தமக்கை பிரசவமாம்—அதற்காக ஊர் சென்று விட்டாள்.

'அதனுல் தான் நான் தனியே வந்தது பற்றி நீங்கள்...... கேட்டீர்களா? உங்களுக்குச் சாப்பாடு......'

'ஹோட்டல்'

'பிரகாஷ் நான் இங்கு வந்திருக்கவே கூடாது.'

'ஏன்'

'நீங்கள் தனியே இருக்கின்றீர்கள். நான் இங்கு வந் ததை கீதா அறிந்தால் உங்கள் குடும்பத்தில் சந்தேகம் நுழைந்துவிடும். வந்த சுவடே தெரியாமல் நான் போய் விடு கிறேன்.'

,புனிதம்'

'பிரகாஷ்'

'போகப் போகின்ருயா! போ......போ புனிதம். முன்பும் இப்படி அவசரப்பட்டுத்தான் நீயும் கெட்டாய். என் வாழ் வையும் கெடுத்தாய். இனி நீ எங்கே போனுல் என்ன வந் தால் என்ன. போ புனிதம்' அவன் விழிகளில் நீர் பொல பொலவென உதிர மறுபுறம் திரும்பிக் கொண்டான்,

தன்னுடைய அவசர முடிவுகளினுல் ஏற்படும் தவறுகளே அவன் சுட்டிக்காட்டியதும் புனிதம் சற்று மனம் தடுமாறி ஞள்.

தான் எது செய்தாலும் நன்மை பயக்கும். எது பாது காப்பளிக்கும் என்று செய்து கொண்ட முடிவுகள் முடிவில் இருவருக்குமே பயனற்றுப் போன ஒன்றாக இருந்ததைக் கண்டு புனிதம் மனம் குமைந்தாள். அவனுடைய விழிகளில் நீரைப் பார்த்ததும் அவள் இதயத்திலிருந்து உதிரமே பெருகு வது போன்ற பிரமை. அவள் உள்ளத்திலிருந்த உறுதியான முடிவுகள் அடியோடு பெயர்ந்து கொண்டிருப்பது போன்று உள்ளம் நடுங்கியது.

'பிரகாஷ், பிரகாஷ்'

'............'

அவன் எதுவுமே பேச வில்லை.

'பிரகாஷ்' என்று அவன் கால்களைக் கட்டிக் கொண்டு கதறினாள்.

'புனிதம், புனிதம் என்ன இது? எழுந்திருங்கள்' என்று அவளுக்கு ஆறுதல் கூறினான்.

'பிரகாஷ். உங்களுக்கு என்னால் வீண் பெயர் ஏற்பட்டு விடக்கூடாதே என்றுதான்......'

'ஓ......ஆனால் உன்னைப் பற்றி நீ நினைக்க வில்லை.' என்று கூறிவிட்டு 'புனிதம் நீ பெண். உன்னுடைய புனிதத்துக்கு என்னால் பழியேற்பட்டு விடக்கூடாதே என்றுதான் நினைக் கின்றேன்' என்று அவன் கூறிய போது தொலைபேசி மணி அலறியது. அதே வேளையில் வெளியிலிருந்தும் யாரோ அழைத்தனர்.

'புனிதம் போனை எடுங்கள் வாரேன்' என்று கூறிவிட்டு வாசற் பக்கம் சென்றான்.

'ஹலோ'

'பிரகாஷ் வீடுதானே?'

'ஆமாம்'

'யார் நீங்கள்?'

'நான் மிஸிஸ் பிரகாஷ் பேசுகின்றேன். யார் நீங்கள்? என்ன விடயம்,' என்ருள் புனிதம்,

'என்னையா கேட்கிருய்' என்று கேட்டுவிட்டு போன் வைக்கும் சத்தம்.

அதே வேளையில் சோர்வுடன் உள்ளே திரும்பி வரும் பிரகாசைக் கண்டதும் பதறிவிட்டாள் புனிதம்.

மனதில் நினைப்பவற்றிற்கு மாருக அல்லது கூடுதலாக இன்பம் வந்து விட்டால் மனம் ஆனந்த பரவசத்திலாழ்ந்து போகின்றது. அதே வேளையில் அதற்கு மாருக எதிர்பார்த்திருப்பதிலும் மேலாக துன்பம் வந்து விட்டாலோ மனம் வெந்து கருகிச் சாம்பலாகி விடுகின்றது, அப்படிப்பட்ட நிலையில் பிரகாஷ் இல்லையாயினும் அவன் அறிந்த செய்தி சொல்லுந்தரமன்று. சுதாகர் வந்து அவனிடம் கூறிய செய்தியை நம்புவதா அன்றி நம்பாமல் விடுவதா? அதைப் புனிதத்திடம் கூறுவதா? கூருமல் விடுவதா? ஒரு சில நிமிடங்களில் அவனுக்கு உலகமே சுழல்வது போன்றிருந்தது.

'என்ன ஒரு மாதிரி வாறீங்கள்? என்ன நடந்தது.' என்று ஆவலுடன் கேட்டாள் புனிதம்.

'புனிதம்! விதி என்னுடன் விளையாடுகின்றது. கலக்கமேயில்லாது வாழ்ந்த என்னுள்ளம் எருமை புரண்ட குட்டையாய் குழம்பிக் கிடக்கின்றது. எதை நம்புவது? எனக்கு ஒன்றுமே புரியவில்லை. புனிதம், கேவிக் கேவி அழுதான்.

அவனை அந் நிலையில் பார்த்தபோது புனிதத்தின் உள்ளமெல்லாம் துடித்தது, தன்னுல் தான் அவனுக்கு அந்த நிலை ஏற்பட்டதாகத் துடித்தது அவள் இதயம்.

'என்னை மன்னித்து விடுங்கள் பிரகாஷ்' என்று அவன் கரங்களைப் பற்றினுள்.

'புனிதம் யாரைச் சொல்லியும் குற்றம் இல்லை. என் தலைவிதியை நான் நோவதல்லாமல் யாரையும் குறை கூறிப் பலனில்லைப் புனிதம். வசந்த காலத்துப் பயிர்போல துளிர்த்து

நின்ற என் வாழ்க்கை. ஏன் உன் வாழ்வு கூட பாலைவனத்துப் பயிர்போல கருகி விட்டது இனி வசந்த காலம்......புனிதம்' என்று தலையைத் தாழ்த்திக் கொண்டான்.

'உங்களை யாரோ போனில் கூப்பிட்டார்கள். யார் என்று விசாரித்தேன். என்னை யாரென்று கேட்டார்கள். நான் என் பெயரைக் கூறினால் தவறாக நினைப்பார்களே என்று பயந்து மிஸிஸ் பிரகாஷ் என்றேன் திடீரென போனை வைத்து விட்டார்கள்' என்றாள் புனிதம்.

'புனிதம் உண்மையிலேயே நீ அப்படிச் சொல்லியிருந்தால் அதற்காக நான் பெருமைப்படுகிறேன். ஆனால் அந்த இடத்தை ஒருத்திக்கு நான் அளித்து விட்ட பின்பு நீ உன் புனிதத்துக்கே இப்படி மாசு ஏற்படுத்துவதை என்னால் அனுமதிக்க முடியாது புனிதம்.' என்றான்.

'மன்னித்து விடுங்கள் பிரகாஷ்.'

'மன்னிப்பு! மன்னிப்பு! என்னிடம் நீ மன்னிப்புக் கேட்பது. புனிதம் நீ உன்னையே கொன்றுவிட்ட பின்பு சிரித்துக் கொண்டு உலாவுகின்றாய். நான் என்னை கொலைக்களத்தில் நிறுத்தி விட்டு சாவா? வாழ்வா? என்று பதறுகின்றேன்' என்றான்.

அவர்களுடைய சம்பாஷணையில் சுதாகர் சொல்லிச் சென்றதை பிரகாஷ் அடியோடு மறந்து விட்டான்.

அன்று மாலையே புனிதம் யாழ்ப்பாணம் திரும்பி விட்டாள். அவள் மனம் தனித்து பிரகாசுடன் இருந்த நேரத்தையும் அவன் கரங்களைப் பற்றி நின்றிருந்ததையும் நினைத்துப் பூரித்தது. உண்மையிலேயே அவள் மிஸிஸ் பிரகாஷ் ஆக மாறிவிட்டிருந்தால்......அவள் நினைவுகள் இறக்கை கட்டிப் பறந்தன.

நிமிடத்துக்கு நிமிடம் அவள் மனதில் தோன்றி மறைந்த இனிய உணர்வுகள் அவளுடைய மன உறுதியின் அத்திவாரத்தை ஈடாடச் செய்து அசைத்து எடுத்து விட்டது. திரு

மணப் பதிவுக்கு முன்னர் அவள் உள்ளத்தில் பூத்துக் குலுங்கிய உணர்வுகள் அப்பொழுது முகை விட்டு மலர்ந்தன.

ஓடும் பஸ்ஸில் அவளிருந்தாலும் அவளுடைய நினைவுகள் பிரகாஷின் அறையில் அவனுடன் இன்ப மொழி பேசி மகிழ்ந்து கொண்டிருந்தது.

பிரகாஷைப் பற்றி நன்கு அறிந்து கொண்ட சுதாகர் அவனை நேரில் சந்தித்து பேச விரும்பினான். உண்மையிலேயே அவன் கீதாவை காதலித்தான். ஆனால் அவள் அவனை துளியத்தனையும் விரும்பவில்லை.

வாலிப வயதின் வனப்பையெல்லாம் இழந்து விட்ட நிலையில் மீண்டும் அவளைச் சந்தித்த பொழுது கேட்டான். அவள் மறுத்து விட்டதுடன் திருமணம் செய்யப்போவதாகவும் கூறினாள். அவன் அன்று முதல் எதுவும் பேசாமலிருந்தான்.

ஆனால் அருமைநாயகம் அங்கு வந்து வீடு செல்லும் பொழுது அவனைச் சந்தித்தான். கீதாவைப் பற்றியும் கேட்டான். உண்மையை அறிந்தபோது அவன் மனம் கொதித்தது. உடனேயே பிரகாஷிற்கு அவளைப் பற்றித் தெரிவிக்க விரும்பினான்.

ஆனால் பிரகாஷை நேரில் சந்தித்தபொழுது முழுதாக அவனிடம் உண்மையைக் கூற முடியவில்லை. ஆகவே 'மிஸ்டர் பிரகாஷ் என்னை மன்னித்து விடுங்கள், உங்களைப் பற்றி அறிந்து கொண்டதால் ஒரு விடயத்தைக் கூறப் போகின்றேன் உங்கள் மனைவி...... உங்கள் மனைவி...... உங்களுக்கு... துரோகம்...... என்று கூறிவிட்டுச் சென்று விட்டான்.

தான் செய்தது சரியா? தப்பா என்று அவனால் தீர்மானிக்க முடியவில்லை. மனம் தடுமாறியது,

அவள் எக்கேடு கெட்டால் என்ன? எப்படி நடந்து கொண்டால் என்ன? கணவனுக்கு துரோகம் செய்து பல ரோடு போனால் என்ன? அவற்றைக் கேட்க நான் யார்?

எனக்கு என்ன உரிமை? அவள் கணவனிடமே அவள் நடத்தை கெட்டவள் என்று கூற எப்படித் துணிந்தேன் என்று ஏங்கிக் கலங்கினான்.

அவனுடைய மனமே அவனை ஓட ஓட விரட்டியது. அவன் மனச்சாட்சி அவனைத் தண்டித்தது. என்ன செய்வது என்று அறியாதவனாய் பித்துப் பிடித்தவன் போல அங்கு மிங்குமாக அலைந்து உலைந்தான்.

அவன் கண்முன்னே அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக காட்சியளித்தாள் கீதா. அவளுடைய வாழ்வுக்கு சுருக்கிட்டு தூக்கிலிட்டதாகவே கருதினான். ஆகவே அவள்......போக முன்......தன்னை......தானே......அவன் உள்ளம் ஓர் உறுதியான முடிவுக்கு வந்துவிட்டது.

அதே வேளையில் பிரகாஷ் மனம் தாமரை இலைத் தண்ணீராக உருண்டு கொண்டிருந்தது. அவ்வாலிபன் கூறிய தன் கருத்து என்ன? என் மனைவி எனக்குத் துரோகம்......என்றால் அவள் அவனைக் காதலித்திருப்பாளா? அல்லது... நினைக்கவே அவனுக்கு தலைசுற்றியது. இருளின் அமைதியில் இருளோடு இருளாக இருந்தான் பிரகாஷ். அவன் இதயமே இருள் மயமாகி விட்டபோது புற உலகைப்பற்றி அவனுக்குஎன்ன கவலை?

இன்பமும், துன்பமும் நாம், நாம் தேடிக் கொள்வதேயன்றி பிறரால் எமக்குத் தரப்படுவதல்ல. வாழ்க்கையின் மயக்க நிலைகள் துர்நாற்றங்கள், கவர்ச்சியாகவும் நறுமணம் மிக்கதாகவும் மோகம் கொண்ட மனத்துக்குப் பிரதிபலிக்கின்றன.

அழகான உருவத்தைக் காட்டிடும் பளிங்குக் கண்ணாடியின் பின்புறமும் அப்படியா இருக்கின்றது? அப்படித்தான் மனித வாழ்க்கையின் பிரதிபலிப்புக்களும். உணர்ந்தவன் பற்றை நீக்கி துறவியாகின்றான். பற்றுள்ளவன் மாயவலையில் வீழ்ந்து மீளா நரகத்தை சொர்க்க வாசல் என எண்ணி உழலுகின்றான்.

எப்படித்தான் எண்ணினுலும் பிரகாஷின் மனதில் இரு வித நினைவுகளும் தோன்றி மறைந்தன. விருப்பும் வெறுப்பும் ஒரு நாணயத்தின் இருபக்கங்களைப் போன்று அவனுல் வீசி விட முடியவில்லை.

தொட்டுத் தாலி கட்டிய மனைவி, இனி எப்படிப்பட்டவள் என்றாலும் அவளை எதுவும் செய்ய முடியாது. அவளை அவனுல் நிராகரிக்க முடியாது. அவர்களது அன்பு வாழ்க்கையின் பிணைப்பாக அவர்களிடையே ஓர் பிணைப்பை ஏற்படுத்தும் புத்திரப் பேற்றைக்கூட அவர்களுக்கு ஆண்டவன் கொடுக்கவில்லை, அவன் மனத்துள் குமுறல்கள்! கொந்தளிப்புகள்! தடுமாற்றங்கள்! முடிவில்லாத ஒரே குமைச்சல்கள்!!

அவனுடைய வீட்டிற்குச் சமீபத்தில் உள்ள ஒரு ஹோட்டலில் வானெலிப் பெட்டியிலிருந்து ஓர் பாடலின் அடி அவன் மனதைத் தொட்டு இழுத்தது, அவன் இதழ்களில் ஒரு வெற்றுச் சிரிப்பு.

அமைதியில்லாத
நேரத்திலே - அந்த
ஆண்டவன் எனையே
படைத்துவிட்டான்
நிம்மதி இழந்தே
நான் அலைந்தேன்''

மீண்டும் அந்த அடிகளை அவன் வாய் முணு முணுத்தது. பாட்டின் முடிவில் ஓர் வரண்ட புன்னகை.

அதே வேளையில் பாஸ்கர் தன் தங்கையின் வாழ்க்கை பற்றி ஓர் முடிவுக்கு வந்திருந்தான். அவளுடைய வாழ்வில் தான் அவள் இஷ்டத்துக்கு விரோதமாய்த் தலையிடுவதில்லை என்றுதான் கூறியிருந்தாலுயினும் அவளுடைய நல்வாழ்வை விரும்பினுன்,

அவள் பிரகாஷிடம் மனதைப் பறிகொடுத்து விட்டுத் தவிப்பதை அவன் நன்குணர்வான். அதற்கு அவன் செய்யக் கூடிய முடிவு தான் என்ன?

அவனே பிரபல அட்வக்கேட். குறுக்கு வழியில் தன் சட்ட மூளையை மடக்கி ஓர் முடிவுக்கு வந்திருந்தான். அந்த முடிவை தன் மனைவி மூலமே பிரகாஷிடம் தெரிவிக்க விரும்பினான். உடனேயே சுகுணாவை அழைத்தான்-

'அழைத்தீர்களா?' என்று கேட்டுக்கொண்டே வந்தாள் சுகுணா.

'ஆமாம் சுகுணா. உன்னிடம் ஒரு முக்கிய விடயம் பற்றிக் கூறப்போகின்றேன்.'

'என்னத்தான் முக்கிய விடயம்? உங்கள் அட்வக்கேட் வேலையை என்னைப் பார்க்கும்படி கூறப் போகின்றீர்களா?'

ஆமா உன்னைப் பார்க்கச் சொல்லப் போறேன் சுகுணா! என்னைவாழ வைத்து நீ சந்தோஷமாக வாழ்வதைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருக்கின்றான் தானே உன் அண்ணன்.'

'ஆமாம் அதற்கு என்ன இப்போ?'

'அதே போன்ற ஆசை எனக்கு இருக்காது என்பது உன் நினைப்பா?

'ஏன் இருக்காது? அதுதான் உங்கள் தங்கையிடமே சொல்வது தானே?'

'அவள் வேறு கல்யாணமே செய்யாமலிருப்பதற்குக் காரணம் உன் அண்ணன் தான்.'

'அத்தான்'

'எனக்கு எல்லாம் தெரியும் சுகுணா.'

தெரிந்தால்? நடந்து முடிந்த விடயம். அண்ணனைக் கேட்காமலே உங்கள் அம்மா இஷ்டப்படியே புனிதம் அக்காவுக்கு திருமணம் நிட்சயமாகி விட்டதாம். அதுதான் புனிதம்

அக்காவுக்கு கொடுத்து வைக்கவில்லையே! இப்போதாவது வேறு கல்யாணம் செய்யலாம் இல்லையா. அதற்கும் என் அண்ணனுக்கும் என்ன சம்பந்தம்?

'உன் அண்ணனை நினைத்துத்தான் அவள் புலம்பிக் கொண்டிருக்கின்றாள்'

'அதற்காக நான் என்ன செய்வது?'

'சுகுணா நீ அவசரப்படாதே. நான் சொல்வதெல்லாவற்றையும் ஆறுதலாகக் கேட்டு விட்டு அப்புறம் பேசு.'

'நான் சொல்வதிருக்கட்டும். உங்கள் தங்கையை முதலில் சம்மதிக்க வையுங்கள்'

'அவள் வேறு யாரையுமே கல்யாணம் செய்ய விரும்ப மாட்டாள்.,

'அப்புறம்?......'

'அதற்காகத் தான் ஒரு முடிவுக்கு வந்திருக்கின்றேன். அந்த முடிவு நல்லதாகவே இருக்க வேண்டும். ஒரு வழியில் உன் அண்ணனுடைய கவலையும் தீரும், ஆனால் யாவும் உன் கையில் தானிருக்கின்றது.'

என் கையிலா?

'உன் கையில் என்றால் உன்னிடம் தான் சுகுணா. இவ்வளவு நாட்களும் புனிதத்துக்கு முன்னால் நான் எதுவும் பேச முடியாதவனாயிருந்தேன். அவள் இப்போது பஸ்ஸில் வந்து கொண்டிருப்பாள். அவள் வருவதற்குள் உன்னிடம் யாவையும் கூறிவிடுகிறேன்.'

'பீடிகையை விட்டு விட்டு விஷயத்துக்கு வாருங்கள்.'

'உன் அண்ணனுக்கும் மனைவிக்கும் குழந்தைகளில்லை.'

'தெரிந்த விடயம். இனிப் பிறப்பதும் நிட்சயமில்லை.'

'ஆகவே தான் புனிதத்தை இரண்டாந்தாரமாக உன் அண்ணனை.........'

'அத்தான் இது நடக்காது, ஏன் வீண்பிரயாசப் படுகின்றீர்கள்.'

'ஏன் நடக்காது! நீ முனைந்தால் நடக்கும் சுகுணா.' நீயும் நானும் ஒற்றுமையாக சந்தோஷமாக வாழ வேண்டும் என்றால் கட்டாயம் உன் அண்ணனைச் சம்மதித்து வைத்தேயாக வேண்டும்.'

'முடியாவிட்டால்

'உன் அண்ணனுடன் தான் நீ போயிருக்க வேண்டிய கட்டம் உருவாகும்.'

'அத்தான்'

'சுகுணா. நான் நல்லவன்தான். ஆனால் சொன்னது சொன்னது தான்' என்று அவன் கூறியபோது சுகுணாவின் தலையே சுற்ற ஆரம்பித்து விட்டது. அவளுக்கு உலகமே இருண்டு கொண்டு வருவது போலிருந்தது.

## அத்தியாயம் (18)

பனையாலே விழுந்தவனை மாடு ஏறி மிதித்தது போல என்று தமிழில் ஓர் முது மொழி உண்டு. அதே போன்று துன்பம் மனிதனை அணுகிவிட்டால் மீண்டும் மீண்டும் துன்பமே அங்கு வந்து நிறைந்து விடும் போலும்.

மறுநாட் காலை விடியு முன்பே வெளி வாசலில் யாரோ அழைக்கும் சப்தம் கேட்டு திடுக்கிட்டு விழித்து ஓடினான் பிரகாஷ். கதவைத் திறந்ததும் பிரமித்து விட்டான் பிரகாஷ்.

'கீதா நீயா?'

'ஆமாம் நானே தான் ஏன்? வரமாட்டேன் என்று நினைத்திருந்தீர்களோ?

'கீதா நீ......

'என்னைத்தானே நீங்கள் திருமணம் செய்து கொண்டீர்கள்' என்று கேட்டு விட்டு உள்ளே சென்றாள்.

'ஆமாம்'

'வேறு ஒருத்தி என் வீட்டிலேயேயிருந்து கொண்டு மிஸிஸ் பிரகாஷ் என்று சொல்லுமளவிற்கு நீங்களே பார்த்துக் கொண்டிருந்தீர்கள்,'

'ஓ......நீ தான் போனில கேட்டியா?'

'நான் தான் கேட்டேன். அவள் யார் அத்தான்?'

'புனிதம் நேற்று இங்கு வந்திருந்தாள்.'

'அவளுக்கு என்ன துணிச்சல்'

'கீதா அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வந்து விடாதே. நீ விஷயத்தைப் புரிந்து கொண்ட பின்பு எதை வேண்டுமானாலும் கூறலாம். அதற்கு முன்பு கன்னா பின்னா என்று ஏதாவது கூறி என் மனதைப் புண்படுத்தினாயோ அப்புறம் நீ வருந்த நேரிடும். ஆமாம் என்று ஆறுதலாகவும், நிதானமாகவும் கூறினான் பிரகாஷ்.

கணவனுடைய குணாதிசயங்களைப் புரிந்து வைத்திருந்த அவளால் அதற்கு மேல் படபடப்பாகப் பேச முடியவில்லை. ஆறுதலாக அவனையே பார்த்துக் கொண்டு நின்றாள்.

கைகளைப் பின்னுக்குக் கோர்த்துப் பிடித்தவாறு முன்னும் பின்னும் நடந்தவன் 'கீதா' என்றான்.

'ம்'

'என்னையே சந்தேகிக்குமளவிற்கு நீ வந்துவிட்டாய் இல்லையா?'

'அத்தான். இல்லை அத்தான் இல்லை. நான் உங்களை'

'நீ என்னைப் பற்றித் தவறாக நினைத்திருக்காவிட்டால் நீ இங்கு திடீரென வந்திருக்க நியாயமில்லை. வந்ததும் வராதது மாகக் கேட்டிருக்க வேண்டியதும் இல்லை.,

'நான்...... நான்......'

'கீதா புனிதம் நேற்று இங்கே வந்தாள். அவள் ஏதோ அலுவலாகத்தான் வந்தாள். நீ இல்லாத இடத்தில் வந்து விட்டோமே என்று திரும்ப முயற்சித்தாள். நான் தான் நிறுத்தி வைத்தேன். அப்பொழுது யாரோ என்னை வெளியே அழைத்தார்கள் போன் மணியும் ஒலித்தது. புனிதத்தை போனை எடும் என்று கூறிவிட்டு வெளியே போனேன் போனில் கேட்ட குரல் யார் பேசுகின்றது என்று கேட்டால் அவள் என்ன சொல்வாள்? பிரகாஷ் வீட்டிலே புனிதம் பேசு கின்றேன் என்றா? ஆகவே அவருடைய மனைவி என்று கூறி னாள். ஏன் என்—தன் பாதுகாப்பை முன்னிட்டு. அது உனக் குத் தவறாக பட்டுவிட்டது. பெண்களின் இயற்கைக் குணம் தானே சந்தேகப்படுவது. ஆனால் நீ என்னைப் புரிந்து கொண் டவள். என்னுடன் கூடி வாழ்ந்தவள். உனக்கு என்னைப்பற்றி அவ்வளவுக்கு நம்பிக்கையீனம். இல்லாவிட்டால்?

'அத்தான் என்னை மன்னித்து விடுங்கள்' என்று அவன் கால்களைப் பிடித்துக் கெஞ்சினாள்.

'மன்னிப்பு' இந்த வார்த்தையை யாரோ கண்டு பிடித் தார்கள். தவறு செய்பவர்களுக்குகெல்லாம் ஒரு வாய்ப்பாகி விட்டது.'

,உண்மையில் நான் ஒரு கணம் தன்னும் உங்களைப் பற்றி......'

'அண்ணன் தம்பியோ, அக்காள், தங்கையோ. நண்பர் களோ, கணவன் மனைவியோ என்னதான் உறவும், உரிமை யும் கொண்டு பழகினாலும், தன்னைப் போலவே மற்றவர்களை எடைபோடும் பழக்கம் வந்து விட்டது. இல்லையென்றால்...'

அவன் இப்படிக் கூறியபோது கீதாவின் நெஞ்சில் ஒரு பெரும் பாறுங்கல்லைத் தூக்கிப் போட்டது போன்றிருந்தது.

அவளால் எதுவுமே பேசமுடியவில்லை. ஒரு வார்த்தை கூட பதில் கூறும் நிலையில் இல்லை.

கீதா நான் உனக்கு ஏற்கனவே கூறியுள்ளேன். புனிதத்தை தான் விரும்பியது உண்மை. ஆனால் அவள் மாற்றான் ஒருவனுக்கு மனைவி என்று வரிக்கப்பட்ட அன்றே அவள்—என் உறவு புனிதமான களங்கமற்ற ஓர் தெய்வீக உறவாகவே இருந்து வருகின்றது. நீ மட்டுமல்ல என் உடன் பிறந்தவளே ஒரு நாள் எங்களைச் சந்தேகித்தாள்' என்று தங்களுக்கிடையே நடந்தவற்றையெல்லாம் கூறி முடித்தான்.

'நான் உங்களை......,

'நீ என்னை எப்படி வேண்டுமானாலும் நினைத்துக்கொள். ஆனால் அந்தப் பெண் புனிதம் தந்த வாழ்வே உன்னுடையது. அவள் ஒரு வார்த்தை கூட உன்னைப்பற்றித் தீயது சொன்னவில்லை. ஆனால் உன்னுடைய வாழ்க்கையில் பல கோளாறுகள் இருப்பதைப் பற்றி பலர் கூறினர். நான் அவற்றை மனதிலே பதித்திருந்தால் இன்று நீ இந்த ஸ்தானத்தில் இருக்கும் அருகதையற்றவள். புனிதம் புனிதமானவள். அவளைப் பற்றி தவறாகக் கருதினால் நான்......நான்' என்று அவன் கண்கள் கலங்கின.

'அத்தான் அறியாத்தனத்தால் செய்த பிழை. என்னை மன்னிக்கக் கூடாதா அத்தான்' தேம்பித் தேம்பி அழுதாள்.

அவள் அழுவதைப் பார்த்ததும் அவனுடைய மனதில் உள்ள ஆத்திரம் எல்லாம் ஒரு கணப்பொழுதில் கரைந்து விட்டது. அவளை அணைத்து எடுத்துக் கொண்டான்.

'கீதா'

'ம்'

'என்னுடன் கோபமா?'

'க்கும்'

விழிகளில் வழிந்து ஓடிய கண்ணீரை விரல்களால் துடைத்து விட்டான். அவன் விரல்களைப்பற்றி தன் கன்னத்தோடு அணைத்துக்கொண்டாள்.

'அத்தான். அத்தான் இந்த அன்புக் கரங்கள், இதற்குச் சொந்தமான உள்ளம். இவையாவும் என் சொந்தம். இந்த உலகத்தில் நான் முதன்மையானதாக நேசிப்பவை' என்று கூறி அவனை இறுகத் தழுவினாள்.

'இவளா எனக்குத் துரோகம் செய்வாள். இருக்காது, இருக்கவே இருக்காது' என்று தன் மனத்துள் தீர்மானித்துக் கொண்டான் பிரகாஷ்'

காலை விடியும் போது புயலாகச் சந்தித்த இருவரும் தென்றலாக மாறி காலையின் இனிய சுகானந்தத்தை அணு அணுவாக நுகர்ந்து இன்புற்றனர்.

'கீதா'

'ம்'

'என்னம்மா'

'என்னத்தான் சொல்லுங்களேன்'

'நீ நல்லவளாக இருக்கும்வரை உன்னை நான் என்றுமே வெறுக்கேன். உனக்கு விருப்பமில்லாத எதையும் செய்யவும் மாட்டேன்.'

'எனக்குத் தெரியுமே' என்று கூறி அவன் கழுத்தை தன் கரங்களால் வளைந்து தன் முகத்தோடு முகமாக இறுக அணைத்துக் கொண்டு இன்ப மழை பொழிந்தாள்.

காலையில் துயில் நீங்கி எழுந்த சுகுண முதல் நாளிரவு நடந்தவற்றை நினைத்துப் பார்த்தாள். அவள் இதயத்தில் நெருப்பு அள்ளிக் கொட்டியது போன்றிருந்தது. நினைவுகள் சுருள் அலைகளாக மிதந்து தெளிந்த போது கணவனைப் பற்றி அவள் கொண்டிருந்த இனிய கனவுகள் யாவும் பயங்கரமாகத் தோன்றின.

தன்னுடைய தங்கையின் வாழ்வைச் சீர்ப்படுத்துவதற்காக வேறு ஒரு பெண்ணின் வாழ்வை......அவள் மனம் ஒப்புக் கொள்ளும் நிலையில் இல்லை. அதே வேளையில் புனிதம் கூட இந்தக் காரியத்துக்குச் சம்மதிக்க மாட்டாள் என்பதை அறிந்து புனிதத்துக்குத் தெரியாமலே விடயத்தைப் பிரகாஷிடம் கூறி அவனைச் சம்மதிக்க வைக்கணும் என்று அவன் போட்ட நிபந்தனையும், அதுவரை விடயம்வெளியில் தெரியாமல் இருக்க வேண்டும் என்பதற்காகத் தன் மீது சத்தியமும் வாங்கிக் கொண்டான் பாஸ்கர்.

'ஏன்டி சுகுணா உனக்கு புனிதம் தந்தவாழ்வுதானே இது. ஏழை வீட்டில் வாழ்ந்த உன்னை மாடி வீட்டில் மருமகளாக்கிச் சீரும் சிறப்புமாக வாழ்கின்றாயே. அவளுக்கு வாழ்வளிக்க நீ......சிந்திக்கின்றாயா?' அவள் உள்ளத்துள் ஓர் சுகுணா அவளிடம் இப்படிக் கூறினாள்.

'எப்படியானாலும் ஆகட்டும். அண்ணனும் கீதாவும் சம்மதித்தால்...... எனக்கோ சந்தோஷம் தான்' என்று கூறி விட்டுப் போனிருக்கும் இடத்திற்குச் சென்றாள்.

'ஹலோ'

'ஜேஸ் நான் தான் கீதா பேசுகின்றேன். யார் சுகுணா போலிருக்கே,'

'ஆமாம் அண்ணி. நான் தான் பே கிறேன். அண்ணன் எங்கே?!

'கல்லூரிக்குப் போய்விட்டாரே.'

'அண்ணி உங்களிடம் ஒன்று கேட்கின்றேன் கோபிக்க மாட்டீர்களோ?'

'என்னடியம்மா பெரிய பீடிகைபோடுகிறாய். நான் உன்னுடன் கோபிப்பேனா? சொல்லேன் சுகுணா.'

'உங்களுக்குக் குழந்தை......'

'குழந்தை இல்லை என்கிற ஏக்கம் தான். என்ன செய்வது. கடவுள் இப்படியே விட்டு விடப் போகிறாரா என்ன? அல்லது எங்களுக்குத் தான் என்ன வயதா போய்விட்டது?'

'வேறு குழந்தை எங்காவது......'

'உன் பிள்ளை இல்லையா? எங்கள் பிள்ளைதானே சுகுணா. ஊரார் பிள்ளையை வாங்கி வளர்த்து என்னதான் காணப் போகின்றோம்.'

'ஏன் அண்ணி அண்ணாவை வேறு கல்யாணம் செய்யச் சொல்லேன்.'

'பைத்தியம். பைத்தியம். நீ அம்மா ஆகிவிட்டாயில்லை. ஆனபடியால் இப்படிக் கேட்டு விட்டாய். குழந்தை இல்லை என்பதற்காக வேறு கல்யாணம் உங்கண்ணன் செய்வாரா? அப்படி அவர் செய்ய விரும்பவும் மாட்டார். குழந்தைக்காக வேறு கல்யாணம் செய்தால் வரபோகிறவளுக்குக் குழந்தை பிறக்குமென்பது என்னடியம்மா நிட்சயம்?'

'அண்ணி நான் சும்மா தான் சொன்னேன்.'

'எனக்கும் தெரியும் சுகுணா. நானிருக்கும் வரை உன் அண்ணா இன்னொரு மனைவியை விரும்ப மாட்டார். ஏன் உன் மைத்துனி புனிதத்தை முன்பு காதலித்தவர் தானே. அவளைக் கூட இனி விரும்பார். நேற்று இங்கே புனிதம் வந்தபோது நானில்லை. பெரிய முசுப்பாத்தி. நீர் ஒருநாள் அவர்களைச் சந்தேகப்பட்டீராமே. அந்த மாதிரி முடிந்து விட்டது சுகுணா. என்னதான் பெண்கள் எப்படி முற்போக்குப் பேசினாலும் கணவன் வேறு ஒருத்திக்குப் பங்காவதை அனுமதிப்பாளா? இந்த அடிப்படையில் எழுவதுதானே சந்தேகம் என்று கீதா பேசிக் கொண்டிருக்கையில் போன் மறு முனையில் வைத்தது கேட்டது.

சுகுணாவால் எதுவுமே பேச முடியவில்லை. உண்மையை அவள் தெட்டத் தெளிவாக்கி விட்டாள். இனி எப்படி அவளிடம் கேட்பது. யாருமே இந்த விடயத்தில் ஒரே மாதிரித்

தான் இருப்பார்கள் போலும். அவனுடைய சிந்தனையைக் கலைப்பதற்கென்றே அங்கு வந்தவள் போலப் புனிதம் வந்து சேர்ந்தாள்.

'என்னண்ணி ஒரு மாதிரி இருக்கின்றாய்?'

'ஏன் அக்கா நீங்கள் நேற்று அண்ணன் வீட்டுக்குப் போகவில்லையா?'

'போனேன். அங்கே உன் அண்ணி இல்லை. நான் அங்கு நின்ற போது......' என்று தொடங்கி நடந்து முடிந்தவற்றைக் கூறி முடித்தாள்.

'அண்ணி' வீட்டிற்கே வந்து விட்டாள். எனக்கு போன் பண்ணினாள். நீங்கள் நேற்று உங்களை மிஸிஸ் பிரகாஷ் என்று கூறியது அண்ணியிடம் தான்.'

'சுகுணா'

'உண்மை தான் அக்கா'

புனிதத்தால் எதுவுமே பேச முடியவில்லை. அவளுக்கு என்ன செய்வது என்று புரியாத ஓர் அதிர்ச்சி. நடக்கக் கூடாதது நடந்து விட்டதே என்று பதட்டம்.

'அண்ணி! அண்ணி! என்னை இந்த இக்கட்டான நிலையிலிருந்து நீ தான் காப்பாற்றணும்' என்று அவள் கால்களைப் பிடித்துக் கொண்டாள் புனிதம்.

'அக்கா எழுந்திருங்கள்' என்று அவளைத் தூக்கி அணைத்தாள்.

சுகுணா என்றும், அண்ணி என்றும் அவளை அழைத்தாலும் வாழ்க்கைப் பட்டத்தில் பெரிய மனுசியாகி விட்டாள் சுகுணா. புனிதம் கன்னிப் பெண் தானே,

அறைக்குள் நடந்த காட்சிகளைப் பார்த்தபடியே ஜன்னல் அருகில் நின்ற உருவத்தைப் பார்த்ததும் புனிதம் மட்டுமன்றிச் சுகுணாவே பதறிப் போனாள்.

# அத்தியாயம் (19)

எண்ணித் துணிவது கருமம் துணிந்த பின் எண்ணுவம் என்பது இழுக்கு என்ற வள்ளுவன் வாக்கிற் கிணங்க கணவ விட்ட கட்டளையை துணிந்து நிறைவேற்ற முயன்றுள் சுகுணு. அதன் ஆரம்பப்படியே அவளுடைய முழுமையான திட்டங்களையும் தவிடுபொடியாக்கி விட்டது.

ஜன்னலுக்குப் பக்கத்தே நின்று அறையில் நடந்தவற் றைப் பார்த்துக் கொண்டு நின்ற கணவனைக் கண்டதும் அவள் மனதில் முதல் அச்சம் தோன்றினுலும் சமாளித்துக் கொண்டாள். அதே வேளையில் அவளுக்குஓர் அசாதாரண துணிச்சலும் தோன்றிவிட்டது.

அக்கா நீங்கள் போங்கள். நான் யாவையும் கவனித்துச் சமாளிக்கின்றேன்' என்றுள்.

புனிதம் சென்றதும் அவள் கணவன் அங்கே வந்து நின் றுன். அவனுகக் கேட்கட்டும் என்ற நினைவில் எதுவும் பேசா மல் நின்றுள் சுகுணு.

என்ன சுகுணு? என்ன நடந்தது?' என்றுன் அமைதியான குரலில், 'ம்' என்று நிமிர்ந்தவள் நடந்தவற்றைக் கூறி முடித்தாள்.

'சுகுணு உன் அண்ணி கீதாவைப்பற்றி எனக்குந் தெரி யும். அவள் சொல்வது எல்லாம் உண்மையும் இல்லை. அவள் சொன்னதினுல் என் திட்டம் நிறைவேருமல் விடப்போவதும் இல்லை. நீ இன்றே புறப்பட வேண்டும். உன் அண்ணனைக் கண்டு நேரில் பேச வேண்டும்.

அத்தான் நீங்கள் படித்த மனிதர், பண்புடையவர், பெண்களைப்பற்றி உங்களுக்குத் தெரியாது.'

எனக்குத் தெரியும் சுகுணா. நான் சொன்னபடி நடந்து கொள்.'

அண்ணி ஒன்றும் பாட்டியல்லவே, அவள் தன் உரிமைகளை விட்டு விட. குழந்தை பெறமாட்டான் என்பதற்கு அவள் என்ன கேட்டாள் தெரியுமா? அண்ணன் மறுமணம் செய்து கொண்டால் அவளுக்கு மட்டும் குழந்தை பிறக்குமென்பது என்ன நிட்சயம் என்று கேட்டாள்.'

அவளைப்போல என் தங்கை ஒன்றும் நடத்தை கெட்டவளில்லை.'

'அத்தான்'

'உன் அண்ணன் மனைவி தான்.' உண்மையிலேயே நடத்தை கெட்டவள் தான்.'

அத்தான் அண்ணி நடத்தை கெட்டவளாயிருக்கலாம், அது என் அண்ணனைப் பொறுத்த விடயம். அவர் இஷ்டம். நீங்கள் ஒன்றும் என்னிடம் கூறவேண்டியதில்லை.

'அவ்வளவு தூரத்துக்கு வந்துவிட்டாயா? சுகுணா. நான் கூறியபடி நீ செய்யப்போகின்றாயா இல்லையா?'

'முடியாது! முடியாது! விரும்பினால் நீங்களே கேட்டுப் பாருங்கள்.'

'கேட்கத்தான் போறேன் சுகுணா. கேட்கத்தான் போறேன்' என்று கூறிவிட்டு வெளியே சென்றான்.

மறுநாட் காலையிலே அக்காள் வீட்டிற்குப் புறப்பட்டு விட்டாள் கீதா. அவள் தன் ஸ்தானத்தில் வேறு ஒருத்தி வந்து விட்டாளே அவள் யாராயிருக்கலாம் என்று பார்க்கத் தான் பறந்தோடி வந்தாள். அவள் யாரோ என்றதும் திடுக்கிட்டாள்.

காதலுக்காகவே வாழ்ந்து அவள் வாழ்வை நசித்து விட்டோமே என்ற மன ஏக்கத்தில் தற்கொலை செய்து கொண்டான் சுதாகர். அவன் இறந்த செய்தியை அன்றைய தினசரி

கள் எல்லாம் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்திருக்கின்றன.

அவற்றைப் பார்த்த போது கீதாவின் கண்கள் கலங்கிக் குளமாகின. அவனுடைய மரணத்துக்கு அடிப்படைக்காரணம் தான் என்பதை அவள் உணராமல் இல்லை. அவனுக்காகப் பயந்திருந்த அவளுக்கு அவனுடைய மறைவு ஓரளவு சாந்தியைக் கொடுத்த அதே வேளையில் பிரகாஷ் அவனுடைய மரணச் செய்தியைக் கேட்டுத் திடுக்கிட்டான். அதிர்ச்சியடைந்தான். அவனைச்சந்திக்க வேண்டுமென்றிருந்தவனுக்கு அவன் மறைந்துவிட்டான் என்ற செய்தி திகைப்பையூட்டியதில் வியப்பில்லை.

மாலையில் சாய்வு நாற்காலியில் படுத்துக் கிடந்தவன் அன்று விளக்கு ஏற்றுவதையும் மறந்து படுத்துச் கிடந்தான். அகமே இருளாகி விட்டபிறகு புறத்தையா நினைக்கப் போகின்றான். அவனுடைய சிந்தனையை தடை செய்வதற்கென்றே ஒலித்தது போல தொலை பேசி மணி கிணு கிணுத்தது.

கட்டுப்பாடின்றி அலைந்த சிந்தனைகளை அடக்கி நிறுத்தி விட்டு எழுந்து மின் சுவிட்சை தட்டிவிட்டான். பின்னர் தொலை பேசியை எடுத்து 'ஹலோ' என்றான்'

'பாஸ்கர் ஸ்பீக்கிங்'

நான் பிரகாஷ் பேசுறேன்.

பிரகாஷ் உங்களிடம் ஒரு விஷயம் கேட்கப் போகின்றேன். நீங்கள்கோபப்படாது என் வேண்டுகோளைக்கொஞ்சம் ஆலோசனை செய்து பாருங்கள். உங்கள் தங்கையிடம் கூறினேன் மறுத்துவிட்டாள், என்றான் பாஸ்கர்.

'பாஸ்கர், என் தங்கை மறுத்தாள் என்றால் ஏதேனும் பொருள் இருக்கத்தான் வேண்டும். ஆனாலும் உங்கள் வேண்டுகோள் தான் என்ன சொல்லுங்கள்.'

'புனிதத்தின் கல்யாண விடயம்,'

'புனிதத்தின் கல்யாண விடயமா? சந்தோஷம். இதனுல் சந்தோஷப்படுபவன் உங்களைத்தவிர இந்த உலகில் முதல் ஆள் நானுகத்தானிருப்பேன்' என்று மகிழ்ச்சியுற்றுன் பிரகாஷ்.

'உங்கள் மனைவி......' என்று அவன் குரல் நின்று விட்டது. அத்துடன் யாரோ பலமாக அழும் ஓசை கேட்டது. வேறு ஒலியே இல்லை.

'ஹலோ பாஸ்கர் பாஸ்கர்.'

பாஸ்கர் பதில் எதுவும் கூறவில்லை. பிரகாஷின் உதடுகளில் ஓர் வரண்ட சிரிப்பு.

புனிதத்திற்கு கல்யாணம். அவள் சந்தோஷமாயிருக்க வேண்டும். அந்தச் செய்தியை முழுமையாய் அறியுமுன்பு தொலைபேசி இணைப்பு நிறுத்தப்பட்டு விட்டது.

துன்பத்தில் உழல்பவனுக்கு துன்பச் செய்திகளை தவிர நல்ல செய்திகளை மகிழ்ச்சி சம்பவங்களைக் கேட்கும் வாய்ப்புக்கள் இல்லைப்போலும்.

புனிதத்தை நினைத்தவுடனேயே அவன் உள்ளத்தில் ஓர் ஒளி. அவளைப்பற்றித் தவருக அவன் நினைத்தது கிடையாது. அவனுக்கு அவள் மீது ஓர் ஆழ்ந்த பற்று அந்தப்பற்றின் உறவு எத்தகையது என்று புரியாத ஓர் புனிதமான தெய்வீக உறவு.

அவளை நினைத்தால் மகிழ்வு! அவளைப் பார்த்தால் மகிழ்வு! அவளுடன் கதைத்தால் மகிழ்வு!

புனிதத்துடன் நேரிலேயே தொடர்புகொண்டு தன் சந்தோஷத்தை தெரிவிக்கலாம் என்றுல் அவளை அழைப்பது எப்படி? தங்கையோ, மைத்துனனே தான் முதலில் போனை எடுப்பார்கள். அவர்களிடம் புனிதத்தைக் கூப்பிடும்படி எப்படி அழைப்பது என யோசித்துவிட்டு பேசாமலிருந்தான்.

ஆனாலும் அவன் இதயத்தில் முளைவிட்டு மணம்வீசும் மகிழ்ச்சியை அவன் மட்டும் அனுபவிக்க முடியாதிருக்கவே கடிதம் எழுதலாம் என எண்ணிக் கொண்டே உட்கார்ந்தான்.

உடனடியாகவே கடிதத்தை எழுதி விமானத் தபாலில் சேர்த்துவிட்டு வீடு திரும்பினான்.

வீட்டிற்கு அவன் திரும்பிய பொழுது மணி இரவு பதினொன்றரை ஆகியிருந்தது. அந்த மகிழ்ச்சியான செய்தியை உடனேயே கீதாவுக்கு தெரிவிக்க வேண்டுமென விரும்பினான் பிரகாஷ். உடனேயே அவளுடன் தொலை பேசியில் தொடர்பு கொண்டான்.

இருளின் பூரண ஆதிக்கத்திலிருந்து அந்த அறையில் மணிச் சப்தம் கேட்டவுடனேயே தொலை பேசியை எடுத்தது ஒரு கரம். எடுத்து இரண்டு மூன்று முறை ,ஹலோ ஹலோ' என அழைத்தது.

மறுமுனையிலிருந்து அழைத்த குரலைக் கேட்டு விட்டு எப்படி என்ன கூறுவது என்று யோசித்துக் கொண்டு 'நின்றான். பிரகாஷ். அதற்கிடையில் அங்கே கேட்ட விடயம் அவன் செவிக்கூடாக ஈயக் குண்டுகளை உருக்கி உள்ளிறக்குவது போன்றிருந்தது. தொலை பேசியைப் பிடித்திருந்த அவன் கரம் நடுங்கியது. உடல் எல்லாம் வியர்த்துக் கொட்டியது.

அவன் கண்ணெதிரே சுதாகருடைய உருவம் தோன்றிற்று. அவன் ஓர் வெற்றிச் சிரிப்புடன் தன்னைப் பார்ப்பது போன்ற நினைப்பு!

மெதுவாக தொலை பேசியை வைத்து விட்டு வந்து கட்டிலில் விழுந்தவன் தான். விடியும்வரை எழுந்திருக்கவேயில்லை.

இரவு பூராவும் அழுது கொண்டே படுத்திருந்தபடியால் எப்போ விடிந்தது என்று தெரியாமலே படுத்துக் கிடந்தாள் புனிதம்.

சில நிமிடங்களாவது தாமதித்திருந்தால் பாஸ்கர் அண்ணன் ஏதாவது உளறியிருப்பான். ஏற்கனவே நொந்து போயி

ருக்கும் பிரகாஷின் உள்ளம் சுக்கு நூறாக வெடித்து விட்டிருக்கும். அதை நினைத்த பொழுது மீண்டும் கண்ணீர் பெருகிற்று புனிதத்திற்கு. விழிகளைத் துடைத்து விட்டுக் கொண்டே எழுந்திருந்தாள்.

அன்று காலையிலிருந்து ஒருவர் முகத்தை ஒருவர் நிமிர்ந்து பார்க்கவில்லை. எல்லோரும் தன் தன் வேலைகளைக் கவனித்துக் கொண்டேயிருந்தனர்.

புனிதம் அன்று பள்ளிக்கூடத்திற்கு லீவு போட்டு விட்டு வீட்டிலே ஆறுதலாக இருப்பதற்கு முடிவு செய்தாள்.

'அக்கா, என்று அழைத்தவாறே அவள் அறைக்குள் நுழைந்தாள் சுகுண.

அவள் இரவு பூராவும் தூங்கவில்லை என்பதற்கு அவளுடைய விழிகளும் முகமுமே சாட்சி பகர்ந்தன.

'என்ன அண்ணி' என்றாள்.

'உனக்கு ஒரு 'எயர் மெயில்' வந்திருக்கு அண்ணாவின் எழுத்துப்போல இருக்கே என்று கூறிவிட்டு அவள் கையில் கொடுத்தாள்.

ஆமாம் பிரகாஷின் கடிதம் தான் என்று கூறிவிட்டுப் பிரித்தாள்.

அவள் கடிதத்தைப் பிரிக்கத் தொடங்கியதும் சுகுண அந்த அறையை விட்டு வெளியே சென்று விட்டாள்.

கடிதத்தின் ஆரம்பமே மகிழ்ச்சிகரமாக இருக்கவே புனிதம் ஆவலுடன் படிக்கலுற்றாள்.

'புனிதம், உனக்குத் திருமணம் என அறிந்ததும் மகிழ்ச்சியடையும் முதல் ஜீவன் நான் தான். அந்த நல்ல செய்தியை அரைகுறையாக உன் அண்ணா சொல்லிக் கொண்டிருக்கும் போதே தடை ஏற்பட்டு விட்டது.'

'வாழ்க்கை நல்லபடியாக இருக்க வேண்டும் என்பது தான் ஆண்டவன் படைப்பின் இலக்கணம். பேராசை

கொண்ட மனிதன் தனக்குத்தானே கொண்ட சில ஆசா பாசங்களால் வாழ்க்கையை நாசமாக்கிக் கொள்கின்றான். அந்த வழியில் புனிதமும் இறங்கிவிட்டாளோ என்று வருந்திக் கொண்டிருந்தேன். இன்று மகிழ்ச்சிக் கடலில் தத்தளிக்கின்றேன்.

புனிதம் நீ புனிதமானவள். என் வாழ்க்கையில் ஓர் வழி காட்டி, நீ என்றும் புனிதமான நினைவுகளுடனேயே வாழ இறைவன் அருள் செய்வான்.

இந்த அடிகளைப் படித்தபோது புனிதத்தின் விழிகள்நீரை உகுத்தன. நானா புனிதமானவள். என் இதயமா புனிதமானது இல்லை பிரகாஷ். ஏதோ பெற்றவள் மேல் வைத்த பாசத்தால் கடமை என எண்ணி அப்படி நடந்து கொண்டேன். ஆனால் என் இதயக் கோயிலில் பிரதிஷ்டை செய்து நான் வணங்கும் தெய்வம் நீங்கள். உங்கள் நினைவே என்னைப் புனிதமாக வைத்திருக்கின்றது. பிரகாஷ் நான் பெரும்பாவி. உங்கள் கபடமற்ற இதயம் எப்பவுமே நல்லதையே எண்ணிப் பழக்கப்பட்டது. நல்லதையே நினைக்கின்றது. நிறைவேற்றவும் செய்கின்றது. அண்ணன் தீய நோக்குடன் உங்கள் மனதைப் புண்படுத்த நினைத்தான். நீங்களோ எனக்குத் திருமணம் என மகிழ்ச்சி கொண்டாடினீர்கள்' என்று வாய் விட்டே கூறி அழுதாள்.

கலங்கிய விழிகளோடு அடுத்த வரிகளைப் படித்தாள்.

'புனிதம்! நினைவுகள் எண்ணிறந்தன. அத்தனையுமா நிறைவேறுகின்றன. கடலில் தோன்றும் அலைகளைப் போன்று நெஞ்சில் தோன்றும் அலைகள்தான் நினைவுகள். அவை தோன்றிய இடத்திலே அல்லது ஓடிச் சென்று கரையில் தானே மடிகின்றன. அப்படியே நினைவு அலைகள் தோன்றி எங்கோ ஓர் இடத்தில் மோதிச் சிதறி விட்டதும் கடந்ததை மறப்பது தான் நல்லது. நல்லதையே சிந்தித்து நல்லதையே செய்து நல்லாயிருப்பாள் புனிதம் என்ற நம்பிக்கை என்னிடம்

நிறைய உண்டு. இந்தக் கடிதம் வரும் கப்பலில் என் மனமும் வருகின்றது உன்னைக் கேலி செய்ய. புனிதம் நீ......' நீர் விழிகளில் நிரம்பி எழுத்துக்களை மறைத்தன.

'ஐயோ பிரகாஷ். நீங்கள் எவ்வளவு குழந்தையுள்ளம் படைத்தவர். உங்களால் தான் இந்தப் புனிதம் புனிதமுடையவளாயிருக்கின்றாள். இல்லையென்றால்......என்று அவள் கூறி முடிப்பதற்குள் சுகுணா ஓடிவந்து அறைவாசலில் நின்றாள்.

'அக்கா உங்களை அண்ணா போனில் அழைக்கிறார்' என்றாள்.

'என்னைப் பிரகாஷ் அழைக்கின்றாரா? உண்மையாகவா? என்றாள்.

'ஆமாம் உண்மையாகத் தான்' என்றாள் சுகுணா.

'ஹலோ' என்று போனை எடுத்ததும் அழைத்தாள் புனிதம்.

'புனிதம் நீங்களா! மனிதன் உண்மையாகத்தான், நல்லவனாக வாழ்கின்றான். சந்தர்ப்ப சூழ்நிலை அவனைக் கெட்டவனாக்குகின்றது. உன்னுடைய திருமணச் செய்தி...'

'இல்லை பிரகாஷ் இல்லை, என்று இடையில் மறுத்தாள் புனிதம்.

'புனிதம் என் கதை முழுவதையும் கேள். இனி கேட்க முடியாமல் போனாலும் போகலாம். சந்தோஷமான செய்தியால் நான் இன்பச் சிறகடித்துப் பறந்து கொண்டிருந்த வேளையில் பெரும் பாதகமான ஒரு விடயத்தை அறிந்தேன். அனேகமாக நாளைக் காலையிலேயே அதன் முடிவு தெரிந்துவிடும் அப்புறம் நான்......புனிதம் என் தங்கையை கணவன் காப்பாற்றுவான். பாஸ்கர், நல்லவர், நீயும் அவளை உன் தங்கைபோலப் பார்த்துக் கொள் என்று கூறிவிட்டு திடீரென போனை வைத்துவிட்டான். அதிர்ந்து போன புனிதம் சுகுணாவைப் பார்த்தபடி நின்றாள்,

# அத்தியாயம் (20)

கீழ் வானில் எழிற் கோலமிட்டு மேலெழுந்தான் கதிரவன், அவனுடைய சக்தி பெரிதாயிருந்தாலும் காரிருள் அவன் எழிற் கோலத்தை மறைத்து மங்கவைத்துக் கொண்டிருந்தது.

பஸ் வண்டியிலிருந்து இறங்கிய பிரகாஷின் உள்ளமும் இருள் கவ்வியிருந்தது. அவனுடைய மனம் மட்டும் பாரமாயிருக்கவில்லை, அவன் கரத்திலிருந்து சிறு பெட்டி பெரும் பாரமாக இருந்தது.

உள்ளமும் உடலும் சோர்வுற்ற நிலையில் தரையைப் பார்த்துக் கொண்டே அருமைநாயகம் இருக்கும் அரசாங்க குவாட்டஸில் உள்ள இல்லம் நோக்கி நடந்து கொண்டிருந்தான் பிரகாஷ்.

வீரச் சின்னங்களையும், வீரத்தையும், இவற்றிற்கும் மேலான மானத்தையும், களத்திலே போக்கி, வெறுங் கையோடு அரண்மனை திரும்பிய இராவணேஸ்வரன் 'பூதலம் என்னும் நங்கை தன்னையே நோக்கிப் புக்கான்' என்று கம்பர் கூறியது போன்று பிரகாஷின் நிலையுமிருந்தது. ஆனாலும் அவன் மனதில் ஓர் ஒளி சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அந்தத் துணிவில் அவன் உள்ளம் துள்ளு நடைபோட்டுக் கொண்டிருந்தது.

வீட்டு வாசலில் கணவனைக் கண்டதும் கீதா பதறிப் போனாள். தன்னைச் சமாளித்துக் கொண்டாள். அவளுடைய பதட்டத்தை மட்டுமல்ல அவளுடைய கழுத்திலிருந்த காணாமற் போய்விட்டதாகக் கூறிய செயினையும் பார்த்துக் கொண்டான்.

'கீதா—உன்னைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. உடனே புறப்பட்டு வந்து விட்டேன்' என்றான்.

'வாருங்கள் அத்தான். நான் கூட உங்களை நினைத்துக் கொண்டுதானிருந்தேன்.'

'ம்' என்று கூறிச் சிரித்து விட்டு உள்ளே நுழைந்தான்.

'வாருங்கள்' என்றாள் உள்ளேயிருந்த சுவர்ணா.

'ஓ......' என்று கூறிவிட்டு அமர்ந்தான் பிரகாஷ்.

இது என்னத்தான் பெட்டி என்றாள் கீதா.

'இதுவா? ரேப்றிக்காடர். மலிவு விலையில் சந்தித்தது. எடுத்துக்கொண்டேன்' என்று சமாளித்தான்.

அதற்கிடையில் கீதா தன்னுடைய கழுத்தில் கிடந்த செயினை கழற்றி மறைத்து விட்டாள். நொடிப் பொழுதில் அவனுடைய விழிகள் அவள் கழுத்தைப் பார்த்து விட்டன. அவனையறியாமலே அவன் விழிகள் கலங்கின.

'கீதா சூடாக கோப்பியிருந்தால் எடுத்துவாவேன்' என்றான்.

அவனுக்கு முன்னே நிற்பதற்கு பதட்டப்பட்டுக் கொண்டு நின்ற கீதா கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு உள்ளே சென்றுவிட்டாள்.

'சுவர்ணா! நீங்கள் என் மனைவிக்கு அக்காவானாலும் எனக்கும் ஒரு சகோதரி போல. உங்களிடம் ஒரு விடயம் கேட்கப் போகின்றேன். உண்மையைப் பேச வேண்டும்' என்றான்.

'உங்களிடம் பொய் பேச மாட்டேன். பொய் பேசி பழக்கமும் இல்லை. கேளுங்கள்' என்றாள்.

உடனே ஒலிப்பதிவுக் கருவியைத் தட்டிவிட்டான்.

'நீங்கள் ஒலிப்பதிவு செய்யப் போகின்றீர்களா?

'ஆமாம், சுவர்ணா நீங்கள் உண்மை பேசுபவராயின்

பயப்பட வேண்டாம். என் கேள்விகளுக்கு மட்டும் பதில் தாருங்கள்.'

'கேளுங்கள்'

'உங்களிடம் கேட்கக் கூடாத கேள்விகள். ஆனல் கேட்க வேண்டிய நிலையிலிருக்கின்றேன். முதலில் மன்னித்து விடுங்கள். கல்யாணமான புதிதில் கர்ப்பத்தடை வில்லைகளை நீங்கள் பாவித்தீர்களா?

'இல்லையே. உங்களிடம் அப்படி யாராவது கூறினர்களா?' என்முள் சுவர்ணு.

'நான் கேட்ட கேள்விக்கு மட்டும் பதில், பின்பு உங்கள் கேள்விகளுக்கு நான் பதில் தாரேன்.'

'சரி கேளுங்கள்.'

உங்கள் சகோதரி கீதாவுக்கு கல்யாணத்தின் போது அப்படி நடந்து கொள்ளும்படி கூறினீர்களா?'

'இல்லையே. நான் அப்படி தீயகாரியங்களிலீடுபடுவதில்லை. என் தங்கைக்கு அந்த வழியைக் காட்டியதும்இல்லை.'

'தாங்ஷ்'

'உங்கள் தங்கை வரட்டும், நான் ஏன் கேட்டேன் என்முல், பந்த பாசம் பின்னல் உங்களைப் பொய் பேச வைக்கும், வைத்துவிடும் என்ற ஒரே ஒரு காரணத்தினல்தான் உங்களிடம் இப்படி நடந்து கொண்டேன் மன்னித்து விடுங்கள்' என்று கூறிவிட்டு இருந்த பொழுது கீதா கோப்பியுடன் வந்து சேர்ந்தாள். கோப்பியை வாங்கிக் கையில் வைத்துக் கொண்டே இருந்தான்.

'குடியுங்கள் அத்தான்' என்முள் கீதா.

'நம்பிக் குடிக்கலாமா?' என்முன்.

'அத்தான்' பிரகாஷ்' என்று கீதாவும், சுவர்ணுவும் ஏக காலத்தில் ஏக்கக் குரலில் கூவினர்.

'பதட்டப்படாதீர்கள்.' நான் உன்னைத் தனியே வைத்து என் வீட்டில் கேட்டிருக்கலாம். ஆனால் நீயும் அக்காவும் சேர்ந்தே என்னிடம் அறிமுகமானீர்கள். உன்னை உன் தமக் கையாரடியில் வைத்துக் கேட்பது தான் முறை. உன் மீது நான் வைத்திருந்த நம்பிக்கை காலையில் உன்னைப் பார்த்த பொழுதே முற்றாக தீர்ந்து போய்விட்டது. கீதா நீ இப் பொழுது என்னைக் கொல்வதற்கும் தயங்கமாட்டாய்.'

'அத்தான் என்ன வார்த்தை சொன்னீர்கள். இந்த உல கிலே நான் காணும் முதல் தெய்வம் நீங்கள் தான்.

'தெய்வத்திடமே பொய்யும், மறைப்பும், களவும் செய்ய லாமா? உன் அக்காவையே கேள்.'

'கீதா நான் உனக்கு கற்பத்தடை வில்லைகளைப் பாவிக் கும்படி கூறினேனா? தந்தேனா? இல்லை நான் பாவித்தேனா?' என்றாள் சுவர்ணா.

'அக்கா வந்து......வந்து......நான்'

'போதும் நிறுத்து கீதா. நீ அன்று செயின் காணமல் போய்விட்டதாகக் கூறினாய். இன்று நான் வரும் பொழுது உன் கழுத்தில் கிடந்தது, திடீர் என எப்படி மறைந்தது?' 'ஏன் மறைந்தது?'

'அத்தான்'

'அத்தான் செத்து விட்டான் கீதா. இன்றல்ல இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு. நீ நல்லவள் கண்ணியமுள்ள வள் என்று தான் நம்பியிருந்தேன் நீ......நீ......என்னுடன் வாழும் தகுதியற்றவள் கீதா. வாழும் தகுதியற்றவள்.'

'நான் சொல்வதைக் கேளுங்கள் அத்தான்' அவள் கூறிய பொழுது அந்த அறைக்குள் வந்தான் அருமைநாயகம்.

ஓ...... மிஸ்டர் பிரகாஷ் இப்போதான் வந்தீர்களா?'

'ஆமாம் இப்போதான் வந்தேன் மிஸ்டர் அருமை. இங்கு எங்கே போனிருக்கின்றது?' என்றான் பிரகாஷ்.

'ஆபீஸ் ரூமில் தான்'

'அத்தான் என்னை மன்னித்து விடுங்கள் அத்தான் என்று அழுதாள் கீதா.

'என்ன நடந்தது. ஏன் கீதா? அழுகின்றாள்? என்ன பிரகாஷ் இதெல்லாம்.' அவசரமாக எதுவுமே தெரியாதவன் போலக் கேட்டான் அருமைநாயகம்.

'இது எங்கள் குடும்ப விடயம். நீங்களும் நில்லுங்கள். நீங்களும் அறியத்தானே வேண்டும்' என்றான் பிரகாஷ். மனைவியின் பக்கம் திரும்பி, கீதா தவறை உணர்ந்து விட்டாய் தானே என்றான்.

'உண்மைதான் அத்தான். இனி நான் பொய் சொல்ல மாட்டேன். ஏதும் நினைப்பீர்களோ என்று பயந்து தான் சொன்னேன். இனிமேல் நான் சிறு விடயத்துக்குக் கூடப் பொய் சொல்லமாட்டேன்'

'உண்மையாக'

'சத்தியமாக. கடவுளிலும் மேலானவன் ஒருவன் இல்லை. அந்தத் தெய்வத்தின் மீது ஆணையாக.'

'கீதா கடவுளைக் கூட மனிதன் ஏமாற்றுவதாக தன்னைத் தானே ஏமாற்றுகின்றான். மாங்கல்யம் புனிதச் சின்னம். பெண் குலத்தின் தலையாய சின்னம். கணவன் - மனைவி என்ற தெய்வீக உறவின் பிணைப்பை உணர்த்தும் உன்னதமான ஓர் ஒப்பற்ற பொருள். தெரியுமா உனக்கு?'

'தெரியும் அத்தான் தெரியும்.'

'ஆல்ரைட். உங்கள் ஆபீஸ் ரூமில் மட்டும் தான் டெலிபோன் இருக்கா' என்றான் அருமைநாயகத்தைப் பார்த்து.

'ஆமாம் வாருங்கள்' என்றான்,

:போவோம். கீதா நீ முந்த நாள் இரவு எங்கே போயிருந்தாய்.'

'இங்கேதானிருந்தேன். அடுத்த ரூமில் அக்காவின்பிள்ளை யோடு படுத்திருந்தேன்'

'நீங்கள்.........' என்று அருமைநாயகம் பக்கம் திரும்பினுன்.

'நான் ஆபீஸ் ரூமில்தான் படுத்திருப்பேன். என்ன மிஸ்டர் பிரகாஷ் பொலிஸ் இன்ஸ்பெக்டர் மாதிரி கேள்வி கேட்கின்றீர்கள்? என்ருன்.

'நீங்கள் இங்கே தான் படுத்திருப்பீர்களா சுவர்ணு'

ஆமாம்'

'கீதா. முந்தநாளும் நேற்றும் இரவு பதினெரு மணிக்குப் பின்பு நீ அதே அறையில் தான் படுத்திருந்தாயா?'

'ஆமாம்' என்று உறுதியாகக் கூறினுள் கீதா.

'நீ பொய் சொல்லவில்லையே'

'இல்லை அத்தான்.'

'உங்கள் அறையில் போன் மணி ஒலிக்க வில்லையா மிஸ்டர் அருமைநாயகம்'.

'எனக்கு இரண்டு நாளும் எட்டு மணி தொடக்கம் ஒரு மணி வரை ஓவர் ரைம். ஒரு மணியின் பின்புதான் வீடு வந்தேன்' என்ருனுயினும் அவன் உள்ளம் நடுங்கிக் கொண்டிருந்தது. அதே வேளையில் கீதாவின் உடல் அசையாத சிலையாக நின்ருலும் உள் உறுப்புகள் யாவும் துடித்துக் கொண்டிருந்தன.

'ஆல்ரைட் கீதா' என்று கூறிவிட்டு ஒலிப்பதிவுக் கருவியை சுற்றிவிட்டு சுவிட்சை முடுக்கி விட்டான்.

இந்தியாவிலிருந்து பதினெருமணிக்கு நடைபெறும் நிகழ்ச்சி மதராஸ் வானெலி நிலையத்திலிருந்து ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. அதே வேளையில் பிரகாஷ் 'றங் கோல்' புக் பண்ணுவதற்கு தொலை பேசி இணைப்புக் காரியாலயத்துக்கு தொடர்பு கொண்ட விடயமும் கேட்டது.

பத்து நிமிடத்தின் பின்பு தொலைபேசி மணி அடிக்கும் சப்தம் அறையில் கேட்டது.

சில வினாடி நேரம் மௌனம். வானொலியின் இசை நிறுத்தப்பட்டுவிட்டது.

'ஹலோ ஹலோ......என்ற குரல் தொலைபேசியின் மறு பக்கத்திலிருந்து போனில் கேட்டது. தொடர்ந்து ஹலோ... ஹலோ......' என்ற குரல்தொடர்ந்து 'வையுங்கள் போனை. நேற்றும் இப்படித்தான். யாரோ சிவபூசையில் கரடி நுழைந்த மாதிரி. றிசீவரை கீழே வையுங்கள்' என்று கூறியது ஒரு பெண் குரல்.

'கீதா சில வேளை எங்களுக்குத் தெரிந்தவர்கள் யாராவது? சில வேளை உன் கணவரே......'

'சே சே. அவர் இந்நேரம் தூங்கியிருப்பார்.'

மாறி மாறி இருவருடைய குரல்களும், சிரிப்பும், வேறு வித ஓசைகளுமாகக் கேட்டுக் கொண்டேயிருந்தன.

கீதா மயக்கமுற்று கட்டிலில் சாய்ந்து கொண்டாள்.

அருமைநாயகம் விறைத்துப் போய் மரம்மாதிரி நின்றிருந்தான்.

சுவர்ணாவால் எதுவுமே பேச முடியவில்லை. அவள் சலனமற்று இருக்கும் பிரகாஷை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். 'சுவர்ணா' இந்தக் கபட நாடகத்தில் தங்களுக்கும் பங்கிருக்கும் என்றுதானிருந்தேன், ஆனால் நீங்கள் ஓர் அப்பாவி என்று புரிந்து கொண்டேன். கீதாவுடன் இருந்த ஆடவன் யார் என்பதையும், உங்கள் கணவர் ஒவர்ரைம் செய்ததையும் நீங்கள் அறிந்திருப்பீர்கள். உங்கள் தங்கையை நான் இத்தனைக்குப் பின்பும் ஏற்றிருப்பேன். ஆனால் அவள் உடனேயே சத்தியத்தை மறந்து பொய் பேசி விட்டாள். இவளுடன் இணைந்து வாழ்வது எப்படி? இவள் கையால் உண்பது எப்படி? நீரே சொல்லும். இன்னும் நான் கூடி வாழத்

தான் வேண்டுமா?' ஆவேசமாகப் பேசும் குரல் கீதாவுக்கும் கனவில் கேட்பது போல கேட்கத்தான் செய்தது.

'பிரகாஷ் உண்மையில்......நான்......நான்......என்றால்......எதுவுமே......'

'சுவர்ணா உன் கணவர் விரும்பியிருந்தால் கீதாவையும் உங்களோடு வைத்திருந்திருக்கலாம். நான் அவரைப் பெரிய மனிதனாகத்தான் நினைத்திருந்தேன்......நான் வருகின்றேன் சுவர்ணா எங்கே போகின்றேன் ஏன் போகிறேன்......என்று தெரியாத இடத்துக்குப் போகின்றேன்.' என்று கூறிவிட்டு நடந்தான். அவன் கால்கள் எங்கு இழுத்துச் சென்றதோ அதன் போக்கிற்கு நடந்து கொண்டிருந்தான். தெருவில் வந்து கொண்டிருந்த மோட்டார் வண்டியுடன் மோதுண்டு கரையில் தூக்கி எறியப்பட்ட பிரகாஷ், தேடுவார் அற்ற அனாதையாகக் கிடந்தான்.

## அத்தியாயம் (21)

நாம் நினைப்பதற்கு மாறாகவே உலகில் பல காரியங்கள் நடந்து முடிவதுண்டு.

கனவு நிகழ்ச்சிபோல நடந்து விட்ட காரியத்தால் தாக்குண்ட நிலையில் அதிர்ந்து போய் உட்கார்ந்திருந்தாள் சுவர்ணா.

'அக்கா என்னை மன்னித்து விடு' என்று அவளைச் சென்று அணைத்துக்கொண்டாள் கீதாஞ்சலி.

'அக்கா'

'நானா உன் அக்கா. சீ நாயே! எடு கையை. உன் பாபம் படிந்த கரங்களால் என்னைத் தீண்டாதே! என் பிள்ளை போல் நினைத்தே உன்னை வளர்த்தேன். துரோகி நீ என் தங்கையா?

நான் உனக்கு அக்காளா? என்னைப் பார்க்க, என் முன்னால் நிற்க உனக்கு வெட்கமாயில்லை' பத்திரகாளியாக மாறி விட்டாள் சுவர்ணு.

'அக்கா நான்......நான்......'

'போடி வெளியே! நீ கேட்டிருந்தால் என் வாழ்வை உனக்கே தந்திருப்பேன். ஆனால்......ஆனால்......

'அக்கா'

'அக்கா என்று என்னை அழைக்காதே' என்றாள்.

'அக்கா' என்றாள் கீதா.

அடுத்த கணம் 'பளீர் பளீர்' என்று மாறி மாறி சுவர்ணு வின் கரங்கள் கீதாவின் கன்னத்தில் பட்டுத் திரும்பின. கீதா அசையாமல் நின்றிருந்தாள்.

'சுவர்ணு' என்று பாய்ந்து அவள் கரங்களைப் பற்றினான் அருமைநாயகம்.

சுவர்ணுவின் ஆவேசம் யாவும்—கணவன் பக்கம் திரும் பியது. அவளைப் பார்க்கவே அருமைநாயகம் நடுங்கினான்.

'என்ன? அவளுக்கு பரிந்து பேச உமக்கு என்ன யோக்கி யதை உண்டு. பெற்றவளில்லாத பிள்ளை. நீ தந்தையாயிருக் கின்றாய் என்று இறுமாந்திருந்தேன். நீ என்ன செய்தாய்? கணவன் கை விட்ட நிலையில் கண்ணீரும் கம்பலையுமாய் நிற் கும் அவளைப் பார். நீ மனிதனா! மனித மிருகமா? பெற்ற பிள்ளையைப் போல வளர்த்து உன் இச்சைக்குப் பலியாக்கி விட்ட மனித மிருகமே! நீ ஒரு ஆண் பிள்ளையா? சுவர்ணு வின் கணவனா? உன் செயலை உலகம் அறிந்தால் ஆண் குலத் துக்கே உன்னால் அவமானம். நான்கைந்து பெண் பிள்ளைகள் உள்ள வீட்டில் உன்னைப் போன்ற ஒரு கேடு கெட்டவனை எப்படி மூத்த மருமகனாக நம்பி எடுப்பார்கள். ஆண் குலத் தின் அவமானச் சின்னமே பார். உன்னால் சீரழிந்து போயி ருக்கும் தங்கச் சிலையை. நீ மனிதனா? நீ மனிதனா?' சீறிற்று பெண்புலி.

அவனைக் கணவன் என்றல்ல ஓர் கயவனை முன் நிறுத்தி நீதி கேட்கின்றோம் என்ற நிலையில் குமுறினாள்.

'சுவர்ணா' என்று கதறியவாறே அவள் கால்களில் விழுந்தான் கணவன் அருமைநாயகம்.

'அத்தான்' என்ற கதறியவாறே பின்னுக்கு நகர்ந்தாள் சுவர்ணா.

'சுவர்ணா'

'இந்த மிருகத்தை மன்னித்துவிடு. நீ உத்தமி, உன் மனதைப் புண்படுத்தி விட்டேன். என் சிந்தையை திறந்து விட்ட தெய்வமே என்னை மன்னிப்பாயா, மன்னித்தேன் என்று ஒரு வார்த்தை சொல்' என்று கத்தினான்.

சுவர்ணா சிந்தித்தாள். நடந்து முடிந்து விட்ட ஒன்றுக்காக இனி அழுது பலனில்லை. நல்ல இதயத்தால் நல்லவற்றைத் தவிர வேறு எதையுமே சிந்திக்க முடியாது போலும்.

'கீதா' என்றாள்.

'ம்' என்று பயந்தபடியே அவளைப் பார்த்தாள்.

'உண்மையில் இவரை நீ விரும்புகின்றாயா?'

'இல்லை அக்கா'

'பொய் பேசாதே. நான் உன் உடன் பிறந்தவள். பயமின்றி உள்ளதைச் சொல்' என்றாள்.

'பயந்து பொய் சொல்லி நடந்ததை அனுபவித்து விட்டேன். அனுபவிக்கின்றேன். இனி எனக்குச் சொல்லி என்ன வரப்போகின்றது? நான் இந்த உலகில் விரும்பியது, விரும்புவது அன்பு செலுத்தியது அவர் ஒருவரைத்தான்.' விழிகள் அருவியாகி இரத்தக் கண்ணீர் வடித்தன.

'அப்படியென்றால்......?'

'ஏன் இவருடன்......என்று கேட்கப் போகின்றாய் இல்லையா?' நான் எதிர்பாராத விதமாக நடந்த விபத்தில் சிக்கி

விட்டேன். அன்று தொட்டு ஒரு தொற்று நோய் போல் என்னைப் பிடித்துவிட்ட அசுர உணர்ச்சி நோய் என்னை பெண்ணினத்தில் விரோதியாக்கி விட்டது என்னை மன்னித்து விடு' என்றாள்.

'கீதா. நீ விரும்பினால் என்னுடன் இருந்து வாழலாம். நான் மனப்பூர்வமாகச் சொல்கின்றேன்' என்றாள் சுவர்ணா.

'இல்லை அக்கா நானும் உண்மையாகத்தான் சொல்கின்றேன். அவர் இல்லாத இந்த உலகில் எனக்குப் பந்தம்-பாசம் உறவு எதுவுமே இல்லை' என்று கூறிவிட்டு அறைக்குள் சென்றாள்.

மறுநாட் காலையில் யாழ். ஆஸ்பத்திரியில் கட்டிலில் படுத்திருந்த பிரகாஷ் கண் விழித்த பொழுது அவனைச் சுற்றி வர புனிதம், சுகுணா, பாஸ்கர் நின்றிருந்தனர்.

அவர்களைப் பார்த்தும் அவன் விழிகள் பனிந்து நனைந்தன. பேச முயன்றான், முடியவில்லை. கைகளால் தங்கை சுகுணாவை அழைத்து துன்பப்படவேண்டாம் எனச் சைகை மூலம் உணர்த்தினான்.

கிளிநொச்சியிலிருந்து புறப்பட்டவன் மோட்டாருடன் மோதுண்டதும் உடனடியாகப் பக்கத்து ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்ட பின்பு மறுநாள் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றிருந்தனர்.

நாட்கள் பல நகர்ந்தன. பிரகாஷ் சுகமாகி வீடு திரும்பினான். தங்கையின் வீட்டிலேயே தங்கியிருந்தான். புனிதமும் சுகுணாவும் அவனை கண்ணும் கருத்துமாசக் கவனித்து வந்தனர்.

காலைப்பொழுது வருவதற்கான அறிகுறிகள் கீழ் வானில் செங்கோடுகள் காரிருளைக் கொண்டு பளபளத்தன.

அதிகாலையிலேயே விழித்துக் கொண்ட பிரகாஷ் ஜன்னலின் ஊடாக உதயத்தின் முன்பு கீழ்வானில் நடைபெறும்

இந்திர ஜாலக் காட்சிகளையும் உஷைக் கன்னியின் எழிலார்ந்த இன்பக் காட்சியையும் கண்டு இன்புற்ற படியே படுத்துக் கிடந்தான். அவனுடைய மனதில் என்றைக்குமில்லாதவாறு ஓர் இன்பம்.

கடும் கோடையில் இலைகளை உதிர்த்துவிட்டு மொட்டையாய் நிற்கும் மரம் இளந் துளிர்களைப் பரப்பி காலையிளங் காற்றில் குளிர்ந்து சிலு சிலுத்து நின்றது போன்ற ஓர் குளுமை:

புட்களின் பல்வேறு ஓசைகள். நானுவித ஒலிகள். அதிகாலை பொழுதின் அலங்காரங்கள் இவை.

ஓர் குடும்பப் பெண் காலையில் எழுந்து குளித்துவிட்டு தன்னை அலங்காரம் செய்து கொண்டு மகா லட்சுமி போல காலையில் விளங்குவதைப் போன்று இயற்கையும் காலையில் தன்னை அலங்காரம் செய்து கொள்ளும் காட்சியை ரசித்தவாறே படுத்துக் கிடந்த பிரகாஷின் அறையில் காலரவம் கேட்கவே நிமிர்ந்து பார்த்தான்.

'அண்ணு' என்ற பாசக் குரல்.

'என்னம்மா சுகுணு, அதிகாலையிலேயே எழுந்து விட்டாய்?'

'இன்று வெள்ளிக்கிழமையல்லவா. கோயிலுக்குப் போக வேண்டும். அதுதான்'

இன்று வெள்ளிக்கிழமையா? எனக்கு நாட்கள் போவதும் தெரியவில்லை, என்ன நாள் என்றும் நினைவில்லை. சரி போய் விட்டு வா சுகுணு' என்முன்.

'பிளாஸ்கில் கோப்பி வைத்திருக்கிறேன்' என்முள்.

'கோப்பியா? சரியம்மா நீ போய்வா' என்முன்.

காலைக் கடன்களை முடித்துக் கொண்டு மேசையில் கிடந்த ஓர் புத்தகத்தை எடுத்துப் புரட்டிக் கொண்டிருந்தான்

'பிரகாஷ்'

திரும்பிய பிரகாஷின் கண்கள் இமைப்பதை மறந்து நின் றன. ஈரம் உலர்வதற்காக முடியாது விட்ட கூந்தலுடன் நெற்றியில் வீபூதி சந்தணத்துடன் கையில் கோயிலுக்குக் கொண்டு சென்ற பிரசாதத் தட்டுடன் சிரித்த முகத்தோடு நின்ற புனிதத்தை அப்படியே பார்த்துக் கொண்டு நின்ற வனால் எதுவுமே பேச முடியவில்லை.

'என்ன பிரகாஷ்' என்னுடன் கோபமா?' என்றாள் புனி தம்.

'புனிதம், நான் யாருடனும் எதற்காகவும் எப்பவும் கோபிப்பவன் அல்லன். எனக்குப் பிடிக்காவிட்டால் ஒதுங் இக் கொள்வேன். அவ்வளவுதான்.

'இந்தாருங்கள் கோயில் பிரசாதம்' என்று அர்ச்சனைச் சாமான்கள் கொண்ட தட்டை அவனிடம் நீட்டினாள்.

வீபூதியில் கொஞ்சம் எடுத்து நெற்றியில் இட்டுக் கொண்டான். பின்பு கண்களை மூடிக்கொண்டே இன்னும் என்னை ஏன் வைத்து வேடிக்கை பார்க்கின்றாய்' என்றான்.

'பிரகாஷ்' என்று அவன் வாயைப் பொத்தினாள் புனி தம். அவள் விழிகள் நீர் முத்துக்களைச் சொரிந்தன.

'அண்ணா' என்று அழைத்தவாறே அறைக்குள் நுழைந்த சுகுணாவைக் கண்டதும் விலகி நின்றாள் புனிதம்,

ஓ......நீங்கள் இங்கேயே வந்துவிட்டீர்களா?' என்றான்.

'யாருக்காக இவற்றையெல்லாம் செய்து வந்தேனோ அவரிடமே கொடுத்து விட்டுப் போகலாம் என்றுதான் வந் தேன். அவர் ஏதோ எல்லாம் அலட்டுகின்றார்' என்று கூறி விட்டு வெளியே சென்றாள் புனிதம். எட்டரை மணியிருக்கும் கையில் ஓர் கடிதத்துடன் அறையுள் வந்தாள் புனிதம்.

அவள் கையிலிருந்த கடிதத்தை வாங்கிப் பார்த்து விட்டு 'இது இப்போதான் வந்துள்ளது. எனக்கு ஒன்றும் வந்துள் ளது' என்று கூறிவிட்டு வெளியே சென்றுவிட்டாள் புனிதம்'

கடிதத்தின் முத்திரையிலிருந்து அக் கடிதம் கிளிநொச்சியிலிருந்து வந்தது என்பதைத் தெரிந்து கொண்டான் பிரகாஷ்.

கடிதத்தை பிரித்துப் படிப்பதா? அன்றிப் படிக்காமல் அப்படியே வைத்துவிடுவதா? என்று சில நிமிடங்கள் மனப் போராட்டத்திலிருந்தான். தேவையற்றவர்களோடு என்ன கடிதத் தொடர்பு வேண்டியிருக்கு என்று ஒரு முறை எண்ணினான். மறுகணம் அவன் மனதில் ஓர் சிறு சலனம். என்ன தானிருக்கும் என எண்ணிக் கொண்டே கடிதத்தைப் பிரித்தான். நீண்ட கடிதம்.

அன்புள்ள அத்தான்!

இப்படி அழைக்க எனக்கு உரிமையில்லை. ஆனாலும் அழைக்கின்றேன். மாபெரும் செல்வமாக எனக்கு நீங்கள் கிடைத்தீர்கள். ஆனால் நான்...நான்... உதாசீனப்படுத்தி விட்டேன். நான் ஒரு சாதாரணப் பெண். உங்கள் மனைவியாக வாழ்ந்த காலத்தில் கொஞ்சமாயினும் உங்கள் லட்சியங்களோடு ஒட்டி வாழ்ந்தவள். ஆனாலும் என்னைப் பிடித்த கேடு, கெட்ட நோய், கொடிய நோய், மனிதப் பண்பிலிருந்து என்னை வேறுபடுத்திவிட்டது, இதற்குக் காரணம் நான் அல்ல.

அத்தான்! இந்த உலகில் உண்மையில் நான் விரும்பியவர், நேசித்தவர், நீங்கள் ஒருவர் என்றுதான் கூறவேண்டும். உங்களுக்குப் பிடிக்காத ஒன்றைச் செய்தேன் என்றால் அது நான் விரும்பியல்ல என்னையறியாத ஓர் அசுர சக்தி தீய உணர்வுகள் என்னுடலை ஆக்கிரமித்திருந்தது. அதற்கு நான் பேய்பிடித்தவள்போல ஆளாகிவிட்டேன். உண்மையில் நான் விரும்பி ஏற்றுக்கொண்டதோ முழுமையான இன்பம் அனுபவித்ததோ இல்லை.

அத்தான்! உங்களோடு பேசும் ஒவ்வொரு நிமிடமும், உங்களோடு உறவாடிய ஒவ்வொரு கணமும் நாள் அளவிலாப் பேரின்பமடைந்தேன். நான் கெட்டவள் என்றால்

அதற்குக் காரணம் நான் அல்ல. என்னுடைய தமக்கையின் புருஷன் தான்.

அந்தக் கொடியவன் நல்லவன் என்று நம்பினேன். தாய் தந்தை அற்ற நான் என் அக்கா சுவர்ண வீட்டில் தான் அதிகம் தங்குவது உண்டு. நான் பெரியவளாகி இரண்டாவது வருடம் அக்கா பிரசவித்திருந்தாள்.

அக்காவின் கணவனுக்கு தேவையான கடமைகளைச் செய்து வந்தேன். வேலை செய்வதினால் உடல் களைப்பு, அயர்ந்து தூங்கிவிடுவேன்.

ஒரு நாள் அமாவாசை, கடும் இருட்டு. தூங்கிப்போன என்னை இருளின் கோரப்பிடியில் ஏதோ அமுத்துவதை உணர்ந்தேன், பயம் வேறு என்னை ஆட்கொண்டிருந்ததால் கத்துவதற்கு முயற்சித்தேன். சத்தம் வெளியே கேட்கவும் இல்லை, தொண்டையை விட்டு வெளியே வரவும் இல்லை. என் உடல் யாவும் ஒரே வேதனை. ஆனால் அந்த வேதனையினூடே இனம் புரியாத எதையோ, என் உடலினுள்ளிருந்து அந்தப் பலவந்த முயற்சி முடுக்கிவிட்டிருக்க வேண்டும். அந்த அசுர உணர்வு வேதனையையும் இதமாக்கி என்னை அசைய விடாது செய்தது. அந்த மிருகத்தின் கோரவெறிக்கு என் பெண்மை பலியிடப்பட்டு விட்டது, என்னை அறியாமலே இடந்தேன்.

பின்பு விழித்த பொழுது தான் என் நிலை எனக்குப் புலனாயிற்று. நான் அழுதேன் என்பதைத் தவிர என்ன செய்திருப்பேன்? நீங்களே சிந்தித்துப் பாருங்கள்.'

இந்த அடிகளைப் படித்த பொழுது பிரகாஷின் விழிகள் கலங்கி நீர் மல்கி எழுத்துக்களை மறைத்து நின்றன.

# அத்தியாயம் (22)

ஒருவரிடம் இருக்கும் நல்ல குணங்களைச் சொல்வதை விட தீய குணங்களைத் தன் வாயாலேயே சொல்லும் பொழுது, தானே தன் பலஹீனங்களை ஒத்துக்கொள்ளும் பொழுது, எந்தக்கடின இதயமும் உருகத்தான் செய்கின்றன. கீதா என்னதான் கெட்டவளாயிருந்தாலும் அவள் தன் வாழ்க்கையின் இரகசியங்களைச் சொல்லும் பொழுது, பிரகாஷின் இதயம் இரங்கி விட்டது. அந்த இரக்க இதயம் இளகி விட்டபோது விழிகள் மடை திறந்து பெருக ஆரம்பித்து விட்டன.

விழிகளிலிருந்து பெருகிய நீரைத் துடைத்து விட்டுக் கொண்டே மீண்டும் கடிதத்தைப் பார்த்தான்.

அந்தக் கடிதத்தை அவள் மையினால் எழுதவில்லை என்றே எண்ணத் தோன்றியது. தன் இதயத்தை பிடுங்கி வைத்து அதில் உள்ள இரகசியங்களை தொட்டு எடுத்து பேப்பரில் அச்சடித்து விட்டது போன்றே தோன்றிற்று.

'அத்தான்! என்னைக் கெடுத்த மிருகம் என் அக்காளின் கணவன் என்பதை நான் ஊகித்துக் கொண்டேன். அந்த மிருகத்தின் இழி செயலை எப்படி வெளியே சொல்வேன்? யாரிடம் சொல்வேன்? சொல்லனாம், என் அக்காளின் வாழ்வு? அவளிடம் நான் வைத்த பாசம் மறுபுறம். கல்யாணமாகி தலைப்பிள்ளைக்கு தாயாகி நிற்கும் அவளிடம் இந்தச் செய்தியைக் கூறியிருந்தால் என்ன நடக்கும். நீங்கள் ஓர் உத்தமர் உணர்ந்து பாருங்கள்.

இப்படி ஒரு சந்தர்ப்பத்தில் நான் விரும்பியா நடந்து கொள்வேன். என்னதான் நான் பெண்ணயிருப்பினும் ஒரு மிருகத்தின் தாக்குதலுக்குள்ளான பின், அவன் மீது அன்பு பாராட்டுவேனு? அன்பு கொள்ளத்தான்மனம் வருமா?

என்னிடம் அன்பு காட்டினுன் அவன். அவனும் என் உடலை மோகித்தானேயன்றி என் உள்ளத்தையல்ல. ஆனல் அந்த உடல் உணர்வுகள், அந்த வெறிப் போராட்டத்தில் ஊறிய உணர்ச்சி சக்திகள், என்னுடலில் கலந்து விட்ட தாலோ என்னவோ அடுத்த நாள் அதே வேளையில் என்னுட லில் என்னையுமறியாத ஓர் அசுர உணர்ச்சி, என்னை வாட்டி யது. என் பெண்மை உள்ளத்தை உலுப்பி எடுத்தது, காமத் தின் கோர ஆட்சி என் உடலை ஆக்கிரமித்தது. அணு குலை யாத என்னுடல் தகித்துக் கொண்டிருந்தது. என்னையறியா மலே என் உணர்வுகள் பெண்ணுக்குரிய சகல குணங்களையும் மறந்து நடந்தன.

ஒரு விபத்தில் ஏற்பட்ட அதிர்ச்சியால் உணர்வுகள் பிச கிய நிலையில் தூக்கத்தில் நடப்பவளைப் போன்று, ஓர் விபத் தாக நடந்து விட்ட அந்த கோர சம்பவம் என் உணர்ச்சிகளை மிருகத்தன்மையடையச் செய்து விட்டன. அவன் அறையை நோக்கி நானேநடந்தேன். அங்கே நான் மனித உருவமாகவா சென்றேன். இல்லை அத்தான் இல்லை. மிகுதியை நான் எழுதத்தான் வேண்டுமா?

நாளடைவில் என் மிருக உணர்வுகள் வளர்ந்து வெறி கொண்ட ஒரு பெரும் வலிமை மிக்க மிருகமாகவே மாறி விட்டன. என் மிருக உணர்வுக்குப் பலியானவர்களில் ஒரு வன் சுதாகர். அவன் மட்டுமல்ல, அருமைநாயகத்தின் தம்பி ஒருவன். இந் நிலையில் நான் உண்மையில் ஒரு மிருகமேயன்றி என் உள்ளத்தில் அவர்கள் மீது எதுவித பாசமும் இல்லை.

ஒரு நாள் உங்களை கோணேஸ்வரர் ஆலயத்தில் சந்தித் தேன். அன்று தொட்டு உங்களை எண்ணி ஏங்கத் தொடங்கி யது என் இதயம்.

சிறு வயது முதலே எதற்கும் ஏங்காத என் இதயம் உங்களைப் பார்த்த நாள் முதல் உங்களை எண்ணி உருகியது. உண்மையில் காதலின் மகத்தான சக்தியை நான் உணர்ந்தேன். உடற்கலப்பாலோ, உடல் உறவாலோ தான் காதல் ஏற்படுகின்றது என்பது வெறும் வெற்று வார்த்தைகள். உள்ளத்தின் உன்னதமான, பசுமையான உணர்வுகள் மின் அலைகளாக எழுந்து இணையும் ஒரு அற்புதமே காதல். உங்கள் நினைவே என்னுள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தது. தனிமையை விரும்பாத நான் தனியேயிருந்து ஏங்க ஆரம்பித்தேன்.

நீங்களும், புனிதமும் சேர்ந்து திரிவதைப் பார்த்திருக்கின்றேன். ஆனால் புனிதத்துக்கு திருமணம் நிட்சயமானதும் என் உள்ளத்தில் பூத்துக் குலுங்கிய நினைவைச் செயலாக்க ஒரே வழி ரியூசன் தான் என என் மனதில் எழுந்தது.

பின்பு நடந்ததை நீங்கள் அறிவீர்கள். உங்கள் வீட்டில் நீங்கள் சுகயீனமாயிருந்த போது வா ந்தி எடுத்தீர்களே; அன்று நடந்த நிகழ்ச்சி கூட உண்மையில் ஓர் தெய்வீகத்தால் கட்டுப்பட்டது போன்றிருந்தது. அப்படிப்பட்ட நான் அன்று நீங்கள் சுகயீனமாயிருந்த வேளையில் அந்த அயோக்கியனுடன்......எங்கள் வீட்டிலே......யே......அ த் தா ன் அன்றுதான் நீங்கள் என் கழுத்தில் அணிவித்திருந்த செயின் கூட அறுந்தது.

அவன் தான் எனக்கு கர்ப்பத்தடை வில்லைகளை வாங்கிக் கொடுத்தவன். அவன் இந்தப் பாவகாரியங்களைச் செய்பவன் என்றாலும், நானும் பயத்தின் காரணத்தால் யாவையும் ஒப்புக்கொண்டு நடந்து விட்டேன்.

இந்தக் கடிதம் உங்களிடம் கிடைக்கும் பொழுது என்னுடைய சாம்பல் கூட கரைக்கப்பட்டு விடும். இக் கடிதத்தை எழுதி அக்காளின் அறையில் வைத்து விட்டே நான் என் வாழ்க்கையின் கடைசி அத்தியாயத்தை முடித்துக்கொள்ளப்

போகின்றேன். அக்கா இக் கடித்தை உங்களுக்கு அனுப்பு வாள். அவளுக்கும் ஒரு கடிதம் எழுதி வைத்துள்ளேன்.

அத்தான் நீங்கள் கூறுவீர்களே அடிக்கடி அந்தக் கருத்து என் மூளையில் பதியாமல் போய்விடவில்லை. ஆனாலும்நான்... அதாவது......

கணவன் மனைவி என்ற உறவில் ஓர் ஆணையும் பெண்ணை யும் சமூகமும், உறவினரும் உற்றாரும் இணைத்து விடுகின்றார் கள் என்றால் அது வெறும் பிணைப்பு அல்ல. அவர்கள் தங்கள் வாழ்க்கை பூராவும் சேர்ந்து வாழ்கின்றார்கள் என்றால் அந்த உறவு தான் ஓர் தெய்வீக உறவு என்று சொல்ல வேண்டும்.

கணவன் மனைவியின் இந்த உறவில் தான் ஓர் புதிய ஜீவன் உதயமாகின்றது, உருவாகின்றது. படைப்பின் இரகசி யத்தை இறைவன் இப்படிச் செய்திருக்கிறான். உயிர் உள்ள மற்றும் படைப்புகளைவிட மனிதன் கட்டுப்பாடு, பண்பு, கண்ணியம் என்ற சில ஒழுங்கு முறைகளுக்குள் அடக்கப் பட்டு இருக்கின்றான். அவன் வாழ்வில் ஓர் முறையான வழி யில் சேர்ந்தே படைப்புக்குரிய ஆண்டவனின் கருவியாக மாறுகின்றான். இந்த அடிப்படையில் உருவாக்கப்பட்ட தெய்வீக உறவுதான் திருமணம். திருமணம் சொர்க்கத்தில் நிட்சயிக்கப்படுகின்றது என்று கூறுவதும் இக்காரணத்தால் தான்.

வெறும் மனித உணர்வுகளைத் திருப்திப்படுத்தி, அதில் மனிதர்கள் பெறும் ஆத்ம திருப்தி என்பது ஆண் பெண் இரு வரும் தம்மைத் தாமே வருத்திப் பெறும் ஒரு கற்பனைச் சுகம். செயல் முறையில் அவர்கள் தம்மைத் தாமே வருத்திக் கொள்கின்றார்களேயன்றி அதன் மூலம் பலனாக ஓர் குழந் தைக்கும் பெற்றோர் ஆகின்றனர். ஆனால் அதுவே அவர்கள் கொண்ட உறவுக்கு ஓர் பலன். வெறும் மனிதப் பிண்டங்கள் தம்மை தாமே வருத்தி சுகம் பெறுவதாக மட்டும் கற்பனை செய்து கொண்டு திருப்தியடைவதிலும், திருமணம் செய்து

கொள்ளாமலிருப்பது மேல்; என்று நீங்கள் ஓர் கட்டுரையில் எழுதியது என்னுள்ளத்தில் இப்போதும் நிற்கின்றதுதான்—.

ஆனால் மனித உணர்வுகள் பண்பாட்டை மீறி கிளர்ந்து எழும் பொழுதும் அவை ஆழ்கடலில் பிறக்கும் அலைகளாக வல்லவா பிறக்கின்றன. அவை தனக்கு எதிர்ப்பான ஒன்றில் மோதித்தானே தணிகின்றன. இயற்கையின் நியதியே இதுவானால் சாதாரண மனித உள்ளங்களால்...... நான் ஒரு பெண் இல்லை.

உண்மைக் காதல் என்றால் என்னவென்பதை அறியாதவளில்லை நான். நான் உங்களை வெறுத்தாலும், நீங்கள் என்னை வெறுத்தாலும் உங்களை என் மனம் விரும்பிக் கொண்டேயிருக்கின்றதே அந்த உன்னத உணர்வுதான் காதல் என்பதை நான் மறக்கவில்லை.

புனிதம் உங்களை விரும்பினார்கள். கடமைக்காக காதலை ஒதுக்கி முக்கிய இடம் கடமைக்கு அளித்தார்கள். நிட்சயம் செய்யப்பட்டவன் இறந்த பின்பும் தன் உள்ளத்தில் ஏற்றி வைத்த புனிதமான காதல் ஜோதியுடன் வாழ்கின்றாளே அவள் சாதாரண பெண்ணில்லை. ஓர் காவியக் கதாநாயகி. பெண் குலத்தின் பொன் விளக்கு. அவளே உங்களுக்கு சகலதிலும் தகுதியானவள்.

நாய்க்கு நடுக்கடலில் போனாலும் நக்குத் தண்ணிதான். என்னைப் பொறுத்தளவில் உண்மையாகிவிட்ட ஒன்று. வாழ்க்கை எல்லாருக்கும் நல்லபடியாக அமைந்து விடுவதில்லை. மனிதர்களும் எல்லோரும் நல்லபடியாக வாழ்ந்து விடுவதும் இல்லை. நான் உங்களோடு வாழும் பாக்கியம் பெற்றேன். ஆனால் அவ்வாழ்வு நிலைக்காமல் போய்விட்டதே. நான் அதிஷ்டமில்லாதவள். இளம் வயதிலேயே துரதிஷ்டம் பிடித்தவள். நான் இனி வாழ்ந்து பயனில்லை.

அத்தான், உங்கள் மனம் இருக்கே அது கோயிலில் இருக்கும் கர்ப்பக்கிருகம். அதை நான் உணராமல் இல்லை. கோயி

வில் நுழைந்தேன். புறஉலகில் நிகழும் களியாட்டம். கும் மாளம் எல்லாம் குழப்பம் நிறைந்தது என்பதையும் நான் உணராமல் இல்லை. இவை தந்த துன்பத்தை போக்கவே கோயில் என்னும் குடும்ப வாழ்வில் நுழைந்தேன். அங்கே நின்று கொண்டும் புற உலகக் கூச்சலில் தான் கவனத்தைச் செலுத்தி விட்டேன். இல்லையெனில் ஆறுதலளிக்கும் உங்கள் மனம் எனும் கர்ப்பக்கிருகத்துள் நுழைந்த பின்பும், தெய் வத்தை கண்ட பின்பும், பொய் வாழ்வை மனம் நாடியிருக் குமா? என்னை நான் அறியாத நிலையில் அப்படி நடந்து விட் டேன். இன்னும் சொல்லப் போனால் பிரகாரங்களை எல்லாம் தாண்டி கர்ப்பக்கிருகத்தினுள் வந்தால்தானே கடவுளைக் காண முடியும். அப்படிக் கர்ப்பக்கிருகத்துள் வந்தடைந்து விட்டதால் பெற்ற ஆனந்தம், ஆறுதல், நிம்மதி கூட என் விலங்கு உணர்ச்சியை பொசுக்கி எரித்து விடவில்லையே? அது ஏன் அத்தான்? எனக்கே அது புரியாத புதிராய் இருக்கின் றதே! உண்மையான ஆனந்தத்தை அளிக்கும் இடம் மனம் எனும் கர்ப்பக்கிருகம் தான். அதுவும் உங்கள் மனதில் முதல் இடம் பெற்ற 'புனிதம்' அவர்களுக்குத் தான் சொந்தம்!

அத்தான், பெண்மை எனும் தெய்வத்தை குடியிருத்த வேண்டிய உங்கள் மனம் எனும் கர்ப்பக்கிருகத்தில் பேய் புகுந்து, வெளியேறி விட்டதாகக் கருதி மறந்து விட்டு புனி தத்தை அங்கே வைத்து கும்பாபிஷேகம் செய்யுங்களத்தான். வசதியில்லாமல் பலர் நல்லவர்களாக வாழ்கின்றார்கள். அவர்கள் கூட வசதிகள் கிடைத்தால் கெட்டவர்களாக மாறி விடுவார்கள். ஆனால் போதிய வசதிகளிலிருந்தும் நல்ல வர்களாக வாழ்கின்றார்கள் சிலர். அவர்கள் தான் உண்மை யானவர்கள். அவர்களில் ஒருத்திதான் புனிதம். அந்த புனித தெய்வம் எனக்களித்த வாழ்வை அவளிடமே கொடுத்து விடு கின்றேன்......!

நீங்கள் இல்லாத உலகில் எனக்கு வாழ்ந்துதான் என்ன? வாழாவிட்டால் தான் என்ன? அத்தான் என்னை மன்னித்து

விடுங்கள். உங்களைக் கரம் கூப்பி வணங்கிக் கேட்டுக் கொள்கின்றேன். மன்னித்தேன் என்று ஒரு வார்த்தை சொன்னீர்களானால் தான் என் ஆத்மா அடுத்த பிறப்பிலாவது நல்ல வழி நின்று ஒழுகும்.

இங்ஙனம்,
கீதாஞ்சலி.

'கீதா! கீதா, உன்னை மன்னித்து விட்டேன். கீதா நீ..... நல்லவள். உன்னைக் கெடுத்தவன் அந்தச் சண்டாளன். தந்தைக்குத் தந்தையாய் இருக்க வேண்டியவன், தானே உன்னைப் பெண் ஆள நினைத்தது தவறு, பெருந் தவறு. ஆனால் தவறுக்கு மேல் தவறு ஆனாலும் உன்னை நான் மன்னிக்கின்றேன்' என்று அவன் வாய் விட்டே கூறிய பொழுது அவன் விழிகள் குளமாகி நா தழுதழுத்தது. கண்கள் இருண்டு கொண்டே வந்தன. அதே வேளையில் அவனுக்கு பின்புறமாக வந்து நின்றாள் புனிதம். அவளைக் கூட அவன் திரும்பிப் பார்க்கவில்லை.

## அத்தியாயம் (23)

விழிகளைக் கசக்கிவிட்டபடியே தள்ளாடிய பிரகாஷை பின்புறமாக நின்று தாங்கிக் கொண்டாள் புனிதம். அவளுடைய ஸ்பரிசம் பட்டதும் பிரகாஷ் உணர்வு வரப் பெற்றவனாய் நிமிர்ந்து நின்றான்.

'பிரகாஷ்' என்றாள் புனிதம்.

'புனிதம் இந்தக் கடிதத்தைப் பார்' என்றான்.

அவன் கொடுத்த கடிதத்தைப் படித்துவிட்டு கண்ணீர் சிந்தினாள் புனிதம். அவளுடைய உள்ளம் ஹோவெனக் கதறியதாயினும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

'அழுவதற்கென்றே பிறந்து விட்ட நான் அழும் பொழுது நீ எதற்காக அழுகின்ருய் புனிதம்' என்று கேட்டான்.

'பிரகாஷ். உங்களைப் போல மனிதர்கள் தான் எல்லோரும் என்று நினைத்திருந்தேன். இப்படிப்பட்ட கொடியவர்களும் இருக்கின்ருர்களே' என்ருள்.

'கீதா ஒருத்தியைத் தான் நாம் அறிந்தோம். கீதாவைப் போன்று எத்தனை கீதாக்கள் இப்படிக் கொடுஞ் செயலுக்கு ஆளாகித் தவிக்கின்றனரோ, யார் அறிவார். பாவம் கீதா' என்ருன்.

'பிரகாஷ். உண்மையில் கீதாவுக்காக நான் வருந்துகின்றேன். அவளை மன்னித்து விடுங்கள் பிரகாஷ்' என்ருள் புனிதம்.

'அவளை நான் ஏற்றிருப்பேன். நான் கேட்ட போதே உண்மை பேசியிருந்தால். அவள் தான்......'

'அண்ணு......புனிதத்துக்கு எழுதிய கடிதத்தில் கீதா என்ன எழுதியிருக்கின்ருள் தெரியுமா? அவள் ஆத்மா சாந்தியடைய அவள் கடைசிக் கோரிக்கையை நீங்கள் நிறைவேற்றுங்கள்' என்று கூறியவாறே அண்ணன் முன் வந்து நின்ருள் சுகுணு.

புனிதம் கண்களை இறுக மூடிக்கொண்டே மௌனமாய் நின்ருள். அவளை நிமிர்ந்து பார்த்த பிரகாஷ் மறுபுறம் திரும்பிக் கொண்டான்.

'என்னண்ணு' என்ருள் சுகுணு.

'சுகுணு கீதா இறந்து போனுள். அவள் கேட்டுக் கொண்டதற்காக புனிதத்தை களங்கப்படுத்த நான் தயாராய் இல்லை' என்று அவன் கூறிய போது புனிதம் ஹோவெனக் கதறி விட்டாள்.

பெண்மையின் அடக்கத்தை தவருக சிலர் எடைபோட்டு விடுவதுண்டு. நல்ல நோக்குள்ளவர்கள் நல்ல முறையிலும், தீய நோக்குள்ளவர்கள் தீய முறையிலும் இப்படிக் கணித்துக் கொள்வார்கள். மன இயல்பைப் பொறுத்தது தானே நடத்தையும், செயலும். புனிதத்தின் அடக்கத்தை அவள் கீதாவின் கோரிக்கையை ஏற்கமுடியாத நிலையில் இருக்கின்முன் என எண்ணி விட்டான் பிரகாஷ்.

'ஹோ' என்று கதறிய புனிதம் அவன் கால்களைப் பற்றிக் கொண்டாள். வெளியே நின்ற பாஸ்கர் சகுணவை வெளியே வரும்படி சைகை காட்டினுன்.

'புனிதம் நான் ஒரு போதும் உன் விருப்பத்துக்கு மாருக நடப்பவனில்லை. கீதா அப்படி எழுதி விட்டாளே என்பதற்காக அப்படி ஒரு நினைவை, ஆசையை என் மனதில் நான் வளர்த்துக் கொள்ளவில்லை. கருகி விட்ட மரம் நான். என் இதயத்தில் அப்படியான ஒரு ஆசை துளிர்விடும் என நீ நினைக்கின்ருயா?

'பிரகாஷ். நான் உங்களை அன்று விரும்பினேன், இன்றும் விரும்புகின்றேன். கடமைக்காக பெற்றவளின் விருப்பத்தை நிறைவேற்றுவதாக எண்ணி உங்கள் வேண்டுகோளை நிராகரித்தேன் ஆனல்...... என் தவறு எனக்கே புரிந்து விட்டது. நீங்களும் நானும் இணைந்து வாழவேண்டும் என்பதற்காகவே கடவுள் இவ்வளவையும் செய்திருக்கின்ருன். என்னை நீங்கள் புனிதமானவளாகக் கருதினுல் என்னை நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள்' என்ருள் புனிதம்.

'புனிதம்' என்ருனே தவிர அவனுல் எதுவுமே பேச முடியவில்லை-

வான வீதியில் பறப்பது போன்று ஓர் அற்புத உணர்வு அவன் உள்ளத்தில் தோன்றிற்று. புனிதத்தை தூக்கி மார்புடன் தழுவிக் கொண்டான்.

'புனிதம்' என்றான் மீண்டும்.

'என்னத்தான்'

'என் இதயம்......'

புனிதமானது. பவித்திரமானது. கற்பக்கிருகம் போன்றது. அதற்கென்று பிரதிஷ்டை செய்த விக்கிரகத்தினுள்ளே கல்லுக்குள் தேரை இருந்து விட்டது.

'ஆகவே இந்த விக்கிரகத்தை வைக்க முயன்றாயா? இந்தப் புனித விக்கிரகத்தை வைக்கும் தகுதி என் இதயத்துக்கு உண்டா?' கண்களில் நீர் மல்கக் கேட்டான் பிரகாஷ்.

'பிரகாஷ். நான் தான் கூறிவிட்டேன். இது கற்பக் கிருகம் என்று. இங்கே குடிகொள்ளும் நானல்லவா பாக்கியசாலி என்று தன்வதனத்தை அவன் மார்புடன் அழுத்தினாள். அவள் ரோஜா இதழ்கள் அவன் இதயமலரோடு இணைந்து இன்ப நாதமெழுப்பியது. அடக்கத்திலிருந்த விக்கிரகத்துக்கு அருள் கொடுக்கும் சக்தி வந்து விட்ட காரணத்தினாலோ என்னவோ புனிதத்திற்கு பெண்மையின் புனித உணர்வுகள் அத்தனையும் ஒருங்கு சேர்ந்து அவனை இன்ப நீராட்டி விட்டதால் மயங்கி கிடந்தாள்.

'புனிதம்! புனிதம்; உன்னைத் தழுவியதால் நான் கூட புனிதமாகி விட்டேன். விதி எங்களை கூட்டி வைக்க கங்கணம் கட்டியிருந்தது நாம் அதை வென்று விடலாம் எனத்தான் நினைத்து வேறு வழி சென்றோம். ஆனால் விதி வென்றுவிட்டது

'திருமணம் சொர்க்கத்தில் நிட்சயிக்கப்படுவது என்பது வேதவாக்காயினும் உண்மையில் திருமணம் ஓர் தெய்வீக உறவுதான். இல்லையெனில் எங்கெங்கோ சென்று எங்களை கடவுள் இப்படி இணைப்பாரா? என்றாள் அவன் மார்பில் மயங்கிக் கிடந்த புனிதம்.

'டேய் கிருபா. உன் அத்தையையும், மாமாவையும் விரைவில் ஒரு பெண்ணு பெற்றுத்தரும்படி கேளடா' என்று கூறிக்கொண்டே உள்ளே வந்தாள் சுகுணா.

புனிதத்தின் சிவந்த உடல் நாணத்தால் மேலும் சிவந்து செந்தணல் போல ஜொலிப்பதைப் பார்த்து புன்முறுவல் பூத்தான் பிரகாஷ்.

உச்சிக் காலப் பூசைக்காக கோவில் மணி முழங்கிற்று. அந்த மணியோசையின் இனிய நாதம் அந்த வீட்டில் உள்ள வர்கள் மனதிலும் இனிய நாதத்தை எழச் செய்த பெருமை பெற்று விளங்கி ஒலித்துக் கொண்டேயிருந்தது.

நிறைவு.

# எமது அடுத்த வெளியீடு !

"இது ஒரு அதீத கற்பனைக் கதை. நடக்க முடியாததை நடப்பதாகக் கூறும் கதை. ஆனால், இக் கதையின் ஊடே, நமது சமூகத்தின் அவலங்களை மெல்லிய இழையாக ஓட விட்டிருக்கிறேன்."

"செங்கை ஆழியான்"

ஈழத்தின் பிரபல
நாவலாசிரியர்களுள்
ஒருவரான
'செங்கை ஆழியான்'
தரும்
நகைச்சுவை
நவீனம்

.........?

இது ஒரு மாணிக்கப் பிரசுரம்

வாசித்துவிட்டீர்கள்ளா ?

# நீலமாளிகை

சிவம் பொன்னையா

விறுவிறுப்பும் சுவையும் கொண்ட நவீனம்.

படித்தவர்கள் பல்லாயிரக் கணக்கானோர். பாராட்டுக் களும் மிகப் பல.

மாணிக்கம் விற்பனையாளர்களிடம் பெற்றுக் கொள்ள லாம். பெற முடியாதவர்கள் உரிய செலவுடன் எமக்கு எழு துங்கள்.

குறிப்பிட்ட பிரதிகளே கைவசமுண்டு.

விலை 1|90 இது ஒரு மாணிக்கப் பிரசுரம்.

# 'கர்ப்பக் கிருகம்' விமர்சனப் போட்டி

# பரிசு: ரூபா 50/-

வாசகர்களுக்கு உற்சாகமளிக்கும் வகையில் 'மாணிக்கப் பிரசுரம்' அவ்வப்போது பல பரிசுப் போட்டிகளை நடாத்தி வருவதை வாசகர்கள் அறிவார்கள்.

கர்ப்பக் கிருகம் விமர்சனத்திற்காகவும் வாசகர்களுக்கு ஒரு பரிசு காத்திருக்கிறது,

''கண்ணகியையும், மாதவியையும் ஒரே காவியத்தில் இரு பாத்திரங்களாக வடித்தார் இளங்கோவடிகள். அவர்களிருவரையும் ஒரே பாத்திரமாக்கி அன்புருவாயும் – அசுர உணர்வாயும் கீதாஞ்சலியாக்கி 'கர்ப்பக் கிருகம்' உருவாக்கினேன் என்கிறார் இதன் ஆசிரியர் திரு. கே. எஸ். ஆனந்தன்.

அவரது லட்சியப் பாத்திரமான கீதாஞ்சலியை உங்கள் பாணியில் புதுமையான கண்ணோட்டத்தில் விமர்சனம் செய்து அனுப்புங்கள்,

சிறந்த விமர்சனத்திற்கு ரூபா 50 பரிசாக அளிக்கப்படும். ஒன்றுக்கு மேற்பட்ட சிறந்த விமர்சனங்கள் கிடைக்குமாகில் பரிசு பகிர்ந்தளிக்கப்படும்

கீழே கொடுக்கப்படும் படிவத்தைப் பூர்த்தி செய்து விமர்சனத்துடன் அனுப்ப வேண்டும்.

ஒருவர் எத்தனை விமர்சனங்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம். ஒவ்வொரு விமர்சனத்துடனும் ஒவ்வொரு படிவம் இணைக்கப்பட வேண்டும். படிவம் இணைக்கப்படாத விமர்சனங்கள் நிராகரிக்கப்படும்.

விமர்சனம் மாணிக்கம் மாத இதழில் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாததாக அமைய வேண்டும்,

அனுப்ப வேண்டிய முகவரி:-

'கர்ப்பக் கிருகம்' விமர்சனப் போட்டி
மே/பா, மாணிக்கப் பிரசுரம்
29, கல்யாணி வீதி,
கொழும்பு-6.

——————— இங்கே வெட்டவும் ———————


## 'கர்ப்பக் கிருகம்' விமர்சனப் போட்டிப்படிவம்

பெயர்..........................................................

விலாசம்......................................................

..............................................................

# கர்ப்பக் இருகத்தின் சிற்பி இவர்.



ஜனரஞ்சகமான படைப்புகளை வாசகர்களுக்கு அளித்து வரும் ஒரு எழுத்தாளரை நாம் அறிமுகம் செய்து வைப்பது அவசியமற்றது.

எனினும் சாதாரண வாசகர்களின் ரசனைக்கே பெரும் மதிப்பை அளித்து வரும் திரு. கே. எஸ். ஆனந்தனை நாம் பாராட்ட முயற்சி செய்வதும், கௌரவிப்பதும் நமது கடமையாகிறது.

யாழ்ப்பாணம் இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர் இவர் விவசாயம் இவரது பொழுது போக்காகவும் தொழிலாகவும் அமைந்துள்ளது.

இவருடைய ''தீக்குள் விரலை வைத்தால்'' ''மர்மப் பெண்'' போன்ற நவீனங்களை வாசகர்களால் என்றுமே மறக்க முடியாது.

வாசகர்கள் நெஞ்சில் நிரந்தர இடத்தைப் பெற்று விட்ட திரு. கே. எஸ். ஆனந்தனின் புரட்சிகர நாவலான 'கர்ப்பக் இருகத்'தை நமது இரண்டாவது படைப்பாக வெளியிடுவதில் நாம் பெருமகிழ்வடைகிறோம்.

சுதந்திரனில் இது தொடர்கதையாக வந்த போது வாசகர்கள் அளித்த வரவேற்பு இன்று இதனை முழு நவீனமாக வெளியிட வைத்திருக்கிறது. இதனை வரவேற்பது வாசகர்கள் கடமையாகிறது.

---

மாணிக்கப் பிரசுரம்
29. கல்யாணி வீதி கொழும்பு.6